உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

யாழ்ப்பாணத்து நல்லூர்ச்

சின்னத்தம்பிப் புலவரியற்றிய

கல்வளையந்தாதி

மூலமும்,

பழைய உரையும்.

இவை

சென்னைக் கிறிஸ்தியன் காலேஜ்

தமிழ்ப் போதகாசிரியர்

S. அனவரதவிநாயகம்பிள்ளை, M. A., L. T.,

அவர்களால் பரிசோதிக்கப்பட்டு,

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டன.

1913

விலை அணா 5.

[Copyright Registered.]

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

யாழ்ப்பாணத்து நல்லூர்ச்

சின்னத்தம்பிப் புலவரியற்றிய

கல்வளையந்தாதி

மூலமும்,

பழைய உரையும்.

இவை

சென்னைக் கிறிஸ்தியன் காலேஜ்

தமிழ்ப்போதகாசிரியர்

S. அனவரதவிநாயகம்பிள்ளை, M. A., L. T.,

அவர்களால் பரிசோதிக்கப்பட்டு,

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டன.

1913

விலை அணா 5.

[Copyright Registered.]

முன்னுரை.

தமிழாசிரியர்மாட்டு வான்முறையாகத் தமிழ் கற்கப் புகும் மாணவர் முதலாகக் கற்கத் தருவனவாயும் அவர்களாற் கற்கப்படுவனவாயு முள்ள நூல்களு ளொன்ருய மறைசையந் தாதி இலங்கைத்தீவில் யாழ்ப்பாணத்திற் றிகழ்ந்த சின்னத் தம்பிப் புலவரால் இயற்றப்பட்டது. அவர் சரித்திர முதலிய வற்றை யறிதற்கு ஆதாரங்கள் இந்தியாவில் சிறிதுமில்லை. இதுவரை வெளிவந்த மறைசையந்தாதிப் பதிப்புக்களும் இவ் விஷயத்தில் மௌனமே சாதித்தன. யாழ்ப்பாணத்து அ. சதாசிவம்பிள்ளை யென்பவர் எழுதி வெளிப்படுத்திய பாவலர் சரித்திரதீபகம் என்னும் நூல், தமிழ் நூல்கள் செய்தருளிய புலவர்கள் சரித்திரத்தை அகராதிமுறையால் விளக்குவது, யாழ்ப்பாணத்துப்புலவர்கள் சரித்திரங்களைக்கொஞ்சம் விசேஷ மாக எடுத்துரைக்கின்றது. அதிற்கண்டபடி: "யாழ்ப்பாணப் புலவருக்குள்ளே திலதம்போல் விளங்கிய இவர், நல்லூரில் இருந்தவரும், இற்றைக்கு (1886) முன்பின் கஅ0வருஷங்களின் முன்னே இலங்காதிபதியாய் இருந்த சைமொன்ஸ் என்னும் உலாந்தா மன்னனுற் சேர்க்கப்பட்ட தேசவளமை என்னும் யாழ்ப்பாண நியாயப் பிரமாணத்தைப் பரிசோதனை பண்ணித் திருத்தும் பொருட்டு நியோகிக்கப்பட்ட பல பிரபுக்களுள் ஒருவருமாகிய வில்லவராய முதலியாரது புத்திரர். இப்புலவர் பாலியப் பிராயத்தே பாடும் வரம் பெற்றிருந்தார் என்று சொல்லுவர். வடகரை வித்துவான் ஒருவர் முதலியார்மேற்

பிரபந்தம் ஒன்று பாடிக்கொண்டு அவர் உறைவிடந் தேடிவந்து விசாரணை செய்தபோது, தெருவிற் பிள்ளைகளோடு பாக்குக் கட்டி விளையாடிக்கொண்டு நின்ற இப்பாலியப் புலவர் :

"பொன்பூச் சொரியும் பொலிந்தசெழுந் தாதிறைக்கும்
நன்பூதலத் தோர்க்கு நன்னிழலா—மின்பிரபை
வீசுபுகழ் நல்லூரான் வில்லவரா யன்கனக
வாசலிடைக் கொன்றை மரம்"

என்று தம் பிதா வீட்டுக்குக் குறிப்புச் சொற்றனராம். இவர் பாடிய அந்தாதிகள் இரண்டுள. ஒன்று மறைசையந்தாதி எனப் பேர்பெறும். நூறு செய்யுட்கொண்ட இது வேதாரணிய ஈசன்மேலது.

"சேந்தா தியன்மணிப் பூண்புலி யூரற்குச் சேர்ந்தளித்த
சிந்தாத் தியானஞ்செய் வில்லவ ராசன் றிருப்புதல்வன்
நந்தா வளந்திகழ் நல்லைச்சின் னத்தம்பி நாவலன்சீர்
அந்தாதி மாலையை வேதாட வீசற் கணிந்தனனே"

என்றதனால் அவ் வந்தாதிக்கு இவர் ஆக்கியோன் எனல் விளங்கும். மற்றது கல்வளை அந்தாதி. இது சண்டிருப்பாயிலுள்ள கல்வளைப் பிள்ளையார் மேலது. முந்தினதில் நின்று சற்றே கருகல் கொண்டது.

* * * * *

இவ்விரண்டு அந்தாதிகளுள் மறைசை அந்தாதிக்கு உடுப்பிட்டி, ஈ. ஈ. அ. சிவசம்புப் புலவர் உரை இயற்றி அச்சிடுவித்திருக்கிறார். இந்த உரை நயப்பையும் வியப்பையும் "உதயதாரகைப்" பத்திரிகையிற் பேசி இருக்கிறோம்.

ஒருமுறை யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையிற் கணே சையர் வீட்டில் அநேக வித்துவசனர் சபைகூடி இராமாயணத் துக்கு அர்த்தம் பண்ணிக்கொண்டிருக்குஞ் சமயம், அவர் சொல்லமுடியாது மலைத்த ஓர் பாட்டிற்கு இளைஞராதலில் ஓர் கோணத்தில் உளுக்கார்ந்திருந்த இப்புலவர் அர்த்தஞ்சொன்ன திறமைக்காக மகாகனவானான அவ் ஐயர் பண்டாரக்குளம் என்னும் ஓர் வயலை இவர்க்கு வெகுமதி கொடுத்தனர். சின் னத்தம்பிப் புலவர் என்ற சொற்பொருட்படி சின்னப் பைய லாய் இருந்தபோதே சரஸ்வதியின் கடாட்சவீட்சணம் இவரு க்கு அகப்பட்டது என்றதற்குப் பின்வருங்கதை சாட்சியாகும்.

இவர் சிறுமையிலே பாடசாலைக்குச் செல்லாது கல்வியை அசட்டைசெய்து மாடுமேய்க்கும் பிள்ளைகளோடு விளையாடித் திரிபவராதலிற் றந்தையார் இவரைக் கண்டிக்க, இவர் அவர் கண்ணுக்குத் தென்படாது ஒளித்துப்போய்த் தாயாரிடம் அன்னம் வாங்கியுண்டு கட்டாக்காலிபோல் மறுபடி பாய்ந்து விடல் வழக்கம். இப்படித் திரியும்போது ஓர் நாள் வழக்கம் போலப் பிதா இல்லாத நேரம் வீட்டுக்கு வந்து போசனம் உண்டு, அவர் முதல் அடி எடுத்து எழுதி வைத்துவிட்டுப் போன ஓர் அந்தாதிப் பாட்டை இறப்பி லிருக்கக் கண்டு எடு த்து, அதின் உ-ம் ௩-ம் ௪-ம் அடிகளை எழுதி வைத்துத் தன் பாட்டிற் போயினராம். பிதா வீட்டுக்கு வந்து முன் தொடங்கி விட்டுப்போன பாட்டை முடிக்கும்படி ஓலையைத் தேடி எடுத் துப் பாட்டு முடிந்திருக்கக் கண்டு, இங்கே வந்துபோனது யாரென்று மனைவியிடம் கேட்க, அவள் அச்சங்கொண்டு மறை

த்தும், பின் நாயகன் நெருக்கத்தால் அந்தப் பேய்ப்பையல் தான் உங்கே வந்தானென்று கூறப், பிதா மகிழ்ந்து இவரைத் தேடி அழைத்து நேசம் பாராட்ட, அப்புறம் இவர் அந்தாதி பாடி முடித்தனர் என்ப. இவரது சுற்றத்தார் நல்லூரிலும் சண்டிருப்பாயிலும் இருக்கிறார்கள். மானிப்பாய் அச்சியந்திர சாலைத் தலைவருள் ஒருவரான ஈ. ஈ. அ. சிற்றம்பலம் என்பவரும் இப்புலவர் வமிசத்தவரே.”

நெடுநாள் முன்னர் இக் கல்வளையந்தாதி உரையோடு பிரசுரஞ் செய்யப்பட்டது. அஃது இக்காலத்து அருகி வழங்குதலானும், தமிழ் கற்கும் மாணவர்க்கு உரையோடு கூடிய கல்வளையந்தாதிப் பதிப்பொன்று அவசியமா யிருத்தலானும் இது பிரசுரிக்கப்பட்டது.

S. A. P.

செம்பொற் குவட்டினிற் பாரதந் தீட்டிய கோட்டினன்சீர்க்
கம்பக் கரிமுகன் கல்வளை வாழுங் கணபதிக்கு
நம்பற் கினியமுற் சங்கத்து நூலென நல்லைச்சின்னத்
தம்பிப் புலவனல் லந்தாதி மாலையைச் சாற்றினனே.

உ

சிவமயம்.

கல்வளையந்தாதி

மூலமும் உரையும்.

காப்பு

தார்கொண்ட பூமல் லிகைச்சேக்கை யிற்றும்பி சாலப்பம்புஞ்
சீர்கொண்ட கல்வளை யந்தாதி பாடத் திரைக்கடல்சூழ்
பார்கொண்ட பல்லுயிர்க் கானந்த மும்மதம் பாயுங்கும்பக்
கார்கொண்ட கம்பக் களியானை முன்னின்று காப்பதுவே.

(இதன்பொருள்.) தார்கொண்ட பூமல்லிகைச் சேக்கையில்-மலர்களைக்கொண்ட அழகாகிய மல்லிகைப் படுக்கைகளில், தும்பி சாலப் பம்பும் சீர்கொண்ட-வண்டுகள் மிக வொலிக்கும் அழகைக்கொண்ட, கல்வளை அந்தாதி பாட - கல்வளை அந்தாதியை (யான்) பாட, (அதற்கு இடையூறு வாராமல்) முன் நின்று காப்பது-முன்னின்று காப்பது, திரைக்கடல் சூழ் பார் கொண்ட பல் உயிர்க்கு - திரையையுடைய கடலாற் சூழப்பட்ட பூமி (தன்கட்) கொண்ட பலவகையாகிய உயிர்களுக்கும், ஆனந்த மும்மதம் பாயும் - ஆனந்தத்தைச் செய்வதாகிய (அருள்) மும்மதம் பாயப்பெறும், கார்கொண்ட கும்பம் - அழகைக் கொண்ட மத்தகத்தினையும், களி - களிப்பினையு முடைய, கம்ப யானையே - தூணிற் கட்டப்படும் யானையாகிய விநாயகக் கடவுளே.

(குறிப்புரை.) முற்றும்மை விகாரத்தாற் றொக்கது. ஆனந்தத்தைச்செய்வதை ஆனந்தமென்று காரணத்தைக் காரியமாக வுபசரித்தார். ஆனந்தமென்றதனால் அருள் வருவிக்கப்பட்டது. பாயும் யானையென முடிக்க. யானையென்று உபசரித்ததற் கேற்பக் கம்பத்திற் கட்டப்படுதல் கூறப்பட்டது. அடியாருடைய உள்ளமாகிய கம்பத்திற் கட்டப்படுதல் குறிக்கப்பட்டதெனினு மமையும். ஈற்றேகாரம் பிரித்துக் கூட்டப்பட்டது.

ஒன்று யிருசுடர் முத்தொழி னான்மறை யோதுமைந்தாய்
நன்றாய வாறங்கம் யாவுக்குங் காரண நாதனுமாய்
நின்றாய்நின் கல்வளை யந்தாதிபாடவென் னெஞ்சகத்துப்
பொன்றா வருள்புரி வாயானை மாமுகப் புங்கவனே.

(இ-ள்) ஒன்றாய் - ஏகவஸ்து வாகியும், இருசுடர் (ஆய்)-(சூரிய சந்திரராகிய) இருசுடர் ஆகியும், முத்தொழில் (ஆய்) - (சிருட்டி திதி சங்காரமென்னும்) முத்தொழிலை யுடைய மும் மூர்த்திகள் ஆகியும், நான்மறை (ஆய்) - நான்குவேதங்கள் ஆகியும், ஓதும் ஐந்து ஆய் - சொல்லப்படுகின்ற பஞ்சபூதங்கள் ஆகியும், நன்று ஆய ஆறு அங்கம் (ஆய்) - நன்மை ஆகிய ஆறு வேதாங்கம் ஆகியும், யாவுக்கும் காரண நாதனும் ஆய் - (மற்றுமுள்ள) யாவற்றுக்கும் காரண கடவுள் ஆகியும், நின்றாய் - நின்றவனே, மா யானை முகப் புங்கவனே - பெருமையாகிய யானைமுகக் கடவுளே, நின் கல்வளை அந்தாதி பாட-நுமது கல்வளைப் பதியைப் புகழும் (யமக) அந்தாதியை (யான்) பாட, என் நெஞ்சத்துப் பொன்றா அருள் புரிவாய் - எனது நெஞ்சினுள் அழியாத அருளினைத் தந்தருள்வீர்.

(கு-ரை) ஒன்று, ஐந்து, முத்தொழில்: ஆகுபெயர்கள்.

நூல்

கற்பக நாடர் பதின்சதக் கண்ணனெண் கண்ணன்றொழுங்
கற்பக வஞ்சி யிடக்கண்ணன் றந்தமுக் கண்ணனன்றிற்
கற்பக வேலெறி வேடணை வன்கல் வளைப்பதிவாழ்
கற்பக நன்னிழல் சேர்ந்தார் கருக்கரை கண்டவரே.

(இ-ள்) கற்பக நாடர் - கற்பக விருக்ஷத்தையுடைய விண்ணுட ராகிய தேவரும், பதின்சதக் கண்ணன் - ஆயிரங்கண்ணனாகிய இந்திரனும், எண் கண்ணன் - பிரமதேவனும், தொழும் - வணங்கும், கற்பு அக வஞ்சி இடக்கண்ணன் தந்த முக்கண்ணன் - கற்பையுடைய திருவுள்ளத்தையுடைய வஞ்சிக்கொம்பு போலும் உமாதேவியாரை வாமபாகத்தில் உடையராகிய சிவபெருமான்பெற்றருளிய முக்கண்ணரும், அன்றில் கல் பக வேல் எறி வேள் துணைவன் - அன்றிற் பறவையின் பெயராகிய கிரௌஞ்சம் என்னும் பெயரையுடைய மலைபிளக்க வேலாயுதத்தை எறிந்த முருகக்கடவுளது துணைவருமாகிய, கல்வளைப்பதி வாழ் கற்பக நல் நிழல் சேர்ந்தார் கரு கரை கண்டவரே - கல்வளைப்பதியில் வாழ்கின்ற கற்பக விநாயகரது நல்ல திருவடி நிழலைச் சேர்ந்தவர் பிறவி (வெய்யிலின்) எல்லையைக் கண்டவரே (ஆவார்).

(கு-ரை) அன்றிற்கல் ஓர் குறிப்புமொழி.

கண்டலம் போதைப் புளினமென் றோர்ந்துகங் கம்பதுங்கிக்
கண்ட லமர்ந்து சிறகாற்றுங் கல்வளைக் கற்பகநின்
கண்டல மூன்று மெனையாள்பொற் பாதமுங் காணவிண்ணு
கண்டலன் போற்கண் படைத்திலன் வாசக் கமலத்தனே.

(இ-ள்.) கங்கம் கண்டலம்போதை புள் இனம் என்று ஓர்ந்து - பருந்து தாழம்பூக்களைத் (தான் பக்ஷித்தற்கு ஆகும்) பறவை இனம் என்று கருதி, (அவற்றைக் கவரவென்று) கண்டல் பதுங்கி அமர்ந்து சிறகு ஆற்றும் - கண்டல் மரத்திற் பதுங்கி இருந்து சிறகை ஆற்றப்

பெறும், கல்வளைக் கற்பக - கல்வளைப் பதியில்வாழுங் கற்பக விநாயகரே, நின் கண்டலம் மூன்றும் - நமது கண்கள் மூன்றையும், எனை ஆள் பொன் பாதமும் காண-என்னையாண்டருளுகின்ற பொன்போலுந் திருவடியையும் (யான்) காண, வாசக்கமலத்தன்-நறு நாற்றத்தையுடைய அம்புயாசனத்தன், விண் ஆகண்டலன் கண்போல் - விண்ணுலகத்திலுள்ள இந்திரனுடைய ஆயிரங் கண்கள்போல, படைத்திலன் - (எனக்கும் ஆயிரங் கண்களைப்) படைத்திலன்.

(கு-ரை.) புள்ளினத்தில் ளகரம் தொகுத்தது. கண்டலமார்ந்து என்று பாடமாயின், கங்கம் கண்டலம் போதை கண்டு புள் இனம் என்று ஓர்ந்து பதுங்கி அலமார்ந்து என்றியைத்துப் பொருளுரைக்க.

கவானரம் பையஞ் சுரும்பு விரும்பு கருங்குழற்போ
கவானரம் பைக்குலம் போற்றிட வாழ்தல்கண் ணேனினிச்சங்
கவானரம் பைங்கத லிக்கனி சிந்திடுங் கல்வளைப்புங்
கவாநரம் பைத்திகழ் யாழ்க்கூற் றுமையருள் காதலனே.

(இ-ள்.) சங்க வானரம் பைங்கதலிக் கனி சிந்திடும் கல்வளைப் புங்கவா-கூட்டமாகிய குரங்குகள் செவ்வியாகிய வாழைப்பழங்களைச் சிந்துகின்ற கல்வளைப் பதியி லெழுந்தருளி யிருக்கின்ற தேவரே, நரம்பு திகழ் யாழ் கூற்று உமை அருள் காதலனே - நரம்புகள் விளங்குகின்ற யாழிசைபோலும் மொழியினையுடைய உமாதேவியார் பெற்றருளிய புத்திரரே, கவான் அரம்பை - தொடையாகிய வாழைத்தண்டையும், சுரும்பு விரும்பு அம் கரும் குழல் - வண்டுகள் விரும்புகின்ற அழகிய கருமையாகிய கூந்தலையுமுடைய, அரம்பை குலம் போற்றிட - தேவஸ்திரீகள் கூட்டம் துதிசெய்ய, போக வான் வாழ்தல் - போக நிலமாகிய விண்ணுலகத்தில் வாழ்தலையும், இனி கண்ணேன் - இனி (பெரும்பேறெனக்) கருதேன் (நும்முடைய திருவடியின் கீழிருத்தலைத் தந்தருள்வீர்).

(கு-ரை.) அரம்பை, போகம், யாழ்: ஆகுபெயர்கள். உயர்வு சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. ஐ சாரியை. (௩)

அருளத்த னந்து சிலைகதை வாள்சுட ராழிகொள்ளை
யருளத்த னந்தந் தெரியா வகைநிற்கு மைம்முகனீன்
றருளத்த னந்த வனஞ்சூழுங் கல்வளை யண்ணலடி
யருளத்த னந்தரம் வாழ்வானென் றால்வினை யஞ்சிடுமே.

(இ-ள்.) அருள் அத்தன் - அருள் (வடிவாகிய உமாதேவியை வாம) பாகத்திலுடையவரும், நந்து சிலை கதை வாள் சுடர் ஆழிகொள் ஐயர் உள-சங்கு வில் தண்டு வாள் சுடரையுடைய சக்கரமாகிய பஞ்சாயுதங்களைக்கொண்ட விஷ்ணுமூர்த்தி கருதித்தேடவும், (அவருக்கு) தன் அந்தம் தெரியா வகை நிற்கும் ஐம்முகன் ஈன்றருள் அத்தன் - தமது (அடியாகிய) முடிவு தெரியப்படாதவகை நின்றருளிய ஐம்முகக் கடவுளுமாகிய சிவபெருமான் பெற்றருளிய கடவுள், நந்தவனம் சூழும் கல்வளை அண்ணல் - பூந்தோட்டஞ் சூழப்பெற்ற கல்வளைப் பதியில் வாழும் பெருமையிற் சிறந்தவர், அடியர் உளத்து அனந்தரம் வாழ்வான்- அடியாருடைய நெஞ்சத்தி லெப்போதும் வாழ்பவர், என்றால்-என்று துதித்தால், (அங்ஙன மவ்விநாயகக் கடவுளைத் துதிப்பவரைச் சார்ந்திருத்தற்கு) வினை அஞ்சிடும் - வினைக ளஞ்சும்.

(கு-ரை.) தன்னந்தம் என்பதில் னகரந்தொகுத்தது. நந்தனவனம் என்பதில் னகரங் குறைந்தது. (௫)

அஞ்சத் திரத்தன் முழுவென வேகொதித் தார்த்துரப்பி
யஞ்சத் திரத்தந் தகன்வரும் போதுன் னபயநடை
யஞ்சத் திரத்த வடிவா ணயனத் தமலைபெற்ற
வஞ்சத் திரத்தன் றுணைவாதென் கல்வளை யானந்தனே.

(இ-ள்.) அஞ்சத்து நடை - அன்னத்தினது நடைபோலு நடையினையும், இரத்த வடிவாள் நயனத்து - இரத்தத்தைக்கொண்ட கூர்மையாகிய வாள்போலுங் கண்ணிணையு முடைய, அமலை பெற்ற-உமாதேவியார் பெற்றருளிய, அம் சத்திரத்தன் துணைவா - அழகிய வேற்படையையுடையராகிய முருகக்கடவுளது துணைவரே, தென் கல்வளை

ஆனந்தனே-அழகாகிய கல்வளைப் பதியில் வாழு மானந்த குணமுடையவரே, திரத்து அந்தகன் - வலியினையுடைய கூற்றுவன், அஞ்சு அத்திரத்தன் முழவு எனவே கொதித்து ஆர்த்து உரப்பி - பஞ்ச (புஷ்ப) பாணங்களையுடையனாகிய மன்மதனது முழவப்பறைபோலவே வெகுண்டார்த்துரப்பி, அஞ்ச வரும்போது-அஞ்சும்படி வரும்போது, உன் அபயம் - (யான்) நுமக்கடைக்கலம்.

(கு-ரை.) ஏகாரம், தேற்றப்பொருட்டு. (ரு)

தனந்தனந் தந்தி மருப்பன்ன மாதர் தரைவிரும்பு
தனந்தநந் தந்திகழ் தண்டுறை தோறுமென் சஞ்சரிகந்
தனந்தனந் தந்திமி யென்கல் வளையன் சங்கக்குழைக்கா
தனந்தனந் தந்தமொன் றனென்று நெஞ்சந் தனிலுன்னுமே.

(இ-ள்.) தனம் - பொன்னையும், தந்தி மருப்பு அன்ன தனம் மாதர் - யானைக்கொம்பை நிகர்த்த முலையையுடைய பெண்ணையும், தரை-மண்ணையும், விரும்புதல் நந்த - விரும்புதல்கெட, நந்தம் திகழ் தண் துறை தோறும் - சங்குகள் விளங்குகின்ற குளிர்மையாகிய நீர்த்துறைதோறும், மெல் சஞ்சரிகம் தனந்தனந் தந்திமியென் கல்வளையன் - மென்மையாகிய வண்டுகள் தனந்தனந் தந்திமியென் றொலிக்கப்படுங் கல்வளைப் பதியையுடையவர், சங்கம் குழை காதன் நந்தன் - சங்கக்குண்டலத்தை யணிந்த திருச்செவியினையுடையராகிய சிவபெருமானுடைய புத்திரர், அம் தந்தம் ஒன்றன்-அழகிய கொம்பொன்றையுடையவர், என்று நெஞ்சந்தனில் உன்னும் - என்று (விக்கினேசுவரரை) மனத்தி னினையுங்கள் (சகத்தீரே).

(கு-ரை.) நந்தனன் என்பதில் னகரந்தொகுத்தது. (சு)

சந்தன மின்னுபொற் கச்சணி பாரத் தனதடம்ப
சந்தன மின்னிடைப் பூவஞ்சிக் கொம்பனை தையலுட்க
சந்தன மின்னனுற் றுள்கல் வளையன் றனதிடம்போஞ்
சந்தன மின்னம் வரக்கண்டி லேமென்ன தாமதமே.

(இ-ள்.) மின் அன இடை வஞ்சி பூ கொம்பு அன தையல் - மின்னலை நிகர்த்த இடையினையுடைய வஞ்சிப் பூங்கொம்பை யொத்த தலைவியானவள், சந்தனம் மின்னு பொன் கச்சு அணி பாரம் தன தடம் பசந்து - சந்தனத்தையுடைய விளங்குகின்ற பொற்கச்சணியப்பட்ட பாரமாகிய தனதடம் பசலையுற, அனம் உள் கசந்து - அன்னத்தை யுள் வெறுத்து, இன்னல் உற்றாள் - துன்பமுற்றாள், கல்வளையன் றனது இடம் சந்து போம் அனம் - கல்வளைப்பதியை யுடையராகிய விநாயகரிடத்துத் தூதுசென்ற அன்னம், இன்னும் வர கண்டிலேம் - இன்னமும் வரக்கண்டிலேம், என்ன தாமதம் - யாது தாமதம் ?

(குறி-ப.) அன்ன அன்ன அன்னம் அன்னம் என்பவற்றில் னகரங்கள் இடைக்குறையாயின. மேல்வரு மிடைக்குறைகளையு முய்த்துணர்ந்துகொள்க. சந்தனமின்னு என்றதற்கு சந்தனம் விளங்கப் பெற்ற என்று பொருளுரைப்பினு மமையும். பசந்து பசக்கவென்பதன் றிரிபு. இது புறப்பொருளில் கடவுண்மாட்டு மானுடப்பெண்டிர் நயந்த பக்கத்தில் தலைவியுடைய வருத்தத்தைக் குறித்துத் தூதனுப்பிய அன்னத்தைக்காணாது வருந்துந் தோழியர் தம்முட் கூறுங் கூற்று. (எ)

தாமதிக் காந்தச் சிலைபோன் மனத்தினைத் தந்தசைகா
தாமதிக் காந்தகை மென்மொழிப் பூமின் றலைமகன்வே
தாமதிக் காந்தா மாகிநின் றோன்மைந்த தண்ணிதழித்
தாமதிக் காந்தம் புகழ்கல் வளையநின் றாட்கஞ்சமே.

(இ-ள்.) அசை காதா - அசைகின்ற காதையுடையவரே, மது இக்கு ஆம் தகை மெல்மொழி பூமின் தலைமகன் - தேனுங்கரும்பும் (நிகர்) ஆகும் (மதுரமாகிய) தன்மையையுடைய மென்மையாகிய மொழியினையுடைய இலக்குமிக்கு நாயகராகிய விஷ்ணுவும், வேதா - பிரமனும், மதிக்க அந்தமாகி நின்றோன் மைந்த - கருத மறைவாய் நின்றவராகிய பரமசிவனுடைய குமாரரே, தண் இதழித் தாம-குளிர்மையாகிய கொன்றைப் பூமாலையையுடையவரே, திக்கு அந்தம் புகழ்

கல்வளைய-திக்குகளின் முடிவு (வரைக்கும்) புகழப்படுகின்ற கல்வளைப் பதியையுடையவரே, மதிகாந்தம் சிலைபோல் மனத்தினை தந்து-சந்திர காந்தக்கல்லை யொத்த (உருகும்) மனத்தை (முன்னர்த்) தந்து (நமக்கன்பளுக்கி), நின் தாள் கஞ்சம் தா-நுமது திருவடித்தாமரைப்பூவைப் (பின்னர்த்) தந்தருள்வீர்.

(கு-ரை.) இச்செய்யுள் பூட்டுவிற்பொருள்கோள். பூவின்றலை மகன் என்றுபாடமாயின் பூமிதேவிக்கு நாயகரென்று பொருளுரைக்க. மதிக்காந்தரம் என்பது மரூஉமொழி. திக்காந்தம் நீட்டல் விகாரம் பெற்றது. இதழி, கஞ்சம்: ஆகுபெயர்கள். மேல் இவ்வாறு பெருவழக்காவரு மாகுபெயர்களை உய்ந்துணர்ந்துகொள்க. (அ)

கஞ்சக் கரந்தனின் மூவிலை வேல்கும்பங் கார்முகஞ்சங்
கஞ்சக் கரங்கதை மாதுள மேந்தி கவின்களம்பூ
கஞ்சக் கரம்பயில் வேல்வல வைக்கொரு காந்தன்பொன்னு
கஞ்சக் கரப்புவி கும்பிடுங் கல்வளைக் கைவரையே.

(இ-ள்.) கஞ்சம் கரம் தனின் மூவிலைவேல் கும்பம் கார்முகம் சங்கம் சக்கரம் கதை மாதுளம் ஏந்தி - தாமரை மலரை நிகர்த்த திருக்கரங்களில் மூன்றாகிய இலைபோலுந் தலைகளையுடைய சூலாயுதத்தையும் கும்பத்தையும் வில்லையும் சங்கையுஞ் சக்கரத்தையுந் தண்டாயுதத்தையு மாதுளம்பழத்தையு மேந்தியிருப்பவரும், பூகம் கவின் களம் - கமுகுபோலு மழகிய கழுத்தையும், அரம் பயில் வேல் சக்கு - அரம் பயின்ற வேல்போலுங் கண்ணினையுமுடைய, வலவைக்கு ஒரு காந்தன் - வல்லவைக்கோர் நாயகரும், பொன் நாகம் சக்கரம் புவி கும்பிடும் கல்வளை கை வரையே - பொன்னாகிய தேவலோகத்தாரும் வட்டமாகிய பூமியிலுள்ளாரும் வணங்குங் கல்வளைப்பதியிலுள்ள யானையே.

(கு-ரை.) நாகம், புவி: ஆகுபெயர்கள். பூகம், மெலிக்கும்வழி மெலித்தல். பயிலல் ஈண்டு அராவுதல். அரம் பயில்வேல் என்பதற்கு அரத்தையும் (போர்) பயிலுகின்றவேலையும் என்று பொருள் கூறினுமமையும். ஏற்றேகாரந் தேற்றப்பொருட்டு. (கூ)

வரையாரம் பாலன்ன தோணகை வாணி வலவைகண
வரையாரம் பார்சடை யார்கல் வளைவெற்ப வண்ணமுத்தேன்
வரையாரம் பாளிதப் பூட்கொங்கை மீது வயங்குதொய்யில்
வரையாரம் பால விழியா ளிடையின் வறுமைகண்டே.

(இ-ள்.) வரை ஆரம் பால் அன்ன தோள் நகை வாணி வலவை கணவர் - மூங்கிலு முத்தும் பாலும்போன்ற தோளையும் பல்லையுஞ் சொல்லையுமுடைய வல்லவைக்கு நாயகரும், ஐ ஆர் அம்பு ஆர் சடையார்-அழகுநிறைந்த கங்கை நீர் பொருந்தப்பெற்ற சடையினை யுடைய வருமாகிய விநாயகக்கடவுளுடைய, கல்வளை வெற்ப - கல்வளைப்பதியிலுள்ள பொருப்பனே, அம்பு ஆல விழியாள் இடையின் வறுமை கண்டு- அம்பையும் நஞ்சையு நிகர்த்த கண்களையுடையளாகிய தலைவியினது இடையின் சிறுமையைக் கண்டு, கொங்கை - தனத்தில், பூண் மீது - (இன்றியமையாதிருக்கின்ற) ஆபரணத்தின்மேல், பாளிதம் வரை ஆரம் - குழம்பாகிய மலைச்சந்தனத்தையும், வயங்கு தொய்யில் வரையார் - விளங்குகின்ற தொய்யிலெழுதார் (அன்னையர்), (இங்ஙனமானவளுக்கு) வண்ணம் முத்து என் - (நீகொணர்ந்த) அழகாகிய முத்தமணிமாலையேன்?

(கு-ரை.) ஐயார் அழகிய ஆத்திப்பூமாலையையு மெனினுமமையும். பாளிதம் கர்ப்பூரத்தைக்கலந்த என்றுரைப்பினுமமையும். இழிவுசிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. வறுமை இப்பொருள்படுதலை "வறிது நகைதோற்றல்" என்பதிற்காண்க. இஃது அகப்பொருளில் பாங்கி கையுறை மறுத்தற்கிளவி. (௧0)

மைக்கண்ட னேறிய தேரச் சறுக்கும் வாதன்வெந்தீ
மைக்கண்ட நம்மையொட் டாவைங் கரத்தண்ணல் வாழுமிடம்
மைக்கண் டவள நகையார் குடையு மடுவினின்மா
மைக்கண்ட னீழலிற் சங்கீனுந் தென்கல் வளைப்பதியே.

(இ-ள்.) மை கண்டன் ஏறிய தேர் அச்சு அறுக்கும் வாதன் - கருமையாகியமிடற்றினை யுடையாராகிய சிவபெருமானேறிய தேரினை தச்சை யறுத்த வாதரும், வெம் தீமைக்கு அண்ட நம்மை ஒட்டா ஐங்கரத்து அண்ணல்-வெம்மையாகிய தீமையிடத்துச் சார நம்மை விடாத ஐந்து திருக்கரங்களையுடைய தலைவருமாகிய விநாயகக்கடவுள், வாழும் இடம் - வாழுமிடமாவது, மை கண் தவளம் நகையார் குடையும் மடுவினில் - மையையுடைய கண்களையும் வெண்மையாகிய பற்களையுமுடையராகிய மகளிராடுங்குளத்தில், மாமை கண்டல் நீழலில் - அழகாகிய தாழைமரநீழலில், சங்கு ஈனும் தென் கல்வளைப் பதியே-சங்குகள் (முத்துக்களை) ஈனப்பெறுங் கல்வளைப்பதியே (ஆகும்).

(கு-ரை.) குவ்வுருபு கண்ணுருபின் றிரிபு. (கக)

கல்வளை யாத விரும்புநெஞ் சேகைய ரோடுறவா
கல்வளை யார்சுனை வாயரக் காம்பல்செங் காவியின்பக்
கல்வளை யார நிலாவீச விள்ளுங் கழனிசுற் றுங்
கல்வளை யானங் குசபாச மேந்துங் கரன்புகழே.

(இ-ள்.) வளையாத இரும்பு நெஞ்சே - வளையாத இரும்பையொத்த மனமே, கையரோடு உறவு ஆகல்-கீழ்மக்களோடுறவாகுதலொழிந்து, வள் ஐயார் சுனைவாய்!அரக்கு ஆம்பல் - வளமுமழகும் பொருந்திய சுனையிடத்துச் செவ்வாம்பற்பூ, செம் காவியின் பக்கல் வளை ஆரம் நிலா வீச விள்ளும் - அழகாகிய காவிப்பூவி னயலில் சங்கு முத்து நிலாவை வீச விரியப்பெறும், கழனி சுற்றும் - வயல்சூழப்பெற்ற, கல்வளையான் அங்குச பாசம் ஏந்தும் கரன் புகழே கல் - கல்வளைப் பதியையுடையவரும் அங்குச பாசங்களை யேந்துந் திருக்கரங்களையுடையவருமாகிய விநாயகக்கடவுளது புகழையே கற்பாய்.

(கு ரை.) இதுவும் பூட்டுவிற்பொருள்கோள். ஆகல் என்னும் எதிர்மறைவியங்கோள் வினைமுற்று வினையெச்சமானது; வினைமுற்றுருவுவமைப்பினுமமையும். வள்ளையார் என்பதில் ளகரந்தொகுத்தது.

வளையார் என்பதற்கு வள்ளைக்கொடி பொருந்திய எனினுமமையும். அரக்காம்பல் செங்காவியின் பக்கல் வளையார நிலாவீச விள்ளும் என்ற தற்கு சேதாம்பலினதும் செங்காவியினதும் பக்கத்தில் சங்கு முத்துக் கள் நிலாவைவீச (அவை) விரியும் என்று பொருள் கூறினுமமையும்.

கரும்பனை யத்தனைப் பூவே ழிடந்தசெங் கண்விடைப்பா
கரும்பனை யத்துவக் கீர்த்துடல் போர்த்த கடவுண்மொழிக்
கரும்பனை யத்தர்கை மாங்கனி வாங்கிய கல்வளைமா
கரும்பனை யத்தனை யான்மற வேன்புன் கவிதைகொண்டே.

(இ-ள்.) கரும் பனை அத்தனை-கருமையாகிய பனைபோலுந் துதி க்கையினையுடையவரும், எழ் பூ இடந்த செங்கண் விடைபாகர் - (கீழ்) எழுலகத்தையும் (பன்றிவடிவாய்க்) கிழித்த செம்மையாகிய கண்ணை யுடைய (விட்டுணுவாகிய) இடபத்தை யூரும் பாகர், உம்பல் நைய துவ க்கு ஈர்த்து உடல் போர்த்த கடவுள்-யானை வருந்தத் தோலை யுரித்துத் திருமேனியிற் போர்த்த கடவுள், கரும்பு மொழி அனை அத்தர் - கரு ம்புபோலு மொழியினையுடைய வுமாதேவியாகிய வாமபாகர், கை மாங் கனி வாங்கிய - (அவரது) திருக்கரத்தில் மாம்பழத்தை வாங்கிய, கல் வளை மாகர் உம்பனை-கல்வளைப்பதியிலுள்ள தேவர்களுக்குந்தேவரும், அத்தனை-(யாவர்க்குந்) தந்தையுமாகிய விநாயகக்கடவுளை, யான் புன் கவிதைகொண்டு மறவேன் - யான் புல்லியகவியாற் (பாடுதலை) மற வேன்.

(து-ரை) விடைப்பாகர் என்றதற்கு விடைமேலேறி யருள்பவர் என்றுரைப்பினுமமையும். அனை இடைக்குறை. மேல் இவ்வாறு பெருவழக்காவரு மிடைக்குறைகளை யுய்த்துணர்ந்து கொள்க. (கரு)

கவிநா யகன்றிடு வாய்க்கிரைப் பண்டங் கறையிரத்தக்
கவினுய கன்மக் குடம்பையை வீக்கியென் கண்டபயன்
கவிநா யகன்றெழும் ராமன் கொலைப்பவங் காய்ந்திடுதுங்
கவிநா யகதிருக் கல்வளை வாழுங் கணபதியே.

(இ-ள்.) கவி நாயகன் தொழும் ராமன் கொலை பவம் காய்ந்திடு துங்க விநாயக - குரங்குகளுக்குத் தலைவனாகிய அனுமானால் வணங்கப்படும் ஸ்ரீராமரது பிரமஹத்திதோஷத்தை அழித்த உயர்ச்சியாகிய விநாயகக்கடவுளே, திரு கல்வளை வாழும் கணபதியே - அழகாகிய கல்வளைப்பதியில் வாழுங் கணபதியே, நாய் கவி அகன்றிடு வாய்க்கு இரைப்பண்டம்-நாய் கவ்விக்கொண்டோடும் (அதனது) வாய்க்கிரைப் பண்டமும், கறை இரத்தம் கவின் ஆய கன்மம் குடம்பையை - கறையாகிய இரத்தத்தா லழகுண்டாகப்பெற்ற கன்மக்கூடாகிய வுடலை, வீக்கி - பருக்கச்செய்து, கண்ட பயன் என் - (யான்) கண்ட பயன் (சிறிதும்) இல்லை.

(கு-ரை.) கவ்வி என்பதில் வகரந்தொகுத்தது. கறை இரத்தம், இருபெயரொட்டு. எவன் என்பது, என் என இடைக்குறையா நின்று இல்லை என்னும் பொருள்பயந்தது. (கச)

கணத்தலை வன்குழ விப்பிறைக் கோட்டன் கதிர்மணிப்பைக்
கணத்தலை வன்னச் சராக்கச் சரையன் களமரில்லங்
கணத்தலை வன்ன வளையூருங் கல்வளை காணிலரைக்
கணத்தலை வற்பகை முன்பனி மானுங் கருதிடினே.

(இ-ள்.) கணத் தலைவன் - கணங்களுக்குத் தலைவரும், குழவிப் பிறைக் கோட்டன் - இளமையாகிய பிறைபோலுங் கொம்பினையுடையவரும், கதிர் மணி பை கணத் தலை வல் நச்சு அராக்கச்சு அரையன் - கிரணத்தையுடைய மணியினையும் படத்தினையுமுடைய கூட்டமாகிய தலைகளையும் வலிய நஞ்சினையுமுடைய சர்ப்பக் கச்சையணிந்த அரையினையுடையவரு மாகிய விநாயகக்கடவுளது, களமர் இல் அங்கணத் தலை வன்ன வளை ஊரும் கல்வளை காணில் - உழவருடைய வீட்டின் முற்றத்தின்கண் அழகிய சங்குகள் ஊருகின்ற கல்வளைப்பதியைக் கண்டால், அலைவு - (கண்டவரது) துன்பம், கருதிடில் - ஆராயுமிடத்து, அரைக்கணத்து அற்பகை முன்பனி மானும் - அரைக்கணப்

பொழுதில் இருளுக்குப் பகையாகிய சூரியனுக்குமுன் பனி (யழிதல்) போல அழிந்துவிடும். (கடு)

கரியா னனத்தன் றொழுபதம் வேண்டிக்கண் ணார்பவஞ்சங்
கரியா னனத்த மவர்க்கிழைப் பான்கடற் காசினிக்கோர்
கரியா னநத்தம் புரைகோட்டுக் கல்வளைக் கன்னமத
கரியா னனத்தன் புகழ்பாடி யுள்ளங் கசிந்திடுமே.

(இ-ள்.) கரியான் அனத்தன் தொழு பதம் வேண்டிக் கண்ணார் பவம் சங்கரியான் - விஷ்ணுமூர்த்தியும் அன்ன வாகனராகிய பிரமதேவரும் வணங்குகின்ற (தமது) திருவடியை விரும்பிக் கருதாதவருடைய பாவங்களை யழிக்காதவரும், அவர்க்கு அனத்தம் இழைப்பான் - அவருக்கு நாசஞ்செய்பவரும், கடல் காசினிக்கு ஓர் கரியான கல்வளை நத்தம் புரை கோட்டு கன்ன மத கரி ஆனனத்தன் - கடலையுடைய பூலோகத்துக்கோர் சாட்சியான கல்வளைப்பதியி லெழுந்தருளியிருக்கின்ற சங்கை நிகர்த்த கொம்பினையுங் கன்ன மதத்தினையு முடைய யானை வதனத்தை யுடையவரு மாகிய விக்கினேசுவரக் கடவுளது, புகழ்பாடி உள்ளம் கசிந்திடும் - கீர்த்தியைப்பாடி மனமுருகுவீர் (சகத்திரே நமக்குப் பேரின்பமுத்தி கைகூடும்).

(கு-ரை.) வைத்தியர் நோயாளருக்குக் கண்ணிற் படலத்தை யுரித்தலாதியவற்றைப் புரிதல்போலத் தீமைசெய்வார்க்கு அனத்தமிழைத்தலு மருளேயாதலிற் கடவுளிலக்ஷணத்துக்கு மாறுபடாமைகாண்க. கரியானனத்தன்றொழுபதம் வேண்டில் என்று பாடமாயின், விட்டுணுவும் பிரமதேவருந் தொழுகின்ற மேற்பதத்தை விரும்பினால் என்று பொருளுரைக்க. (கசு)

சிந்தா மணிதென்ற லன்றி னிலாப்பகை செய்யவணி
சிந்தா மணிமுலை வாடின ளேழு செகமளந்த
சிந்தா மணிதுள வன்றேடு கல்வளைச் செய்யவருட்
சிந்தா மணிவரக் காணேம் பயோதரச் செல்வினமே.

(இ-ள்.) சிந்து ஆ மணி தென்றல் அன்றில் நிலா பகைசெய்ய - கடலும் பசுவின்கழுத்திற் கட்டப்பட்ட மணியுந் தென்றற்காற்றும் அன்றிற்பறவையுஞ் சந்திரனும் பகையைச்செய்ய, மணிமுலை அணி சிந்தா வாடினள் - அழகாகியதனங்களையுடைய தலைவி அழகழிந்து வாடினாள், பயோதரச் செல் இனமே-நீரை உதரத்திற் கொண்ட முகிலினமே, எழு செகம் அளந்த சிந்து ஆம் அணி துளவன் தேடு கல்வளைச் செய்ய அருள் சிந்தாமணி வர காணேம்-எழு(தீவாகிய)பூமியை (ஓரடியால்) அளந்த குறளாகிய அணிகின்ற துளவமாலையையுடைய விஷ்ணுமூர்த்தியு நாடுகின்ற கல்வளைப்பதியி லெழுந்தருளியிருக்கின்ற செம்மையாகிய அருளினையுடைய சிந்தாமணிபோலும் விநாயகக்கடவுள் வரக்கண்டிலேம் (இஃதென்ன வினையோ).

(கு றை.) நிலா, எழு, சிந்தாமணி: ஆகுபெயர்கள். அன்பருக்கு நினைத்தவற்றைக் கொடுத்தல் பற்றிச் சிந்தாமணியென்றார். இது கடவுண்மாட்டு மானுடப்பெண்டிர் நயந்தபக்கத்தில் தலைவியின் வாட்டங் கண்ட தோழியர் மேகங்களோடு கூறுங்கூற்று. (கஎ)

தரங்க வளக்க ரொலிவே யிசைநனி தாக்கத்துப்ப
தரங்க வளக்கரிக் கொங்கைக் குதவிலன் றுறைநிரந்
தரங்க வலைப்பட வென்னை விடாமத தந்திசொல்லாந்
தரங்க வளக்கல் வளைப்பதி மேவிய தற்பரனே.

(இ-ள்.) தரங்க அளக்கர் ஒலி வேய் இசைநனி தாக்க-திரையையுடைய கடலொலியும் வேய்ங்குழ லோசையும் (எமது தலைவியை) மிகவுந் தாக்க, (அதனையாமனுப்பிய தூதாலறிந்தும்) துப்பு அதரம் கவளக்கரிக் கொங்கைக்கு - பவளம்போலும் அதரத்தினையுங் கவளவுணவைக் கொள்ளுகின்ற யானைபோலுந் தனத்தினையுமுடைய அத்தலைவிக்கு, நிரந்தரம் கவலைப்பட என்னைவிடா மததந்தி - எப்பொழுதுங்கவலைப்பட என்னைவிடாத மதயானையும், சொல் ஆந்தரங்க வளக் கல்வளைப்பதி மேவியதற்பரன் - (புகழ்ந்து) சொல்லப்படுகின்ற உச்சி

தமாகிய வளத்தினையுடைய கல்வளைப்பதியில் வாழும் ஆன்மாநாயகரு மாகிய விநாயகக்கடவுள், தாரை உதவிலன்-(தமது) மாலையைக் கொடுக்கின்றிலர் (அவரது திருவுள்ள மிருந்தவாறென்).

(கு-ரை.) வேய், ஆகுபெயர். அதரங்கவளம், மெலிக்கும் வழி மெலித்தல். யானை மான் ஆதிய சிலபொருள்களின் ஒவ்வோருறுப்பு மகளிரது ஒவ்வோருறுப்புக்கு நிகராகவும் முதல் சினைகளி னொற்றுமைபற்றி அம்முதற் பொருள்களை உவமைப் பொருள்களாக வழங்கலும் புலவர்வழக்காதலிற் கரிக்கொங்கை யெனப்பட்டது; ஆகுபெயரெனினுமாம். இதுவும் மேற்படி பக்கத்தில் தலைவிக்கு மாலையைக் கொடாத விநாயகக்கடவுளது நெஞ்சத்தின் வன்மையைத் தோழியர் தம்முட் கூறுங்கூற்று. (கஅ)

பரசங்க முத்தமிழ் கல்லா வெனைபனைப் பாவிதிகம்
பரசங் கரவென்று மெய்ந்நொந்து பெற்ற பலனன்றுதா
பரசங் கமவுயி ருக்குயி ராய பரஞ்சுடரே
பரசங்க மாறந் தணர்போற்றுங் கல்வளைப் பண்ணவனே.

(இ-ள்.) தாபர சங்கம உயிருக்கு உயிர் ஆய பரஞ்சுடரே - அசர முஞ்சரமுமாகிய இருவகை உயிர்களுக்கு முயிராகிய பரஞ்சோதியே, பரசு ஆறு அங்க அந்தணர் போற்றும் கல்வளைப் பண்ணவனே - துதிக்கப்படுகின்ற ஆறுகிய வேதாங்கங்களையு முணர்ந்த மறையவர்கள் போற்றுங் கல்வளைப்பதியி லெழுந்தருளியிருக்கின்ற விநாயகக்கடவுளே, பர சங்க முத்தமிழ் கல்லா எனை - மேலான சங்கப்புலவரா னாராயப்பட்ட மூன்றாகிய தமிழ் நூல்களைக் கல்லாதவென்னை, பாவி அனை-பாவியாகிய (என்) அன்னை, திகம்பர சங்கர என்று மெய் நொந்து பெற்ற பலன் நன்று-திகம்பரரே சங்கரரே யென்று துதித்துத் தேகம் நொந்து பெற்ற பலன் நல்லது.

(கு-ரை) சங்கம், தமிழ்: ஆகுபெயர்கள். முத்தமிழ்: இயல் இசை நாடகம். என்னை என்பதில் னகரந்தொகுத்தது. அனை இடைக்குறை. நன்று, தீயதென்னும் பொருளைத்தந்தது.

அவலம் புரிமுக் குறும்பைந்து பூத மடக்கிமென் றா
யவலம் புரிமலர் தூய்த்தொழு தேத்த வருண்மெய்யர்மெய்
யவலம் புரிமருப் புத்தக ரூரு மறுமுகன்முன்
னவலம் புரிவயற் கல்வளை யாலயத் தாதிக்கனே.

(இ-ள்.) மெய்யர் மெய்ய - மெய்ம்மையையுடையவர்க்கு மெய்ம்மையானவரே, வலம் புரி மருப்புத் தகர் ஊரும் அறுமுகன் முன்ன - வெற்றியைத் தருகின்ற கொம்பினையுடைய ஆட்டுக்கடா வாகனத்தைச் செலுத்தியருளும் ஆறுமுகக்கடவுளுக்கு முன்னவரே, வலம்புரி வயல் கல்வளை ஆலயத்து ஆதிக்கனே-சங்குகள் (பொருந்திய) வயலையுடைய கல்வளைப்பதியில் வாழு முயர்ச்சியுடையவரே, அவலம் புரி முக்குறும்பு ஐந்து பூதம் அடக்கி - துன்பத்தைச் செய்கின்ற முக்குற்றங்களையும் ஐம்புலன்களையு மடக்கி, மெல் தூய வலம்புரி மலர் தூய்த் தொழுது எத்த அருள் - மென்மையாகிய தூய்மையை யுடைய நந்தியாவர்த்த மலர்களைத் தூவித் தேவரீரை வணங்கித் துதிக்க (எனக்கு) அருள் புரிவீர்.

(கு-ரை.) முக்குற்றம்: காமம் வெகுளி மயக்கம். ஐம்புலன்: நாற்றம் சுவை ஒளி ஊறு ஓசை. புலன்களைப் பூதமென்று காரணகாரிய ஒற்றுமை நயம்பற்றி உபசரிக்கப்பட்டது. (உ௦)

திக்குடை யானடி யைப்போற்றிப் பூவலஞ் சென்றுசெஞ்சோ
திக்குடை நீழலின் மேவந்த ணீர்செப்பு வீரென்றன்பத்
திக்குடை யான்கல் வளையான் சிலம்பினிற் றேன்பண்ணையோ
திக்குடை யோதிச்செங் காலியுங் காளையுஞ் சென்றதுவே.

(இ-ள்.) திககு உடையான் அடியை போற்றி - திக்காகிய ஆடையை யுடையராகிய சிவபெருமானுடைய திருவடியைப் போற்றி, பூ வலம் சென்று - பூமியைப்பிரதக்கிணஞ் (செய்யச்) சென்று, செம் சோதி குடை நீழலில் மேவு அந்தணீர் - செம்மையாகிய சோதியினை யுடைய குடைநீழலிற் சேரு மந்தணரே, என்றன் பத்திக்கு உடை

யவருங் கல்வளைப்பதியையுடையவரு மாகிய விநாயகக்கடவுளது மலையில், தேன் பண்ணை ஒதிக் குடை ஒதிச் செம் காலியும் காளையும் சென்றது-வண்டுக ளிசையைப் பாடிக் கிண்டபெறுங் கூந்தலையுடைய செவ்வடியினளாகிய ஒரு தலைவியும் ஒரு தலைவனுங் (கூடிச்) சென்றதைக் (கண்டீரோ), செப்புவீர் - கூறுவீர்.

(து-ரை.) இஃது ஆற்றிடை முக்கோற் பகவரை வினுதல். (உக)

வேதா ரணிய முறைவேயின் முத்தருள் வேழமுய்ய
வேதா ரணியம்பொ னாடேத்து கல்வளை வெற்பன்னமே
வேதா ரணிய மலைதிருக் கோயில் விளங்கநின்பால்
வேதா ரணியந்த காரநம் பாலில் விதித்தனனே.

(இ-ள்.) வேதாரணியம் உறை வேயின் முத்து அருள் வேழம் - திருமறைக்காட்டி லெழுந்தருளியிருக்கின்ற மூங்கின் முத்தாகிய சிவபெருமான் பெற்றருளிய யானைமுகக்கடவுளது, தாரணி அம் பொன்னாடு உய்யவே ஏத்து கல்வளை வெற்பு அன்னமே- மண்ணுலகத்தாரும் பொன்னுலகத்தாரும் (தாம்) உய்யும் பொருட்டாகவே துதிக்கின்ற கல்வளைப்பதியி லுள்ள மலையில்வாழும் அன்னம் போன்றவளே, வேதா-பிரமதேவர், இரணிய மலை திருக் கோயில் நின்பால் விளங்க-பொன்மலையும் இலக்குமிக்கு மாளிகையாகிய தாமரைப்பூவும் நின்னிடத்து விளங்கவும், வே(ய்) தார் அணி அந்தகாரம் நம் பாலில் விதித்தனன் - அலங்கரிக்கப்பட்ட மாலையை யணிந்த இருளை (யான் காண) என் பக்கலில் விதித்தார்.

(து-ரை.) தாரணி, பொன்னாடு, அன்னம், இரணியமலை, திருக்கோயில், அந்தகாரம்: ஆகுபெயர்கள். மேல்வருமாறு பெயர்களையு முய்த்துணர்க. இரணியமலை - முலை. திருக்கோயில் - முகம். அந்தகாரம்-கூந்தல். இஃது இடையூறு கிளத்தற் கிளவியின்பாற்று. (உஉ)

தனையா யுதவிய தந்தையில் வாழ்க்கை தணந்தருட்சிந்
தனையா யுதகந் தனினின்று செய்யுந் தவத்திர்வெண்டந்

தனையா யுததி யகிலம் படைக்குஞ் சதுர்விதவே
தனையா யுதன்றொழுங் கல்வளை யானைச் சரண்புகுமே.

(இ-ள்.) தனை ஆய் உதவிய தந்தை இல்வாழ்க்கை தணந்து-மகவாகப் பெற்ற பிதாவையும் இல்லின்கண் வாழ்தலையும் நீங்கி, அருள் சிந்தனையாய் - திருவருளைப்பெறுஞ் சிந்தனையாகி, உதகந்தன்னில் நின்று செய்யுந் தவத்திர் - நீரின்கணின்று செய்யுந் தவத்தினையுடையீர், (நீவி ரிங்ஙனம் வருந்தாது) வெண்தந்தனை-வெண்மையாகிய (ஏக) தந்தத்தினையுடையவரும், ஆய் உததி அகிலம் படைக்கும் சதுர்வித வேதன்-ஆராய்ந்து கடலையுடைய பூமியைச் சிருட்டித்த நால்வகைமறையையு முணர்ந்த பிரமதேவரும், ஐயாயுதன் - பஞ்சாயுதங்களையுடையாராகிய விஷ்ணுமூர்த்தியும், தொழும் - வணங்குகின்ற, கல்வளையானை சரண் புகும் - கல்வளைப்பதியை யுடையவருமாகிய விநாயகக்கடவுளைச் சரணடைவீர் (முத்தி சித்தியாகும்).

(கு-ரை.) ஆய், ஆகவென்பதன் றிரிபு. ஆயுததி என்பதில் ஆய் 'வரிப்புனைபந்து' என்பதிற்போல வினையெச்சப் பொருடந்தது. (உக)

சரந்தண் டருமலர் வேண்மைத் துனன்செந் தமிழ்க்கலைபஞ்
சரந்தண் டலையிற் கிளிதேருங் கல்வளை தங்கிடுகுஞ்
சரந்தண்ட பாணி யழகினைக் காணப்பொற் றாமரைவா
சரந்தண் டர்போல விமையாத பார்வையைத் தந்திலரே.

(இ-ள்.) தண் தரு மலர் சரம் வேள் மைத்துனன் - குளிர்மையைத் தருகின்ற மலர்ப்பாணங்களையுடைய மன்மதனுக்கு மைத்துனரும், செம் தமிழ்க் கலை தண்டலையில் பஞ்சரம் கிளி தேரும் கல்வளை தங்கிடு குஞ்சரம்-செந்தமிழ்க்கலைகளைச் சோலையிற் கூட்டின்கணுள்ள கிளிகள் படிக்கின்ற கல்வளைப்பதியில் வீற்றிருக்கும் யானையும், தண்ட பாணி - தண்டாயுதத்தை யேந்திய திருகரத்தினை யுடையவருமாகிய விநாயகக் கடவுளது, அழகினை காண - பேரழகை (யான்) காண, பொன் தாமரை வாசர் அந்த அண்டர் போல இமையாத பார்வையைத்

தந்திலர் - அழகிய தாமரைப்பூவில் வசிப்பவராகிய பிரமதேவர் அத்தேவர்க்குப் போல இமையாத கண்களை (எனக்குத்) தந்திலர்.

(கு-ரை.) சரத்தண் பஞ்சரத்தண்டலை எனற்பாலன மெலித்தன. அந்த என்றது னீற்றகரந் தொகுத்தது. மேலும் இங்ஙனம்வரும் விகாரங்களை யுய்த்துணர்க. (உ௪)

தந்தனந் தாமரை வெற்பிருணேரிடை சாய்நடைபா
தந்தனந் தார்க்குழல் யாமள கோமள சாமளப்பெண்
தந்தநந் தாபணை நெல்விளை கல்வளை தன்னிலொற்றைத்
தந்தநந் தாவிளக் கேயெனப் போமிருட் சம்பந்தமே.

(இ-ள்.) தந்து அனம் தாமரை வெற்பு இருள் நேர் இடை சாய் நடை பாதம் தனம் தார்க் குழல் - நூலையும் அன்ன நடையினையுந் தாமரைமலரையும் மலையையும் இருளையும் (முறையே) நிகர்த்த இடையினையும் அசைநடையினையும் அடியினையும் முலையினையும் மாலையை யணிகின்ற கூந்தலினையு முடைய, யாமள கோமள சாமளப் பெண் தந்த நந்தா - இளமையாகிய பச்சைநிறத்தையுடைய உமாதேவியார் பெற்ற புத்திரரே, நெல் விளை பணை கல்வளை தன்னில் ஒற்றைத் தந்த- நெல்விளைகின்ற வயல்களையுடைய கல்வளைப்பதியி லெழுந்தருளியிருக்கின்ற ஏக தந்தரே, நந்தா விளக்கே-(ஒருகாலும்) ஒளிகெடாத விளக்கே, என - என்று துதிக்க, இருள் சம்பந்தம் போம் - மல சம்பந்தம் நீங்கிவிடும்.

(கு-ரை.) யாமள கோமளம் ஒரு பொருட்பன்மொழி. (உ௫)

சம்பந்த மாவினைத் தென்னவற் கீந்தவன் றுங்குமருட்
சம்பந்த மாமுனி பாமாலை சூடி தருபொருண்மா
சம்பந்த மாலம் புனைசூழுங் கல்வளைத் தந்திவெம்பா
சம்பந்த மாயையென் பானீக்கி வாழ்வுசம் பாதிப்பனே.

(இ-ள்.) சம்பு அந்த மாவினை தென்னவர்க்கு ஈந்தவன் - நரிகளாகிய அக் குதிரைகளை (தமதன்பராகிய மாணிக்கவாசக சுவாமிகளுக்

காகப்) பாண்டியனுக்குக் கொடுத்தவரும், அருள் தாங்கும் மா சம்பந்த முனி பா மாலை சூடி - அருளைத் தாங்கிய பெருமையாகிய திருஞான சம்பந்த மூர்த்தியாகிய அந்தணரது தேவாரப்பாமாலையைச் சூடியவரு மாகிய சிவபெருமான், தரு பொருள் - பெற்ற புத்திரராகிய, மா சம்பு அம் தமாலம் புனை சூழும் கல்வளைத் தந்தி - மாமரமும் நாவன் மரமும் அழகிய பச்சிலைமரமும் புன்னை மரமுஞ் சூழப்பெற்ற கல் வளைப் பதியிலுள்ள யானைமுக விநாயகக்கடவுள், பந்த வெம் மாயை பாசம் - கட்டாகிய வெய்ய மாயா பாசத்தை, என்பால் நீக்கி - என்னி டத்தினின்று நீக்கி, வாழ்வு சம்பாதிப்பன்-மோக்ஷவாழ்வைத் தந்தருள் வார். (உசு)

பாலை வனத்தத்தைக் கியாரளிப் பாரென்று பன்னினளேம்
பாலை வனத்தடங் கார்கண்டு வெட்கும் படிவந்தமின்
பாலை வனத்தகன் றுள்கல் வளைப்பர மானந்தன்றன்
பாலை வனத்தள வும்மன்பி லாரிற் பதைபதைத்தே.

(இ-ள்.) ஐம்பாலை வனத் தடம் சார் கண்டு வெட்கும்படி வந்த மின் - (தன்) கூந்தலை நீரையுடைய பெருமையாகிய மேகங் கண்டு நாணும்படி தோன்றிய நமது மகள், வனத் தத்தைக்கு பாலை யார் அளிப் பார் என்று பன்னினள் - அழகையுடைய கிளிக்குப் பாலை யார் கொ டுப்பாரென்று (நெருநலிற்) கூறினாள், கல்வளைப் பரமானந்தன் தன் பால் ஐவனத்து அளவும் அன்பிலாரில் பதை பதைத்து பாலைவனத்து அகன்றாள் - கல்வளைப்பதியி லெழுந்தருளியிருக்கின்ற பரமானந்த குணத்தினராகிய விநாயகக்கடவுண்மீது (ஒரு) மலை நெல்லளவாயினு மன்பிலார் போலப் பதைபதைத்து (இன்றொரு தலைவன்பின்னே) பாலைவனத்திற்சென்றாள் (அவள் நெருநற் குறிப்பானுணர்த்தியதை யானுய்த்துணர்ந்திலேன்).

(து-ரை.) இது செவிலி தன்னறிவின்மைதன்னை நொந்துரைத் தல். (உஎ)

றைதக்கும் பகழி யுடல்பாய் தறுகட் சயிலம்வந்த
தைக்கும் பகன தனத்தீர்கண் டீரெனிற் சாற்றிடுமே
தைக்கும் பகனன்முன் னோனைப் பந்தாடித் தகர்த்துரஞ்சி
தைக்கும் பகவன்றென் கல்வளை வாசன் றடமலைக்கே.

(இ-ள்.) கும்ப கன தனத்தீர் - குடத்தை நிகர்த்த கனத்த தனங்களையுடையீர், மேதைக் கும்பகனன் முன்னோனை பந்து ஆடி தகர்த்து உரம் சிதைக்கும் பகவன் - அறிவினையுடைய கும்பகன்னனுக்கு முன்னோனாகிய இராவணனைப் பந்துபோல (எறிந்து) ஆடித் தகர்த்து (அவனது) வலியை யழித்த கடவுளாகிய, தென் கல்வளை வாசன் - அழகிய கல்வளைப்பதியில் வாசஞ்செய்தருளும் விக்கினேசுவரரது, தடமலைக்கு - பெருமையாகிய மலையில், தைக்கும் பகழி பாய் உடல் தறுகண் சயிலம் வந்ததைக்கண்டீரெனில்-(குறித்த இலக்குத் தப்பாது) தைக்கும் (எனது) பாணந் தைத்த உடலையுடைய அஞ்சாமையாகிய மலைபோலும் யானை (யொன்று ஈண்டு) வந்ததைக் கண்டீராயின், சாற்றிடும் - கூறுவீர்.

(கு-ரை.) குவ்வுருபு, கண்ணுருபின் றிரிபு. இது வேழம் வினாதல். (உஅ)

மலைவல் லியம்பிரி யாத்தில்லைக் கானுறை மாமதங்கி
மலைவல் லியம்பிள நீரின் பயோதரி வானிமய
மலைவல்லி யம்பிகை கான்முளை கல்வளை வாணன்பொங்க
மலைவல் லியம்பர வைபானெய் யாமுன் வரவில்லையே.

(இ-ள்.) மலை வல்லியம் பிரியாத் தில்லைக் கான் உறை மா மதங்கி - பொருகின்ற புலிகள் நீங்காத தில்லைவனமாகிய சிதம்பரத்திலே எழுந்தருளியிருக்கின்ற பெருமையாகிய தவப்பெண்ணும், வல் இளநீர் மலை இபம்பு இன் பயோதரி - சூதாடுகருவியையும் இளநீரையும் ஒப்புச்சொல்லுகின்ற நல்ல தனங்களை யுடையவரும், வான் இமய மலை

வல்லி - பெரிய இமயமலையிற் றோன்றியருளிய கொடியை நிகர்த்த வருமாகிய, அம்பிகை கால் முளை - உமாதேவியாருடைய புத்திரரும், கல்வளை வாணன் - கல்வளைப் பதியில் வாழ்பவருமாகிய விநாயகக்கடவுள், பொங்கு வல் அமலை இயம் பரவையான் எய்யாமுன் வர இல்லையே - மிகுந்த வலிய சத்தத்தைக் கொண்ட முரசாகிய கடலையுடைய மன்மதன் (தன் மலர்ப்பாணங்களை பென்மீது) செலுத்தாமுன்னர் வரவில்லையே (இனி யான் யாது செய்வேன்).

(து-ரை.) கால்முளை, இருபெயரொட்டு. இது கடவுண்மாட்டு மானுடப்பெண்டிர் நயந்தபக்கத்தில் தலைவி தன்னால் விரும்பப்பட்ட விநாயகக்கடவுள் வந்தருளாமையைக் கவன்றுரைத்தல். (உக)

வரம்பல வன்பருக் கீவா ரெனக்குமெய் வாழ்வுதரு
வரம்பல வன்கொன்றை மாவிகை யாத்தி வனைந்தகற்ற
வரம்பல வன்பெற்ற மாதங்க வானனர் மள்ளர்செய்யும்
வரம்பல வன்குண் டலர்மூடுங் கல்வளை வானவரே.

(இ-ள்.) அம்பு அலவன் கொன்றை மாலிகை ஆத்தி வனைந்த கல் தவர் அம்பலவன் பெற்ற மாதங்க ஆனனர்-கங்கைநீரையும் பிறைமதியையுங் கொன்றைப்பூமாலையையும் ஆத்திப்பூவையுந் (திருமுடியிற்) சூடிய மேருமலையாகிய வில்லினையுடைய சிவபெருமான் பெற்றருளிய யானைவதனத்தரும், மள்ளர் செய்யும் வரம்பு அலவன் குண்டு அலர் மூடும் கல்வளை வானவர் - உழவர் கட்டிய வரம்பிலுள்ள ஞெண்டின் குண்டுகளை மலர்கள் மூடுங் கல்வளைப்பதியிலுள்ள தேவருமாகிய விநாயகக்கடவுள், அன்பருக்கு பல வரம் ஈவார் - (தமது) அன்பர்கட்குப் பல வரங்களைக் கொடுப்பவ(ராதலின்), எனக்கும் மெய் வாழ்வு தருவர் - எனக்கும் மெய்ம்மையாகிய (மோக்ஷ) வாழ்வைத் தந்தருள்வார். (௩ப)

வானஞ் சலஞ்சலத் தீயொலி மண்மபங் காவுயிர்போ
வானஞ் சலஞ்சல மந்திடுங் காற்றுயர் மாற்றவரு

வானஞ் சலஞ்ச லெனவுரைப் பான்கல் வளைப்பதிவாழ்
வானஞ் சலஞ்சலக் கைத்தல மாறன் மருமகனே.

(இ-ள்.) வானம் சலம் சலத்தீ ஒலி மண் மயங்கா - ஆகாயத்தின் கூறுகிய செவியும் நீரின் கூறுகிய வாயுஞ் சினத்தையுடைய தேயுவின் கூறுகிய கண்ணுங் காற்றின் கூறுகிய மெய்யும் பிருதிவியின் கூறுகிய மூக்குமாகிய ஐம்பொறிகளினின்றுங் கலங்கி, அஞ்சு அலஞ்சு - (ஓசை சுவை ஒளி ஊறு நாற்றமென்னும்) ஐம்புலன்களு மலைவுற, உயிர்போவான் அலமந்திடுங்கால் - (உடம்பினின்றும்) உயிர்போதற்குச் சுழலுங்காலத்தில், கல்வளைப் பதி வாழ்வான் - கல்வளைப்பதியில் வாழ்பவரும், அம் சலஞ்சலக் கைத்தல மால்தன் மருமகன் - அழகிய பாஞ்சசன்னிய மென்னுஞ் சங்கைக்கொண்ட கரத்தினையுடைய விஷ்ணுமூர்த்திக்கு மருகருமாகிய விநாயகக்கடவுள், துயர் மாற்ற வருவான் அஞ்சல் அஞ்சல் என உரைப்பான் - துன்பத்தை நீக்க வருவாராகி (என்னை நோக்கி) அஞ்சற்க அஞ்சற்க என்று கூறியருள்வார்.

(கு-ரை.) அலஞ்சு அலைய வென்பதன் றிரிபு. வருவான் வினைமுற்று வினையெச்சம். (௩௧)

மகாந் தவள மலர்ச்சோலைப் பொங்கரின் வான்குளிரி
மகாந் தவழ்கல் வளையாகு வாகன வல்லைவவா
மகாந் தவள மருப்பானை வேங்கை மடங்கலெண்கு
மகாந் தவளைபுள் ளானுலு நின்னை மறப்பரிதே.

(இ-ள்.) மகரந்த வள மலர்ச் சோலைப் பொங்கரில் - தேனையும் அழகையுமுடைய மலர்ச்சோலையி லுள்ள மரங்களில், வான் குளிர் இமகாம் தவழ் கல்வளை ஆகு வாகன-பெருமையாகிய குளிர்ந்த சந்திரனாரப் பெற்ற கல்வளைப்பதியி லுள்ள மூடிக வாகனரே, வல்லைவாம - வல்லவையை வாமபாகத்திற் கொண்டவரே, கரம் தவளம் மருப்பு ஆனை வேங்கை மடங்கல் எண்கு மகரம் தவளை புள் ஆனுலும் - (யான்) கழுதையும் வெண்மையாகிய கொம்பினையுடைய யானையும்

புலியுஞ் சிங்கமுங் காடியு மகாமீனுந் தவளையும் பறவையுமாகப் பிறந் தாலும், நின்னை மறப்பு அரிது - உம்மை மறத்தல் கூடாது.

(கு-ரை.) பொங்கர், இமகரம்: ஆகுபெயர்கள். (கூஉ)

அரவம் புலிங்க வனற்கண்ண வென்றரி போற்றச்சிலம்
பாவம் புலிபணி கேட்பமன் றாடி யருண்மதலை
யரவம் புலியணி கோடீரன் கல்வளை யண்ணல்கண்ணே
யரவம் புலிய குணத்தா ரெனினு மவர்முத்தரே.

(இ-ள்.) அர அம் புலிங்க அனல் கண்ண என்று அரி போற்ற - (ஆன்மாக்களை இளைப்பாற்றும்பொருட்டுச்) சங்காரஞ்செய்பவரே அழகிய பொறியையுடைய அக்கினிக்கண்ணரேயென்று திருமால் துதிக்கவும், சிலம்பு அரவம் புலி பணி கேட்ப - (திருவடிச்) சிலம்பின தொலியை வியாக்கிரபாத முனிவரும் பதஞ்சலிமுனிவருங் கேட்கவும், மன்று ஆடி அருள் மதலை - (கனக) சபையின் கண்ணே ஆனந்ததாண்டவஞ்செய்தருளுகின்றவராகிய சிவபெருமான் பெற்றருளிய புத்திரரும், அரவு அம் புலி அணி கோடீரன் - சர்ப்பத்தையும் பிறைமதியையுமணிந்த சடையினை யுடையவரும், கல்வளை அண்ணல் கண்நேயர் - கல்வளைப்பதியி லெழுந்தருளியிருக்கின்ற தலைவருமாகிய விக்கினேசுவரரிடத்து அன்புடையவர், அவம் புலிய குணத்தார் எனினும் - தீமை சார்ந்த குணத்தினையுடையவ ராயினும், அவர் முத்தரே - அவர் சீவன் முத்தரே.

(கு-ரை.) புல்லிய என்றதின் லகரந் தொகுத்தது. (கூங)

..ப்பணி யாரம் பலபூண்டு தேர்முதற் றானைதற்சூழ்
தாப்பணி யாரைத் தடிந்துல காளவிற் சர்க்கரைசுந்
தரப்பணி யார மமுதுசெய் வோன்கல் வளைத்தலத்தா
தரப்பணி யார்வத் தொடுஞ்செய்து வாழ்த றகவுடைத்தே.

(இ-ள்.) தரப்பணி ஆரம் பல பூண்டு - கிரீடத்தையும் பல மணிவடங்களையும் பூண்டு, தேர் முதல் தானை தன் சூழ்தர - தேர்முதலா

கிய (சதுரங்க) சேனைகள் தன்னைச் சூழ்தலைச் செய்ய, பணியாரைத் தடிந்து உலகு ஆளவின் - பகைவரைச் செறுத்து உலகத்தை யாளுத லினும், சர்க்கரை சுந்தரப் பணியாரம் அமுதுசெய்வோன் - சர்க்கரை யையு மழகிய பண்ணிகாரங்களையுந் திருவமுதுசெய்பவராகிய விநாய கக்கடவுளது, கல்வளைத் தலத்து - கல்வளைப்பதியில், ஆதரப் பணி ஆர்வத்தொடுஞ் செய்து வாழ்தல் தகவு உடைத்து - அன்பு செய்தலாகிய பணியை ஆசையோடுஞ் செய்து வாழுதல் தகுதியுடையது.

(கு-ரை.) பணியாரம் மருஉமொழி. ஆதரம் ஆகுபெயர். (உச)

தகரங் கமழ்குந் தளந்தர ளந்தள வின்னகையீர்
தகரங் கமலன் மணக்கோலஞ் செய்த றடாதிருபா
தகரங் கமலஞ் சிவந்தோன் மருகன் றவமற்றபா
தகரங்கண் மேவருங் கல்வளை யான்மலைச் சாரலிலே,

(இ-ள்.) தகரம் கமழ் குந்தளம் - சாந்து மணக்கப் பெற்ற கூந் தலையும், தாளம் தளவு இன் நகையீர்-முத்தும் முல்லையரும்பும்போலு முறுவலையு முடையீர், இரு பாத கரங் கமலஞ் சிவந்தோன் மருகன் - இரண்டு பாதங்களுங் கைகளுஞ் செந்தாமரைப் பூப்போலச் சிவந்தவரா கிய விட்டுணுவுடைய மருகரும், தவம் அற்ற பாதகர் அங்கண் மே அரு கல்வளையான் - (முன்னர்ச்செய்த) தவமில்லாத பாதகர்கள் அவ்விடத் திற் பொருந்துத லில்லாத கல்வளைப்பதியை யுடையவரும் ஆகிய விநா யகக்கடவுளது, மலைச்சாரலில் - மலைச்சாரலில், தகர் - (ஈண்டுவெட்டக் கொணர்ந்த) ஆடு, அங்கமலன் மணக்கோல் அஞ்சு எய்தல் தடா... அனங்கனாகிய மன்மதன் நறுமணத்தினைக் கொண்ட மலர்ப்பாணங்க ளைந்தினையும் எய்தலைத் தடுக்காது (ஆதலின் வெறியாட்டாள நீ வாளா உயிர்க்கொலை செய்யவேண்டா).

(கு-ரை.) மே முதனிலைத் தொழிற்பெயர். இது பாங்கி வெறி விலக்கல். (உரு)

இலங்கை யிராவணன் கண்டதுண் டம்பட வெய்சரம்ப
யிலங்கை யிராமன் கடதாரை சிந்து மிரண்டிருகோ
டிலங்கை யிராவதன் றாழ்கல் வளைய னெனின்முத்திவா
யிலங்கை யிராது கடைத்தா டிறப்பிப்ப னேரம்பனே.

(இ-ள்.) இலங்கை இராவணன் கண்டதுண்டம் பட எய் சரம் பயில் அம் கை இராமன் - இலங்கையிலுள்ள இராவணன் கண்ட துண்டம்படச் செலுத்திய பாணம்பொருந்தப்பெற்ற அழகியகரத்தினை யுடைய இராமாவதாரத்தையுடைய விட்டுணுவும், கட தாரை சிந்தும் இரு இரண்டு கோடு இலங்கு ஐராவதன் தாழ் கல்வளையன் எனின் - மத மழையைச் சொரிகின்ற நான்கு கொம்பு விளங்கப்பெற்ற ஐரா வத யானையை யுடையனாகிய இந்திரனும் வணங்கப்பெறுங் கல்வளைப் பதியி லுள்ள விநாயகக்கடவுள் என்று துதித்தால், முத்தி வாயில் அங் கை இராது - மோக்கவாயில் அங்கு (திறவுபடாது) இராது, ஏரம்பன் கடைத் தாள் திறப்பிப்பன்-அவ் விநாயகக் கடவுள் அவ் வாயிற் கதவின் றாளைத் திறப்பிப்பார்.

(கு-ரை.) அங்கு அங்கை என ஈறு திரிந்தது; ஐகாரச் சாரியை பெற்றதெனினு மமையும். கடை ஆகுபெயர். (நசு)

அம்பலங் காசில் வயல்சூழுங் கல்வளை யைங்கரனாட்
டம்பலங் காசியென் றாய்கேள்வர் பின்செல வாமதலா
யம்பலங் காசின் முலையாணின் கைதந்த வாசறப்பொன்
னம்பலங் காசிசென் றேவா தரவென் னருஞ்சொர்க்கமே.

(இ-ள்.) அம்பு அலங்கு ஆசு இல் வயல் சூழும் கல்வளை ஐங் கரன் நாட்டு-நீர் அசையப்பெற்ற குற்றமில்லாத வயல் சூழப்பட்ட கல் வளைப்பதியாகிய விநாயகக் கடவுளது நாட்டில், அம்பல் அங்கு ஆசி என்று ஆய் கேள்வர் பின் செல் அவா மதலாய் - பலரறிந்து புறங் தூற்றலை அங்கு வாழ்த்து என்று கருதுந் தலைவர் பின்சென்ற ஆசை

யைத் தருகின்ற மகனே, என் அரும் சொர்க்கம் தா - எனது அரிய முலைப்பாலைத் தருதற்கு, காசின் முலையாள் அம்பலம் நின் கை தந்த ஆசு அற - (பலருமுறுதல் செய்யுங்) குற்றத்தினையுடைய முலையினையுடையவளாகிய பரத்தை அழகிய பழத்தை நினது கையிற் றந்த குற்றம் நீங்க, பொன்னம்பலம் காசி சென்றே வா - சிதம்பரத்துக்குங் காசிக்குஞ் சென்றே வருவாய்.

(கு-ரை.) அவர் மதலாய் என்று பாடமாயின் அத் தலைவாது மகனே என்று பொருளுரைக்க; இங்ஙனம் தலைவன் பரத்தை வீட்டுக்குக் கொண்டுசென்றது பொருது எமது மதலாயென்று விளித்திலளென்க. காசு, சொர்க்கம், பொன்னம்பலம்: ஆகுபெயர்கள். இது தலைவி பரத்தையைப் பழித்தலின்பாற் படும். பரத்தையைப்பழித்தல் என்றொருகிளவி அகப்பொருளில் யாண்டுக் கூறப்பட்டதெனின் தலைமகட்குக் கற்புக்காலத்துக்குரிய வொழுகலாறெல்லாந்தொகுத்துணர்த்தியவிடத்துப் பரத்தையைப் பழித்தலுங் கூறப்பட்டதென்க. (௩௭)

கமண்டலம் பாற்கரன் போலாழி யேந்துங் கடவுளர்நா
கமண்டலம் பாதலங் கைகூப்பு தாளென்று காட்டுவையர்க்
கமண்டலம் பார்க்குமுய் யானம் வளைக்குங் கழனியிற்சங்
கமண்டலம் பாய முழங்கிடுங் கல்வளைக் காரணனே.

(இ-ள்.) அர்க்க மண்டலம் பார்க்கும் உய்யானம் வளைக்குங் கழனியிற் சங்கம் - சூரியமண்டலத்தைக் (கிட்டிப்) பார்க்கும் சோலை சூழப்பெற்ற வயலிடத்துள்ள சங்குகள், மண்டு அலம் பாய முழங்கிடும் கல்வளைக் காரணனே - (உழும்போது) நெருங்கிய கலப்பைகள் பாய முழங்குங் கல்வளைப்பதியி லுள்ள (யாவற்றுக்குங்) காரணராகிய விநாயகக்கடவுளே, கமண்டலம் பாற்கரன்போல் ஆழி ஏந்துங் கடவுளர்-கமண்டலத்தையும் சூரியன்போலுஞ் சக்கரத்தையும் (முறையே) ஏந்திய பிரம விட்டுணுக்களும், நாகம் மண்டலம் பாதலம் - விண்ணுலகத்தாரும் மண்ணுலகத்தாரும் பாதல லோகத்தாரும், கைகூப்பு

தாள்-கைகூப்பி வணங்கும் (நமது) திருவடியை, என்று காட்டுவை-(எனக்கு) எந்நாட் காட்டியருள்வீர்.

காரண வாத திரிசூல பூத கணேசவன்பா
காரண வாததென் கல்வளை நாத கடம்பணிவா
காரண வாத முதலைந் தினைவைத்துக் காத்தழிக்குங்
காரண வாத நடந்தை யுலாவுங் கலகத்திலே.

(இ-ள்.) ரணவாத திரிசூல - போர்வாதத்திற்குரிய முத்தலைச் சூலத்தை யுடையவரே, பூத கணேச - பூதங்களுக்குத்தலைவரே. அன்பா கார் அணவாத தென் கல்வளை நாத - அன்புடையாரல்லார் நெருங்காத அழகிய கல்வளைப்பதியி லுள்ள நாதரே, கடம்பு அணி வாகார் அண - கடப்பமலர் மாலையை யணியப்பெற்ற புயத்தினையுடைய ராகிய கந்த ஸ்வாமிக்கு முன்னோரே, வாதம் முதல் ஐந்தினை வைத்துக் காத்து அழிக்குங் காரண - ஆகாயமுதலிய பஞ்சபூதங்களையும் (உண்டாக்கி) வைத்துக் காத்து அழிக்குங் காரணரே, வாத நடந்து ஐ உலாவுங் கலகத்திலே கா - வாதம்போய்ச் சேடம் உலாவும் (மரணவேதனை நிகழும்) கலகத்திலே (என்னைக்) காத்தருள்வீர்

(கு-ரை.) வாகர் எனற்பாலது வாகார் என நீண்டது. வாதம் காற்று; ஈண்டு காரணகாரிய ஒற்றுமை நயம்பற்றி அதனைத் தரும் ஆகாயத்திற்கு ஆனது. (நக)

கலகத் தமரத் திரையின் றுயரைக் களைந்தருள்ச
கலகத் தமாக தக்கம்பி யாற்செய் கடுக்கைபுல்ல
கலகத் தமரளி வாழ்சோலைக் கல்வளைக் கற்பகவென்
கலகத் தமரவிந் தத்திருக் காலெந்தக் கால்வைப்பதே.

(இ-ள்.) கலகத் தமரத் திரையின் துயரைக் களைந்தருள் சகல கத்த - (அன்பருக்குக் காமாதி யறுபகைப்) போராகிய ஒலியினை யுடைய கடலால் வருந் துன்பத்தை நீக்கியருளுஞ் சருவகர்த்தரே, மாக

தக் கம்பியாற் செய் கடுக்கை புல் அகல - மரகதக் கம்பியாற் செய்த (காம்பையுடைய) கொன்றைப் பூமாலை பொருந்துந் திருமார்பினையுடையவரே, கத்து அமர்அளி வாழ்சோலைக் கல்வளைக் கற்பக - ஒலிக்கின்ற மிகுதியாகிய வண்டுகள் தங்குஞ் சோலையையுடைய கல்வளைப்பதியில் வாழுங் கற்பகவிநாயகரே, என் கல் அகத்து-எனது கல்லை யொத்த நெஞ்சத்தில், அம்அரவிந்தத் திருக்கால் எந்தக்கால் வைப்பது - அழகிய தாமரைமலர் போலுந் திருவடியை எக்காலம் வைப்பது (கூறியருள்வீர்).

(கு-ரை.) உவமைக்கும் உவமிக்கப்படும் பொருட்கு முள்ள ஒற்றுமைபற்றி மரகதக்கம்பியாற் செய்தது போன்றதைச் செய்கடுக்கையென்றார். (சo)

வைபத் திருக்கை யறுப்பா னெகினம் வளைமணிக்கு
வையத் திருக்கை கயிலையில் வெண்மங்கு னேர்கல்வளை
வைபத் திருக்கைப் பரியாக்கி பிள்ளைக்கு மானனையார்
வையத் திருக்கை யயுர்ந்தாளென் றோது மதுகரமே.

(இ-ள்.) மதுகரமே - வண்டுகளே, வையத் திருக்கை அறுப்பான் - பூமியிலுள்ள குற்றத்தை நீக்குபவரும், வளைமணிக் குவையத்து எகினம் இருக்கை - சங்கிற்பிறந்த முத்துக்குவியலில் அன்னமிருத்தல், கயிலையில் வெள்மங்குல் நேர் - வெள்ளிமலையின்மேற் படியும் வெண்மையாகிய மேகத்தை நிகர்க்கப்பெறும், கல்வளை - கல்வளைப்பதியிலுள்ள, இருக்கை வையத்து பரிஆக்கி பிள்ளைக்கு - வேதத்தைத் தேரிற் கட்டப்படுங் குதிரையாக்கிய சிவபெருமானுடைய குமாரருமாகிய விநாயகக்கடவுளுக்கு, மான் அனையார் வைய - மானை நிகர்த்த அயலாரேச, திரு - இலக்குமியை நிகர்த்த தலைவி, கை அயர்ந்தாள் என்று ஓதும் - கைசோர்ந்தாளென்று சொல்லும்.

(கு-ரை.) திருக்கையயர்ந்தாள் என்பதில் ககரம் விரித்தல். இது கடவுண்மாட்டு மானுடப்பெண்டிர் நயந்த பக்கத்தில் வண்டுவிடுதூது.

கரவடம் பத்தி யிலார்க்களிப் போயிருள் காய்ந்திடும்பாற்
கரவடம் பத்தி யொளிபாய் முலைச்சங் கரிபெறுமைங்
கரவடம் பத்திரக் காறுஞ்சு மான்மரு மாசந்த்ரசே
கரவடம் பத்திரட் கல்வளை யாயெனைக் காத்தருளே.

(இ-ள்.) பத்தியிலார்க்கு கரவடம் அளிப்போய் - (தம்மீது) பத்தியில்லாதவருக்குத் தீமையைக் கொடுப்பவரே, இருள் காய்ந்திடும் பாற்கர - (மல) இருளை வெகுளும் (ஞான) சூரியரே, பத்தி வடம் - வரிசையாகிய மணிவடத்தில், ஒளி பாய் - ஒளி பாயப்பெற்ற, முலைச் சங்கரி பெறும் ஐங்கர - முலையையுடைய உமாதேவியார் பெற்ற ஐங்கரரே, வடம் பத்திரக்கால் துஞ்சும் மால் மருகா - ஆலிலையிடத்துத் துயில்செய்யும் விட்டுணுவுக்கு மருகரே, சந்த்ர சேகர - பிறையையணிந்த சடையினையுடையவரே, அடம்பத் திரள் கல்வளையாய்-அடம்பங்கொடித் திரளையுடைய கல்வளைப்பதியை யுடையவரே, எனைக் காத்தருள் - என்னைக் காத்தருள்வீர்.

(கு-ரை.) கரவடம்-களவு; ஈண்டு தீமைப்பொருளை யுணர்த்தியது.

அருந்துதிக் கையமில் கற்பீந்த மேனை யசலவரை
யருந்துதிக் கைக்கு மகளாய்ப் பிறந்திடு மன்னைவிட
மருந்துதிக் கைப்புனை கூறைப் பினகி யருள்கல்வளை
யருந்துதிக் கைக்குன்ற மேயடி யேனுன் னடைக்கலமே.

(இ-ள்.) அருந்துதிக்கு ஐயம் இல் கற்பு ஈந்த மேனை அசல அரையரும் துதிக்கைக்கு - அருந்ததிக்கு ஐயமில்லாத கற்பைக் கொடுத்த மேனையும் மலையாசனும் போற்றும்படி, மகளாய்ப் பிறந்திடும் அன்னை - (அவர்கண் மாட்டு) மகளாகத் தோன்றிய உமாதேவியும், விடம் அருந்து திக்கை கூறை புனை பினகி - நஞ்சையுண்ட திக்கை ஆடையாகப் புனைந்த சிவபெருமானும், அருள் - பெற்ற, கல்வளை அரும் துதிக்கைக் குன்றமே - கல்வளைப்பதியிலுள்ள அருமையாகிய துதிக்கையை

யுடைய மலைபோலும் யானையாகிய விநாயகக்கடவுளே, அடியேன் உன் அடைக்கலம் - அடியே னுமக்கு அடைக்கலம். (சரு)

அடைக்கலங் காவென்ற பேர்க்கினி யான்மட வன்னக்கண
மடைக்கலங் காரஞ் சினையென் றணைகல் வளைவரைவா
யடைக்கலங் காட்டுந் தனத்தீர் விரக மகலப்பொன்னி
லடைக்கலங் காக்கவென் றென்றோ குணதிசை யாவதுவே.

(இ-ள்.) அடைக்கலம் கா என்ற பேர்க்கு இனியான்-(யாம் நமக்கு) அடைக்கலம் (எம்மைக்) காத்தருள்வீரென்று சொல்பவருக்கு இனியவராகிய விநாயகக்கடவுளது, மட அன்னக் கணம் அலங்கு ஆரம் சினை என்று அடைக்கு அணை கல்வளை வரைவாய்-மடமையாகிய அன்னக் கூட்டம் ஒளி செய்கின்ற முத்துக்களைத் (தம்) முட்டையென்று அடைகாத்தற்குச் சாருங் கல்வளைப்பதியின் மலையிடத்துள்ள, அடைக்கலங் காட்டுந் தனத்தீர்-(திரட்சியால்) ஊர்க்குருவியின் வடிவைக் காட்டும் முலையினையுடையீர், விரகம் அகல - (எனது) காமநோய் நீங்க, பொன்னில் அடைக்கல் அங்காக்க என்று குணதிசை ஆவது என்றோ- இலக்குமியின் வீடாகிய தாமரை திறவுபடச் சூரியன் றோன்றுவது எப்பொழுதோ (கூறுவீர்).

(து-றை.) இது பெண்பாற் கைக்கிளையின்பாற்படும். (சச)

வனத்தா னையன்றொழு மம்மானை யம்புலி மானணிசெவ்
வனத்தானை யன்ன வயற்கல் வளைப்பெரு மானைமறை
வனத்தா னையனக் கணைமலை மான்மரு மானையைம்பூ
வனத்தானை யன்புசெய் வார்முலைப் பாலை மறந்தவரே.

(இ-ள்) வனத்தான் - துழாய்மாலையை யுடையராகிய விட்டுணுவும், அயன் - பிரமதேவரும், தொழும் அம்மானை - வணங்கு மிறைவரும், அம்புலி மான் அணி செவ் வனத்தானை - பிறையையும் மானையுந் தரித்த செம்மையாகிய நிறத்தினையுடையவரும், அன்னவயல் கல்

வளைப் பெருமானை - அன்னங்களையுடைய வயலையுடைய கல்வளைப் பதியிலுள்ள பெருமையை யுடையவரும், மறை வனத்தான் நயனக் கணை மலைமான் மருமானை - வேதாரணியப்பதியையுடையராகிய சிவ பெருமானுக்கும் விழியாகிய பாணத்தைக்கொண்ட உமாதேவிக்கும் புத்திரரும், ஐம்பூவன் அத்தானை - ஐந்துமலர்ப்பாணங்களை யுடையனு கிய மன்மதனுக்கு மைத்துனரும் ஆகிய விநாயகக்கடவுளை, அன்பு செய்வார் - அன்பு செய்பவர், (யோனிகளிற்சென்று பிறத்த லின்மை யின்) முலைப்பாலை மறந்தவரே - முலைப்பா லருந்துதலை மறந்தவரே (ஆவர்).

(து-ரை.) முலைப்பால் ஆகுபெயர். (௪௫)

தவராக மாகன கச்சிலை கோலிபொற் றாள்பெறமைத்
தவராக மாக விடந்தவன் சாபந் தவிர்த்தவன்மா
தவராக மாகநற் காமுரல் கல்வளைத் தந்திநன்மா
தவராக மாகரன் கண்ணுறு பூங்கொன்றைத் தாமத்தனே.

(இ-ள்.) தவராக மா கனகச் சிலை கோலி பொன் தாள் பெற - வில்லாகப் பெருமையாகிய பொன்மலையை வளைத்த சிவபெருமானு டைய பொன் போலுந் திருவடியைக் (காணப்) பெற, மைத்த வரா கம் ஆக இடந்தவன் சாபந் தவிர்த்தவன்-கருமையுற்ற பன்றிவடிவாகி (பூமியைக்) கிழித்தவராகிய விட்டுணுவுக்கு (உமாதேவியாரிட்ட) சா பத்தை நீக்கினவர், (யாவரெனில்), மா தவ ராகம் ஆக நல் கா முரல் கல்வளைத் தந்தி - வண்டுகள் மிகவு மிராகமாக நல்ல சோலையிற் பாடுங் கல்வளைப்பதியிலுள்ள யானையும், நல் மாதவர் ஆகம் ஆகரன்-நல்ல முனி வரது நெஞ்சமாகிய உறைவிடத்தை யுடையவரும், கள் நாறு கொன் றை பூ தாமத்தனே - தேன் மணக்கப்பெற்ற கொன்றைப் பூமாலையை யுடையவருமாகிய விநாயகக்கடவுளே. (௪௬)

மத்தன் பராபரை சீராட்டுப் பிள்ளை மணிமந்தா
மத்தன் பராவிச் சிவந்திடு சேவடி வாய்ந்தபது

மத்தன் பாராகவெண் ணீறணி கல்வளை வானவனு
மத்தன்ப ரானவ ரன்றே கயிலையில் வாழ்பவரே.

(இ-ள்.) கயிலையில் வாழ்பவர் - கயிலாசமலையில் வாழ்பவர்கள், மத்தன் - மத்தம்பூவைச் சூடுபவராகிய சிவபெருமானுக்கும், பராபரை- உமாதேவிக்கும், சீராட்டுப்பிள்ளை - சிறப்புச்செய்தலையுடைய பிள்ளையும், மணி மந்தர மத்தன் பராவிச் சிவந்திடு சேவடி வாய்ந்த பதுமத்தன் - அழகிய மந்தரமலையை மத்தாகக் கொண்டவராகிய விட்டுணுவால் வணங்கப்பட்டுச் சிவந்த செம்மையையுடைய திருவடியாகிய மாட்சிமைப்பட்ட தாமரைமலரை யுடையவரும், பராக வெண்ணீறு அணி கல்வளை வானவன் - தூளாகிய திருவெண்ணீற்றை யணியுங் கல்வளைப்பதியிலுள்ள வானவருமாகிய விநாயகக்கடவுளது, நாமத்து அன்பரானவ ரன்றே - திருநாமங்களை யுரைத்தலில் அன்பரானவர்களன்றே.

(து-ரை.) பராவல் ஈண்டு வணங்கல். (௬௭)

பவநம் புயர்தொண்டர்க் கில்லாமை யாக்கும் பரன்கனனீர்
பவனம் புயங்க முடியேந்து மண்விண் படிவன்கருப்
பவனம் புயலளக் குங்கல் வளைப்பதி மீதிலுறை
பவனம் புயன்றொழும் பாதாம் புயனெம் பரதெய்வமே.

(இ-ள்.) நம்பு உயர் தொண்டர்க்கு பவம் இல்லாமை ஆக்கும் பரன் - (தம்மை) நம்பிய உயர்ந்த அடியாருக்குப் பிறவி இன்மையாக்கும் முன்னனவரும், கனல் நீர் பவனம் புயங்கம் முடி ஏந்து மண் விண் படிவன் - நெருப்பும் நீருங் காற்றும் ஆதிசேடன்சிரத்தாலேந்துகின்ற நிலமும் ஆகாயமும் ஆகிய பஞ்ச பூத வடிவானவரும், கருப்பவனம் புயல் அளக்கும் கல்வளைப்பதிமீதில் உறைபவன் - கருப்பஞ்சோலை மேக மண்டலத்தை யளக்கப்பெறுங் கல்வளைப்பதியின்கண் எழுந்தருளியிருப்பவரும், அம்புயன் தொழும் பாத அம்புயன் ஏ-பிரம

தேவரால் வணங்கப்படுந் திருவடித்தாமரையை யுடையவருமாகிய விநா யகக்கடவுளே, எம் பர தெய்வம் - எமது மேலாகிய தெய்வம்.

(கு-ரை.) புயல் ஆகுபெயர். (சஅ)

பரமானனந் தக்கன் மழைமாரி காத்திடும் பைங்கனகாம்
பரமானனந் தக்கந் தரவிந்தி ராணி பதியயனும்
பரமானனந் தக்கல் வளையத்த னுத்தம பத்தர்சித்தன்
பரமானனந் தப்பிள்ளை யார்துணைச் சேவடிப் பங்கயமே.

(இ-ள்.) கல் மழை மாரி நந்த ஆன் காத்திடும் பைங் கனக அம் பர மால் - கல்மழையால் வருந் (தீங்கு) கெடப் பசுக்களைக் காத்த பசும் பொன்னுடையை யுடைய விஷ்ணுமூர்த்திக்கும், நந்தக் கந்தர இந்தி ராணி பதி - சங்குபோலுங் கழுத்தினையுடைய இந்திராணி கணவனு கிய இந்திரனுக்கும், அயன் - பிரமதேவருக்கும், உம்பர் - தேவருக் கும், அமான்-இறைவரும், அந்தக் கல்வளை அத்தன் - அழகையுடைய கல்வளைப்பதியி லிருக்கின்ற யாவர்க்குந் தந்தையும், உத்தம பத்தர் சித் தன் - உத்தம அடியாருடைய சித்தத்தில் இருப்பவருமாகிய, பரமா னந்தப்பிள்ளையார் துணைச் சேவடிப் பங்கயமே - பரமானந்தப்பிள்ளை யாருடைய இரண்டாகிய சேவடித் தாமரையே, பரம் - (எனக்குத்) தஞ்சம்.

(கு-ரை.) அம்மானில் மகரந்தொகுத்தது. (சகூ)

பங்கைய மாலை யளிக்குழல் வாய்முலை பண்மொழிகோ
பங்கைய மாலை யனையாட் குதவரன் பாலன்றடப்
பங்கைய மாலை யலர்கல் வளைக்கண் பரிந்தொருகூ
பங்கைய மாலையந் தொட்டியற் றூரெப் படியுய்வரே.

(இ-ள்.) அம் மாலை அளிக் குழல் - அழகிய மாலையை யணிந்த வண்டுகள் (பொருந்துங்) கூந்தலையுடைய, வாய் முலை பண் மொழி கோபம் கயம் ஆலை அனையாட்கு - வாயும் முலையும் பண்ணையுடைய

சொல்லும் (முறையே) இந்திரகோபத்தையும் யானையையும் கரும்பையும் நிகர்த்தவராகிய உமாதேவியாருக்கு, பங்கை உதவு அரன் பாலன் - (தமது திருமேனியி லொரு) பாகத்தைக் கொடுத்தருளிய சிவபெருமானுக்குப் புத்திரராகிய விநாயகக்கடவுளது, தடப் பங்கைய மாலை அலர் கல்வளைக்கண் - தடாகத்திற் றாமரைகள் வரிசையாக வலர்கின்ற கல்வளைப்பதியின்கண், பரிந்து ஒரு கூபம் கயம் தொட்டு - அன்புற்று ஒரு கிணற்றை (ஆவது) குளத்தை (ஆவது) தோண்டி, ஆலயம் இயற்றார் - கோயிலை இயற்றாதவர்கள், எப்படி உய்வர் - எவ்வாறு (பிறவியினீங்கி) உய்வார்கள்?

(கு-ரை.) அம்மாலையில் மகரந்தொகுத்தது. (௩௦)

வருந்தும் பிறவி யலைவாரி நீந்த மதுவினைக்க
வருந்தும்பி வீழ்மலர்த் தாட்புணை தாகன்னல் வான்கதிர
வருந்தும் ப்ரகாச மணித்தேர் தடுக்கும் வளக்கல்வளை
வருந்தும்பி மாமுகத் தையாமெய் யாகுண்ட வண்டியனே.

(இ-ள்.) கன்னல் வான் கதிரவர் உந்தும் பிரகாச மணித் தேர் தடுக்கும் வளம் கல்வளை வரும் மா தும்பி முகத்து ஐயா - கரும்புகள் ஆகாயத்திலே சூரியன் செலுத்துகின்ற பிரகாசமாகிய அழகையுடைய இரதத்தைத் தடுக்கும் வளத்தையுடைய கல்வளைப்பதியி லெழுந்தருளியிருக்கின்ற பெருமையாகிய யானை வதனத்தை யுடைய ஐயரே, மெய்யா - மெய்ம்மையானவரே, குண்ட வண்டியனே - குடம்போலும் வயிற்றினையுடையவரே, வருந்தும் பிறவி அலை வாரி நீந்த - வருந்துகின்ற பிறவியாகிய அலையையுடைய கடலை (யான்) கடத்தற்கு, மதுவினைக் கவரும் தும்பி வீழ் மலர் தாள் புணை தா - தேனைக் கவருகின்ற வண்டுகள் விழுகின்ற தாமரைத் தாளாகிய தெப்பத்தைத் தந்தருள்வீர்.

வண்ட மருங்குலை யான்மரு கன்கல் வளைச்சிலம்பா
வண்ட மருங்குலை ஞாளியு மாறு வருமதர்வாய்
வண்ட மருங்குலை விற்கொண்ட வேட்டுவர் மாவலிது
வண்ட மருங்கு விளவ்ஞ்சி பாலல்லின் வாரலையே.

(இ-ள்.) வண்டு அமரும் குலையான் மருகன் கல்வளைச் சிலம்பா-வண்டுகள் பொருந்துகின்ற துழாய்மாலையையுடைய விஷ்ணுவுக்கு மருகராகிய விநாயகக்கடவுளது கல்வளைப்பதியி லுள்ள பொருப்பனே, வண் தமரும் குலை ஞாளியும் மாறு - (இரவுக் குறி குறித்தற்குரிய இல்லினைச்சார்ந்த வுள்ளிடத்தில் எமது) வளவிய சுற்றத்தவரும் குலைக்கின்ற நாய்களும் மாறுகும், (அன்றியும்) வரும் அதர் வாய் வண்டு அமரும் குலை வில் கொண்ட வேட்டுவர் மா (மாறு) - (நீ) வரும் வழியில் அம்பு பொருந்திய குதையினையுடைய வில்லைக் கொண்ட வேட்டுவர்களும் மிருகங்களும் மாறுகும், (ஆதலின்) வலி துவண்ட மருங்குல் இள வஞ்சிபால் அல்லின் வாரலை - கொடிபோலத் துவண்ட விடையினையுடைய இளமையாகிய தலைவியிடத்து இராவில் வாராதொழிவாய்.

(கு-ரை.) குல்லை வல்லி என்பவற்றின் லகரந் தொக்கன. இது தோழி இறைவன் வரவை மறித்தல். (௫௨)

வாரிக் கடுக்கை தனையண்டர் சொல்ல வரவெனைநீர்
வாரிக் கடுக்கையி னற்பாவி யீர்கன் மனத்துவைத்தேன்
வாரிக் கடுக்கைமென் றுன்றுஞ்சு காமயி லாடக்கண்டு
வாரிக் கடுக்கைசெம் பொன்றூற்று கல்வளை வாசனையே.

(இ-ள்.) அண்டர் கடுக்கைதனை சொல்ல வாரி வர - பகைவராகிய அயலார் பழிமொழியைச் சொல்ல வாயிலில் வர, நீர் எனை வாரி கடுக்கையினுல் - நீவி ரென்னை மிகவுஞ் சினத்தலினாலே, பாவியீர் - பாவிகாள், ஆன் வார் இக்கு அடுக்கை மென்று துஞ்சு கா மயில் ஆடக் கண்டு - பசுக்களானவை நீண்ட கருப்பந் திரளை மேய்ந்து துயிலப் பெறுஞ் சோலையிலே மயில்க ளாடக்கண்டு, கடுக்கை செம் பொன் வாரித் தூற்று கல்வளை வாசனை - கொன்றைமரங்கள் (தம் மலர்களாகிய) செம்பொன்னை வாரித் தூற்றுகின்ற கல்வளைப் பதியில் வாசஞ் செய்பவராகிய விநாயகக்கடவுளை, கல் மனத்து வைத்தேன் - (இடையருது எனது) கல்லை யொத்த மனத்தி லிருத்தினேன்.

(கு-ரை.) இது கடவுண்மாட்டு மானுடப்பெண்டிர் நயந்த பக்கத்தில் தலைவி தன்வருத்த மிடையறு திருத்தற் காரணங் கூறல். (ருரு)

வாசவ னந்தர நாட்டோர் துதிக்கு மதக்கலுழி
வாச வனந்தற்கு ஞானோப தேசம் வழங்குமெய்யா
வாச வனந்த வளவளை சேர்கல் வளைப்பதியின்
வாச வனந்த ரவிபோ லுன் றாடலை வைத்தருளே.

(இ-ள்.) வாசவன் அந்தர நாட்டோர் துதிக்கும் மதக்கலுழி வாச- இந்திரனும் விண்ணுடோராகிய தேவர்களுந் துதிக்கின்ற மதநீராகிய கான்யாற்று வாசனையை யுடையவரே, அனந்தற்கு ஞான உபதேசம் வழங்கு மெய்யா - விஷ்ணுவுக்கு ஞானோபதேசத்தை யருளிய மெய்யரே, வாச அனம் தவள வளை சேர் கல்வளைப்பதியின் வாச - சிறகையுடைய அன்னங்களும் வெண்மையாகிய சங்குகளுஞ் சேரப்பெற்ற கல்வளைப் பதியில் வாசஞ்செய்பவரே, அனந்த ரவி போல் உன் தாள் தலை வைத்தருள்—அனந்தஞ் சூரியரை நிகர்த்த உமது திருவடியை (என்) சிர மீது வைத்தருள்வீர். (ருசு)

அருக்கரைக் கன்ன றொடுங்கல் வளைய னறுகிதழி
யருக்கரைக் கன்னங்கை யைத்தந்தை யாயுடை யான்வினைநே
யருக்கரைக் கன்னவிற் றீர்ப்பான் வரைமின் னராமணிப்பை
யருக்கரைக் கன்ன நடைக்கென்ற ஞவி யகன்றதுவே.

(இ-ள்.) கன்னல் அருக்கரை தொடும் கல்வளையன் - கரும்புகள் சூரியனைத் தொடுங் கல்வளைப்பதியில் வாழ்பவரும், அறுகு இதழி அருக்கரை கல் நங்கையை தந்தை ஆய் உடையான்- அறுகையுங் கொன்றைப்பூ மாலையையு மெருக்கம்பூ மாலையையுஞ் சூடுபவராகிய சிவபெருமானையும் மலைமகளாகிய உமாதேவியாரையும் (முறையே) பிதாவும் மாதாவு மாக வுடையவரும், நேயருக்கு வினை அரைக் கன்னலில் தீர்ப்பான் வரை மின் - அன்பர்களுக்குத் தீவினையை அரை நாழிகையிற்

தீர்ப்பவருமாகிய விநாயகக் கடவுளுடைய மலையிற் பெண்ணினது, அரா மணிப் பை அருக்கு அரைக்கு அன்ன நடைக்கு என்றன் ஆவி அகன்றது - சர்ப்பத்தினது இரத்தினத்தையுடைய படம்போன்ற அல்குலுக்கும் அன்னநடைபோன்ற நடைக்கும் (ஆக) எனதுயிர் கழிகின்றது.

(து-றை.) அரை, அன்னம்: ஆகுபெயர்கள். இது தலைவனுற்ற துரைத்தல். (நரு)

அகம்பத்தர் நெஞ்சமுங் கல்வளைக் கோட்டமு மானவன்றீ
யகம்பத்த ரைச்சங் கரித்தோன் மருகன்றண் டாழிவெள்ளி
யகம்பத்த ரென்றளி யூதாத பூவிறைத் தன்புருகி
யகம்பத்தர் தாம்பெறும் பேறய னாலு மளப்பரிதே.

(இ-ள்.) பத்தர் நெஞ்சமும் கல்வளைக் கோட்டமும் அகம் ஆனவன்-அடியவர்களுடைய மனத்தையுங் கல்வளைப்பதியையும் உறைவிடமாகக் கொண்டவர், தீய கம் பத்தரைச் சங்கரித்தோன் மருகன் - கொடிய தலை பத்தினை யுடையனாகிய இராவணனை யழித்த விஷ்ணுவுக்கு மருகர், தண்டு ஆழி வெள்ளிய கம்பு அத்தர் என்று - தண்டாயுதத்தையுஞ் சக்கரத்தையும் வெள்ளிய சங்கையும் ஏந்திய திருக்கரத்தினை யுடையவர் என்று விநாயகக்கடவுளைத் துதித்து, அளி ஊதாத பூ இறைத்து அன்பு உருகிய கம்பத்தர் தாம் பெறும் பேறு - வண்டுகளூதாத புதிய மலர்களைத் தூவி அன்பினால் (உள்ளம்) உருகுகின்ற (மெய்) விதிர்ப்புடையவர்களடையும் பேறு, அயனாலும் அளப்பு அரிது-பிரமதேவராலு மளவிடுத லரிது. (நசு)

அப்பா தகமல நீக்கிச் சிலம்பிசை யார்த்திடுங்கோ
லப்பா தகமலம் பூசித்து நேசிக்க வன்புதவா
யப்பா தகமலங் கார்வயற் கல்வளை யாதிபொன்று
தப்பா தகமலர் தாங்குஞ் சடைக்கரு ணாகரனே.

(இ - ள்.) அப்பா - அப்பரே, தக மலங்கு ஆர் வயல் கல்வளை ஆதி - மிக மலங்கு மீன்கள் பொருந்திய வயலையுடைய கல்வளைப் பதியில் வாழு மாதியே, பொன் தாது அப்பாத கமலம் தாங்கும் சடைக் கருணாகரனே - கங்கை நீரைத் தாங்குகின்ற சடையை யுடைய கிருபைக்குறைவிட மானவரே, அப் பாதக மலம் நீக்கி சிலம்பு இசை ஆர்த்திடும் கோலப் பாத கமலம் பூசித்து நேசிக்க அன்பு உதவாய் - அந்தப் பாதகமாகிய மலத்தை நீக்கிச் சிலம்பி னொலி சத்திக்கப் பெறும் அழகிய (உமது) திருவடித் தாமரையைப் பூசித்து நேசித்தற்கு (எனக்கு) அன்பினைத் தந்தருள்வீர்.

(கு-ரை.) பொன்று தப்பாத கமலம் நீர்; பொன்றாது அப்பிய கமலம் தாமரை. (கஎ)

கருவரம் பாயயி னோக்கியர் தூறுகற் றுக்கற்றுப்ப
கருவாம் பாயப் படேலன்ன மேகல் வளைக்களிற்றைக்
கருவரம் பாய்ந்துகண் டோர்காட்டு தூபத்தின் கற்றையளக்
கருவரம் பாயதுண் டாலிக்கு மாலிக் கனமல்லவே.

(இ-ள்.) அளக்கர் உவர் அம்பு ஆயது உண்டு ஆலிக்கும் ஆலிக் கனம் அல்ல - (இவ் விண்ணிற் றோன்றுவது) சமுத்திரத்தின் உவர் நீரைக் குடித்துத் துளிக்கின்ற ஆலாங்கட்டியை யுடைய மேக மன்று, கரு வரம்பு ஆய்ந்து கண்டோர் கல்வளைக் களிற்றை காட்டு தூபத்தின் கற்றை - கருப்பத்தி னெல்லையை ஆராய்ந்து கண்ட வந்தணர்கள் கல்வளைப்பதியில் வாழும் யானையாகிய விநாயகக்கடவுளுக்குக் காட்டுகின்ற தூபத்தின் திரளே, அன்னமே அம்பாயப்படேல் - அன்னம் போன்றவளே (நீ யதனைக் கார் காலத்து மேகமென்று கருதி) உபத்திரவப்படாதே, (படின்) கரு அரம் பாய் அயில் நோக்கியர் தூறு கற்றுக் கற்றுப் பகருவர் - கரிய அரம் பாயப் பெற்ற வேல் போலும் விழியினையுடைய பெண்கள் பழி மொழியைக் கற்றுக்கற்றுக் கூறுவார்கள்.

(கு-ரை.) ஐபுருபு குவ்வுருபின்றிரிபு. இஃது இருளை பருவமன் றென்றல். (கஅ)

கனஞ்சஞ் சரித்திடும் வண்டலை தண்டலைக் கல்வளையே
கனஞ்சஞ் சலமுறு பாசா டவிவெளி கண்டவனேங்
கனஞ்சஞ் சரிசொலும் வேற்க ணிடைக்குக் கருங்குழலுங்
கனஞ்சஞ் சரிகங்க ளேநீ ரிருக்கை கடனல்லவே.

(இ-ள்.) கனம் சஞ்சரித்திடும் வண்டு அலை தண்டலைக் கல்வளை ஏகன் - மேகங்கள் சஞ்சரிக்கின்ற வண்டுகளலைகின்ற சோலையை யுடைய கல்வளைப்பதியில் வாழும் ஏக நாதரும், நம் சஞ்சலம் உறு பாச அடவி வெளி கண்டவன் ஓங்கல்-நம்முடைய துன்பம் பொருந்திய பாசக் காட்டை வெளியாக்கினவருமாகிய விநாயகக்கடவுளுடைய மலையிலுள்ள, நஞ்சம் சரி சொலும் வேல் கண் இடைக்கு கருங் குழலும் கனம் - நஞ்சை ஒப்புச்சொல்லுகின்ற வேற்கண்ணை யுடையாளது இடைக்குக் கரிய கூந்தலும் பாரமாகும், சஞ்சரிகங்களே நீர் இருக்கை கடன் அல்ல - வண்டுகாள் நீவிர் (அதனை யெண்ணாது இவளுடைய கூந்தலில்) இருத்தல் முறையன்று.

(து-ரை.) இங்ஙனம் வண்டுகளுக்குக் கூறி ஓச்சும்போது தலைவியினது மெய்யிற் றீண்டினு னென்க. இது மெய்தொட்டுப் பயிறல்.

கடம்பிடிக் குங்கமஞ் சூன்மா லளந்திடுங் கல்வளையான்
கடம்பிடிக் குங்கா டத்தறு கட்சிறு கட்களிறு
கடம்பிடிக் குப்புய னீரூட்டு வெற்பநங் காமர்வஞ்சி
கடம்பிடிக் குங்கண்கள் காதளா வோடிக் கதித்தனவே.

(இ-ள்.) கடம்பு இடிக்கும் கமம் சூல் மால் அளந்திடும் கல்வளையான்-கடப்பமரங்கள் இடிக்கின்ற நிறைவாகிய சூலினையுடைய மேகத்தை அளக்கின்ற கல்வளைப்பதியை யுடைய விநாயகக் கடவுளது, கடம் பிடிக்கும் காடத் தறுகண் சிறுகண் களிறுகள் தம் பிடிக்கு புயல் நீர் ஊட்டு வெற்ப - கதுப்பைச் சார்ந்த மதச்சுவட்டினையும் தறுகண்மையையும் சிறுகண்களையுமுடைய (ஆண்) யானைகள் தம்முடைய பிடி

யானைகளுக்கு முகிலினுள்ள நீரை ஊட்டுகின்ற மலையிற் றலைவனே, நம் காமர் வஞ்சி கடு அம்பு இடிக்கும் கண்கள் காது அளவு ஒடிக் கதித்தன - நம்முடைய அழகிய பெண்ணுக்கு நஞ்சையும் அம்பையும் வென்ற கண்கள் காதுவரையும் நீண்டு வளர்ந்தன.

(து-ரை.) பருவங் கூறி வரைவொடு விலக்கல். (௬௦)

கதிரைக் கடவுள் குறமானை மேவச்செய் கங்கணநா
கதிரைக் கடலொலி போன்மள்ள ரார்த்துக் களைந்தசெந்நெற்
கதிரைக் கடைசியர் போரேற்று கல்வளை யாய்ககனக்
கதிரைக் கடவயிற் றார்ப்பாயென் றால்வருங் கைவலமே.

(இ-ள்.) கதிரை கடவுள் குறமானை மேவ செய் நாக கங்கண - கதிரைமலையில் வீற்றிருக்கின்ற சுப்பிரமணியக் கடவுள் வள்ளியம்மையாரைச் சேரச் செய்த நாக கங்கணத்தை யுடையவரே, திரைக் கடல் ஒலிபோல் மள்ளர் ஆர்த்துக் களைந்த செம் நெல் கதிரை கடைசியர் போர் ஏற்று கல்வளையாய் - திரையினையுடைய சமுத்திர ஒலியைப் போல உழவர்கள் ஆரவாரித்து அரிந்த செம்மையாகிய நெற்கதிரை உழத்தியர்கள் போராக ஏற்றுகின்ற கல்வளைப்பதியில் எழுந்தருளியிருக்கின்றவரே, ககனக் கதிரைக் கட வயிற்று ஆர்ப்பாய் என்றால் கைவலம் வரும் - ஆகாயத்திலுள்ள சூரியனைக் குடம்போன்ற வயிற்றிலே தரித்தவரே யென்றால் முத்தியானது சித்திக்கும். (௬௧)

வரச்சந் திரனெனுஞ் செந்தழற் பந்தம் வழுத்துநற்ற
வரச்சந் திரணத்தின் மாற்றுங் கடாசல மங்குலுலா
வரச்சந் திரதில கம்வளர் கல்வளை மாணுயிர்க
வரச்சந் திரவி னடந்தா னுணவென வந்ததுவே.

(இ-ள்.) வர சந்திரனெனும் செம் தழற் பந்தம் - மேலாகிய சந்திரனென்று சொல்லுகின்ற சிவந்த தழற்பந்த மானது, வழுத்தும் நல் தவர் அச்சம் திரணத்தின் மாற்றும் கட அசலம்-துதிக்கின்ற நல்ல

தவத்தினை யுடையவர்களின் அச்சத்தைத் துரும்பைப்போல நீக்கு கின்ற மதம்பொருந்திய யானையாகிய விநாயகக்கடவுளுடைய, மங்குல் உலாவா சந்திர திலகம் வளர் கல்வளை மான் உயிர் கவா - முகில்கள் உலாவும்படி சந்தனமாங்கள் வளருகின்ற கல்வளைப்பதியி லிருக்கும் பெண்ணினது உயிரைக் கவருதற்கு, இரவில் சந்து நடந்தான் உணவு என வந்தது - இரவிலே (சுந்தரமூர்த்தி நாயனாருக்காகப் பரவையா ரிடத்துத்) தூது சென்ற சிவபெருமானுடைய உணவாகிய நஞ்சைப் போல வந்தது.

(கு-ரை.) அசலம் ஆகுபெயர். இது நிலவு வெளிப்பட வருந்தல்.()

வந்தனை யன்பர் மனத்தூண் டடைபடு மாதங்கங்க
வந்தனை யன்றுகொன் றோன்முக நாபிகண் வாய்காஞ்சி
வந்தனை யன்பணி கல்வளை யான்வரை மன்னவனீ
வந்தனை யன்றெனின் மானுயி ரம்புலி மானுண் ணுமே.

(இ-ள்.) வந்தனை அன்பர் மனம் தூண் தடைபடும் மாதங்கம் - வழிபாடு செய்கின்ற அன்பர்களுடைய மனமாகிய தூணிலே கட்டப் படுகின்ற யானையும், கவந்தனை அன்று கொன்றோன் - கவந்தனென் பவனை முன்னே கொன்றவராகிய, முகம் நாபி கண் வாய் காம் சிவந் தன் அயன் பணி கல்வளையான் வரை மன்னவன் - முகமும் நாபியுங் கண்ணும் வாயுங் கையுஞ் சிவந்த விட்டுணுவும் பிரமதேவரும் பணி கின்ற கல்வளைப்பதியி லெழுந்தருளி யிருப்பவருமாகிய விநாயகக்கடவு ளுடைய மலைத் தலைவனே, நீ வந்தனை அன்றெனில் மான் உயிர் அம் புலி மான் உண்ணும்-நீ (இப்பொழுது) வந்தனை வாரவிட்டால் தலைவி யினது உயிரைச் சந்திரன் உண்டுவிடும்.

(கு ரை.) சிவந்தவன் சிவந்த னென நின்றது. இது வருத்தங் கூறல்.

(௬௯)

மான வலக்கண் டவாவினைப் பஞ்சினை மாய்க்கும்பவ
மான வலக்கண்டை மாவுரி யான்வன சப்பதத்தின்

மான வலக்கண் டரித்தோன் புகழ்கல் வளையிற்பெரு
மான வலக்கண் டகர்க்கொளிப் பாயென மாலறுமே.

(இ-ள்.) மான அலக்கண் தவா வினை பஞ்சினை மாய்க்கும் பவமான் - வலிய துன்பம் நீங்காத வினையாகிய பஞ்சை யழிக்கின்ற அக்கினிபோல்பவரே, வலக் கண்டை மா உரியான் வனசப் பதத்தில் மான வலக்கண் தரித்தோன் புகழ் கல்வளையில் பெருமான் - வலிமையுடைய கண்டாமணி கட்டப்பட்ட யானைத்தோலைத் தரித்த சிவபெருமானுடைய தாமரைபோன்ற திருப்பாதத்திலே பெருமைபொருந்திய வலக்கண்ணைச் சாத்தினவராகிய விட்டுணு புகழுகின்ற கல்வளைப்பதியி லெழுந்தருளியிருக்கின்ற பெருமானே, அவலக் கண்டகர்க்கு ஒளிப்பாய் என மால் அறும் - தீங்கையுடைய கீழோர்களுக் கொளிப்பவரே யென்று சொல்ல மயக்கமானது நீங்கும். (சுச)

மாலைய னங்கங் கரியோன் பதம்பெரி தன்றுமன்றின்
மாலைய னங்கங்கை வார்சடி லேசன் மதலைகொன்றை
மாலைய னங்கங் கணவெங் கணபண வாளரவன்
மாலைய னங்கன் குலாங்கல் வளையிரு மாதவர்க்கே.

(இ-ள்.) மன்றில் மா லயன் அம் கங்கை வார் சடில ஈசன் மதலை- சிற்சபையிற் பெரிய நடனத்தை யுடையவரும் அழகிய கங்கையைத் தரித்த நீண்ட சடையினை யுடைய தலைவரு மாகிய சிவபெருமானுடைய திருக்குமாரரும், கொன்றை மாலையன்-கொன்றைமாலையணிந்தவரும், அம் கங்கண வெம் கண பண வாள் அரவன் - அழகிய கங்கணமாகிய வெவ்விய கூட்டமாகிய படத்தினையுடைய ஒளி (பொருந்திய) சர்ப்பத்தையுடைய விநாயகக்கடவுளது, மாலை அனம் கங்கு உலாம் கல்வளை இரு மாதவர்க்கு - சாயங்காலத்தில் அன்னங்கள் வரம்பிலே உலாவுகின்ற கல்வளையி லிருக்கின்ற பெரிய தவத்தினை யுடையவர்களுக்கு, மால் அயன் அங்கம் கரியோன் பதம் பெரிது அன்று- விட்டுணு பிரமதேவன் தேகங் கரியனுகிய இந்திரன் இவர்களுடைய பதவிகள் பெரியனவல்ல. (சுரு)

இரும்புண் டரவெண் டுகண்மணி மந்திர மெய்தன்பரை
யிரும்புண்ட நீரெனத் தற்சேர்க்கு நாதனை யிக்குநெற்ப
யிரும்புண்ட ரீகமுஞ் சூழ்கல்வளையனை யெண்ணிப்பன்னி[னே.
யிரும்புண் டருமயிற் றென்றிசைக் கோன்பின்னை யென்செய்வ

(இ-ள்.) இரும் புண்டர வெள் துகள் மணி மந்திரம் எய்து அன்பரை இரும்பு உண்ட நீர் என தன் சேர்க்கும் நாதனை - மகிமையாகிய திரிபுண்டரமாகப் பூசுகின்ற வெள்ளிய விபூதியையும் உருத்திராட்சமணியையும் பஞ்சாட்சரத்தையு முடைய அன்பர்களைக் (காய்ந்த) இரும்பு தன்னுள்ளடக்கிய நீரைப்போலத் தம்மோடு (இரண்டறச்) சேர்க்கின்ற தலைவரும், இக்கு நெல் பயிரும் புண்டரீகமும் சூழ் கல்வளையனை - கரும்புகளும் நெற்பயிரும் தாமரைகளுஞ் சூழ்ந்திருக்கின்ற கல்வளைப்பதியை யுடையவருமாகிய விநாயகக்கடவுளை, எண்ணி பன்னி இரும் - நினைத்துத் துதித்து இருங்கள், புண் தரும் அயில் தென் திசைக் கோன் பின்னை என் செய்வன் - புண்ணை யுண்டாக்குகின்ற வேற்படையினையுடைய தென்றிசைக்கரசனாகிய யமன் பின் யாது செய்வான். (௬௬)

வன்னி களங்க னரிமா றுதிக்கு மலைமகள்கை
வன்னி களங்கனி யென்றெண்ணு கண்டன் மகிழ்ந்துபெற்ற
வன்னி களங்கப டற்றோர் பிறவி வலைப்பிணியாம்
வன்னி களங்களை யுங்கல் வளைக்கும்ப மாதங்கமே.

(இ-ள்.) வன்னி களங்கன் அரி மால் துதிக்கும் மலை மகள் கை வன்னி களங்கனி என்று எண்ணு கண்டன் மகிழ்ந்து பெற்ற வன்னி - அக்கினிதேவனுஞ் சந்திரனுஞ் சூரியனும் விட்டுணுவும் துதிக்கின்ற மலைமகளாகிய உமாதேவியாருடைய திருக் கரத்திலேயிருக்கின்ற கிளியானது களம்பழமென் றெண்ணுகின்ற (கரிய) கண்டத்தினை யுடைய சிவபெருமான் மகிழ்ந்து பெற்றருளிய பிரம

சாரியும், கல்வளைக் கும்ப மாதங்கம் - கல்வளைப்பதியில் வீற்றிருக்கின்ற மத்தகத்தையுடைய யானையுமாகிய விநாயகக்கடவுள், களம் கபடு அற்றோர் பிறவி வலை பிணியாம் வல் நிகளம் களையும் - கள்ளங் கபடில்லாதவர்களுடைய பிறவிவலைப் பிணியாகிய வலிய விலங்கை நீக்கியருளுவர்.

(கு-ரை.) கள்ளம் களம் என நின்றது. (சு எ)

தங்க மலையதி னால்வேதப் போலி தனைவரைமா
தங்க மலையச மேழ்காதம் வாசந் தருங்கல்வளை
தங்க மலையம் பிகைகுமா ராவென்று சாற்றிற்சந்த
தங்க மலையரும் பாக்கொம் பிரண்டுந் தருவிப்பனே.

(இ-ள்.) தங்க மலையதில் நால் வேதப் போலிதனை வரை மாதங்கம் - மகாமேரு மலையிலே நால்வேதப் போலியாகிய பாரதத்தை யெழுதிய யானையே, மலையசம் ஏழ் காதம் வாசம் தரும் கல்வளை தங்கு அமலை அம்பிகை குமரா என்று சந்ததம் சாற்றில் - சந்தனம் ஏழு காத எல்லை வரையும் மணக்கின்ற கல்வளைப்பதியி லெழுந்தருளி யிருக்கின்ற நின்மலையாகிய உமாதேவியாருடைய திருக்குமாரரே என் றெப்போழ்துந் துதித்தால், கமலை அரும் பாக்கொம்பு இரண்டுந் தருவிப்பன் - இலக்குமி சரஸ்வதியாகிய இருவரையுங்கொண்டு (செல்வங் கல்வியாகிய) இருபொருளையுந் தருவிப்பார்.

(கு-ரை.) வேதத்தை நிகர்த்த பாரதத்தை வேதப்போலி யென்றார். அரும் பாக் கொம்பு-அரிய பாக்களையுடைய கலைக்குத் தெய்வமாகிய பூங்கொம்பை நிகர்த்தவள். (சு அ)

தருமந்தக் காரிடத் தாக்கிடு மாமுகன் சந்தனப்பூந்
தருமந்தக் காலசை கல்வளை வாசன்றன் னுட்டினின்மா
தருமந்தக் காலமுந் தப்பாமற் சாரதி தாளைத்துளி
தருமந்தக் கார்முந்த முன்றோர் கடவுதல் சால்புடைத்தே.

(இ-ள்.) தக்கார் இடத்து தருமம் ஆக்கிடும் மாமுகன் - தகுந்தவர்களிடத்தே தருமத்தை யுண்டாக்குகின்ற யானைவதனரும், மந்தக்கால் பூ சந்தனத்தரு அசை கல்வளை வாசன்றன் நாட்டினில் - மந்தமாருதமானது பூக்களையுடைய சந்தனமரத்தை யசைக்கின்ற கல்வளைப்பதியில் வாசருமாகிய விநாயகக்கடவுளுடைய நாட்டிலே, மாதரும் அந்தக் காலமும் தப்பாமல் சாரி தாரை துளி தரும் அந்த கார் முந்த முன் தேர் கடவுதல் சால்பு உடைத்து - தலைவியும் (யான் கூறிய) அந்தக் காலமுந் தப்பாமல் தேர்ப்பாகனே மழைநீரைத் துளிக்கின்ற அந்த மேகம் முந்துதற்கு முன்னே தேரைச் செலுத்துதல் தகைமையுடைத்து.

(கு-ரை.) கார் முந்தினுற் றலைவி இறந்துபடுவா ளென்பது தோன்ற மாதருந் தப்பாமல் என்றானென்பது. இது பாகனொடு சொல்லல். (சுகூ)

சாலிக்கு வாலிக்கு வெங்கணை யேவித் தயங்கியபாஞ்
சாலிக்கு வாலிய தூசருள் கோலமுன் றாங்குபொறை
சாலிக்கு வாலிப மார்க்கண்டர்க் கீந்தவன் றந்தமைந்தன்
சாலிக்கு வாலிக்கு வான்றாவுங் கல்வளைத் தானத்தனே.

(இ-ள்.) சாலிக்கு வாலிக்கு வெம் கணை ஏவி தயங்கிய பாஞ்சாலிக்கு வாலிய தூசு அருள் கோலம் முன் தாங்கு பொறை சால் இக்கு - மராமரத்துக்கும் வாலியென்பவனுக்கும் வெம்மையாகிய அத்திரத்தைச் செலுத்தி (அழகால்) விளங்குகின்ற திரௌபதைக்குச் சுத்தமாகிய வஸ்திரத்தைக் கொடுத்த (விட்டுணுவாகிய) பன்றி முன்னே தாங்கிய பாரம் நிறைந்த இப் பூமியிலே, மார்க்கண்டர்க்கு வாலிபம் ஈந்தவன் தந்த மைந்தன் - மார்க்கண்டேய முனிவருக்கு (எந்நாளும்) வாலிபப் பருவத்தைக் கொடுத்தருளிய சிவபெருமான் பெற்ற திருக்குமாரரே, சாலிக் குவால் இக்கு வான் தாவும் கல்வளை தானத்தன் - நெற்பயிர்க் கூட்டமுங் கரும்புகளும் ஆகாயத்தை யளாவுகின்ற கல்வளைப்பதியை யுடையவர். (எ0)

தானவ ரங்கம்பங் கஞ்செய்யுஞ் சாரங்கன் ரூழுமுத்தித்
தான வரங்கது வாவேற் குமரன் றமையமழைத்
தானவ ரங்கம் பலத்தான் றருகளி றேகல்வளைத்
தான வரங்க ளுதவாயென் சித்தத் தறியினின்றே.

(இ-ள்.) தானவர் அங்கம் பங்கம் செய்யும் சாரங்கன் தாழும் முத்தித் தான-அசுரர்களுடைய அவயவங்களை ஊறுசெய்த விட்டுணு பணிகின்ற முத்தித்தானத்தை யுடையவரே, அரம் கதுவா வேல் குமரன் தமைய - அரங் கதுவப்பெறாத வேற்படையினை யுடைய முருகக்கடவுளுக்கு அண்ணரே, மழை தான - மழைபோன்ற மத சலத்தினை யுடையவரே, அரங்கு அம்பலத்தான் தரு களிறே - நடமாடு மிடமாகிய சிற்சபையை யுடைய சிவபெருமான் பெற்றருளிய யானையே, கல்வளைத் தான - கல்வளைப்பதியை யுடையவரே, என் சித்தத் தறியில் நின்று வரங்கள் உதவாய் - என்னுடைய மனமாகிய தூணிலே நின்று வரங்களைத் தந்தருளும்.

(கு-ரை.) முத்தித்தானம் முத்திக்கொடை. சார்ங்கன் சாரங்கனென நின்றது. (எக)

சித்தம் பாமுத் தலைவேலன் பாம்பரை சிக்கெனவி
சித்தம் பாமுத் தரிகங்கொண் டோன்மைந்தன் செய்யிற்பரி
சித்தம் பாமுத்த நாகொன்று கல்வளைத் தேவையுன்னுஞ்
சித்தம் பாமுத்த ராவாருக் காகுஞ் செயத்தம்பமே.

(இ-ள்.) சித்தம்பா முத்தலை வேலன்-சிதம்பரத்தி லெழுந்தருளியிருக்கின்ற முத்தலைச் சூலாயுதத்தை யுடையவரும், பாம்பு அரை சிக்கென விசித்து - சர்ப்பத்தைத் திருவரையிலே (கச்சாக) இறுக்கிக் கட்டி, அம்பரம் உத்தரிகம் கொண்டோன் மைந்தன் - திக்கை யாடையாகக் கொண்டருளியவருமாகிய சிவபெருமானுடைய திருக்குமாரராகிய, அம்பர முத்த நாகு செய்யில் பரிசித்து ஒன்று கல்வளை தேவை உன்னும் - கடலிடத்துள்ள முத்துக்களையுடைய சங்குகள் வயலிடத்

துப் பயின்று பொருந்துகின்ற கல்வளைப்பதியி லெழுந்தருளி யிருக்கின்ற விக்கினேசுவரக் கடவுளை நினைக்கும், சித்தம் பர முத்தர் ஆவாருக்கு செயத்தம்பம் ஆகும் - மனத்தினையுடைய மேலாகிய முத்தராவார்க்கே (வினைப்பகையை வென்று நிறுத்தும்) வெற்றித்தம்ப முண்டாகும்.

(கு-ரை.) சிதம்பரம் சித்தம்பரமென நின்றது. (எஉ)

தம்பஞ் சுரதஞ்செய் யாதீன்ற சேய்தொழுந் தாளினன்கீ
தம்பஞ் சுரமிழற் றுஞ்சோலைக் கல்வளைச் சாரலிற்பா
தம்பஞ் சுரத்துப் படச்சேக்கும் பொற்கொடி சர்ப்பத்தினி
தம்பஞ் சுருண்டி போன்மொழி தேன்குழ லுனெங்குமே.

(இ-ள்.) தம்பம் சுரதம் செய்யாது ஈன்ற சேய் தொழும் தாளினன் - தூணனது புணர்ச்சி செய்யாது பெற்ற விட்டுணுமூர்த்தி தொழுகின்ற திருப்பாதத்தையுடைய விநாயகக் கடவுளது, கீதம் பஞ்சுரம் மிழற்றும் சோலை கல்வளை சாரலில் - வண்டுகள் பண்ணைப் பாடுகின்ற சோலையையுடைய கல்வளைப்பதியின் மலைச்சாரலில், பஞ்சு உரத்து பட சேக்கும் பாதம் பொற்கொடி - பஞ்சானது உரத்துப்படச் சிவக்கின்ற பாதத்தினையுடைய அழகிய கொடிபோன்ற பெண்ணினுடைய, சர்ப்பத்தின் நிதம்பம் சுரர் உண்டிபோல் மொழி தேன் குழல் தான் எங்கும் - சர்ப்ப (படம்) போன்ற நிதம்பமும் தேவருணவாகிய அமிர்தத்தை யொத்த சொல்லும் மலர்த்தேனையுடைய கூந்தலுமே எங்கும் (தோன்றுகின்றன).

(கு-ரை.) இது தலைமகன் தலைமகள துருவ வெளிப்பாடு கண்டு சொல்லியது. (எங)

கும்ப னகத்திய னூலளந் தோகொற்ற வாகல்வளைக்
கும்ப னகத்திற் கனகா சுரற்செற்ற கோளரியே [ய்க்
கும்ப னகத்தின் சிறகரிந் தோன்றொழுங் கோன்வெற்பின்வா
கும்ப னகத்தின் புவிதாங்கி யோகுறைந் தாய்புயமே.

163007
ஆவணக்காப்பகம் சென்னை-600 008

ப்பிடம், நத்தம் தவழ்செய் தொறும் க[illegible]தி மா இராகப் பண் முரல் கல்வளையே - சங்குகள் தவழுகின்ற வ[illegible]டாறு முள்ள தாமரையி லிருக்கின்ற வண்டுகளிராகமாகிய பண்[illegible]ப் பாடுகின்ற கல்வளைப் பதியே.

(கு-ரை.) பண்ண பண என நின்றது. (எஎ)

கல்லார மூரற்பெண் ணுக்குபின் ணுக்கணைக் கண்ணனெண்
கல்லாரஞ் செங்கழு நீர்வாவி மேவிய கல்வளையான் [ணுங்
கல்லா ரருவியங் குன்றத்தி னேற்றுன் கணவர்பொன்னே
கல்லாரம் பூமுருக் கென்று ரறிந்திலன் கான்மயிலே.

(இ-ள்.) கல் ஆரம் மூரல் பெண் ஆக்கு பிள் நாக்கு அணை கண்ணன் எண்ணும் - கல்லை முத்துப்போன்ற பற்களினை யுடைய பெண்ணுக்கிய பிளந்த நாவையுடைய சர்ப்ப சயனத்தை யுடைய விட்டுணு எண்ணுகின்ற, கல்லாரம் செங்கழுநீர் வாவி மேவிய கல்வளையான் - நீர்க்குளிரியுஞ் செங்கழுநீரு முள்ள வாவிபொருந்திய கல்வளைப்பதியை யுடைய விநாயகக் கடவுளது, கல் ஆர் அருவி அம் குன்றத்தில் - கல்லென்னுமொலிபொருந்திய அருவியினையுடைய அழகியமலையிலே, நேற்று - நெருநலில், உன் கணவர் - உன்னுடைய கணவர், பொன்னே கல்லார் அம் முருக்கு பூ என்றுர் - பொன்போல்வாளே கல்லாதவர்கள் அழகிய முருக்கம்பூவை ஒப்பார் என்று சொன்னுர், கான் மயிலே அறிந்திலன் - கானகத்துள்ள மயில்போன்றவளே (அவர் குறிப்பை யான்) அறிந்திலேன்.

(கு-ரை.) இஃது ஒதற்பிரிவு தலைமகன் குறிப்பாலறிந்த தோழி தலைமகட்குணர்த்தல். (எஅ)

கானகத் தானத்தி சூழிலங் கேசனைக் காய்ந்துவெண்மை
கானகத் தானத்தில் வீழ்த்தான் சேய்வளை கான்றமுத்தங்

கானகத் தானத் திருள்சிக்குங் கல்வளைக் கட்டுபின்னற்
கானகத் தானத்தி யென்றேத்தி னென்பவக் கட்டறுமே.

(இ-ள்.) கால் நகத்தால் அத்தி சூழ் இலங்கா ஈசனை காய்ந்து வெண்மை கால் நகத்தானத்தில் வீழ்த்து அரன் சேய் - திருவடியிலுள்ள நகத்தினாலே சமுத்திரஞ் சூழ்ந்த இலங்கைக் கரசனாகிய இராவணனைக் காய்ந்து வெண்மை யொளியைக் காலுகின்ற கைலாசமலையாகிய உறைவிடத்தின் கீழ் விழுத்திய சிவபெருமானுடைய திருக்குமாராகிய விநாயகக்கடவுளை, வளை கான்ற முத்தம் கால் நக தானத்து இருள் சிக்கும் கல்வளை - சங்கீன்ற முத்துக்கள் வாய்க்காலிலே விளங்கி அவ்விடத்துள்ள இருளை யோட்டுகின்ற கல்வளைப்பதியி லெழுந்தருளி யிருக்கின்ற, கட்டு பின்னல் கானகத்தான் அத்தி என்று ஏத்தின் என் பவக்கட்டு அறும் - கட்டுகின்ற சடைக்காட்டை யுடையவர் யானை வதனத்தினை யுடையவரென்று துதிக்கில் என்னுடைய பாவமாகிய கட்டு அறும்.

(து-ரை.) நக நக்கு என்பதன் றிரிபு. (எக)

கட்கஞ்ச மள்ளர் களைகளை கல்வளைக் கத்தன்றறு
கட்கஞ் சனைவதைத் தோன்மரு கன்வரைக் காவன்மின்னே
கட்குஞ் சனப்புயல் பொங்கால கால கடுவடுவேற்
கட் கஞ்ச மானம் வரைப்பா யிருதொழில் காட்டரிதே.

(இ-ள்.) கள் கஞ்சம் மள்ளர் களை களை கல்வளைக் கத்தன்-தேனை யுடைய தாமரையை உழவர்கள் களையாகக் கட்டல் செய்கின்ற கல்வளைப்பதியில் வீற்றிருக்கின்ற தலைவருக்(கு), தறுகண் கஞ்சனை வதைத்தோன் மருகன் வரை காவல் மின்னே - தறுகண்மையுடைய கஞ்சனைக்கொன்ற விட்டுணுவுக்கு மருகருமாகிய விநாயகக்கடவுளுடைய மலையிற் (றினைக்) காவலையுடைய பெண்ணே, கட்கு அஞ்சனப் புயல் பொங்கு ஆலகால கடு வடு வேல் கட்கம் சமானம் வரைப்பாய் இரு

தொழில் காட்டரிது-(நினது) கண்ணுக்குக் கருமையாகிய மேகமும் பொங்கிய ஆலகாலமும் மாம்பிஞ்சும் வேற்படையும் வாளும் சமான மாகும் (ஆயினும் அவை துன்பவின்பங்களுக்கு) எல்லையாகி இரண்டு தொழில்களைக் காட்டுதலில்லை.

(கு-ரை.) ஆலகாலகடு ஒருபொருட்பல்பெயர். இது புகழ்தல். ()

அரக்கா விந்தறக் கொன்றோன் பெறுவமு தேவெங்கொலை
யரக்கா விந்தம் பயில்வன நீத்தண்மி னோநின்றுகே
ளரக்கா விந்தன் குலத்தோர் மணிகையி னற்கல்வளை
யரக்கா விந்தம் புனைவோர்க் கொலிக்கு மாவங்களே.

(இ-ள்.) அரக்கர் அவிந்து அறக் கொன்றோன் பெறு அமுதே - இராக்கதர்கள் அழிந்து முடியக்கொன்ற விட்டுணு பெறுத அமுதம் போல்பவளே, வெம் கொலையர் அக்கா விந்தம் பயில் வனம் நீத்து அண் மினோம் - வெவ்விய கொலைத்தொழிலினையுடைய வேடர்களும் அந்த யானைகளும் பயிலுகின்ற காட்டை நீங்கி (ஊரைக்) கிட்டினோம், அரக்கு அரவிந்தன் குலத்தோர் - செந்தாமரை யாசனராகிய பிரம தேவருடைய குலத்தவர்களாகிய பிராமணர்கள், கல்வளையர் அக்கு அரவு இந்து அம் புனைவோர்க்கு மணி கையினால் ஒலிக்கும் அரவங்கள் நின்று கேள் - கல்வளைப்பதியை யுடையவரும் உருத்திராக்கத்தையுஞ் சர்ப்பத்தையுஞ் சந்திரனையுங் கங்கைநீரையுந் தரிப்பவருமாகிய விநா யகக்கடவுளுக்கு மணியைக் கையினாலே அடிக்கின்ற ஒலிகளை நின்று கேட்பாய்.

(கு ரை.) காவிந்தம் கைம்மலை யானை. இது தலைவன் தன்பதி யடைந்தமை தலைவிக் குணர்த்தல். (அக)

வங்கங் கணவர் நிதிதேடப் போனதென் வாய்ந்தபில
வங்கங்க ணச்சி யுடைக்குங் குடக்கனி வார்ந்தநற
வங்கங் கணவி மடைதத்து தென்கல் வளையிலா
வங்கங் கணன்கிரி யன்னாள்பொன் னங்க மருவுறவே.

(இ-ள்.) வாய்ந்த பிலவங்கங்கள் நச்சி உடைக்கும் குடக்கனி வார்ந்த நறவம் கங்கு அணவி மடை தத்து தென் கல்வளையில் - (ஆண்டுப்) பொருந்திய குரங்குகள் விரும்பி யுடைக்கின்ற குடம்போலும் (பலாக்) கனியினின்று மொழுகுகின்ற தேனனது வரம்பருகிற்போய் மடையிற் றத்துகின்ற அழகிய கல்வளைப்பதியில் வீற்றிருக்கின்ற, அரவம் கங்கணன் கிரி அன்னாள் அங்கம் பொன் மருவுற - சர்ப்பகங்கணத்தையுடைய விநாயகக்கடவுளது மலையை நிகர்த்த தலைவியினுடைய மேனியில் பொன்பொருந்த, வங்கம் கணவர் நிதி தேடப்போனது என்- மரக்கலத்திலே தலைவர் பொன்னைத் தேடப்போனது என்னை!

(து-ரை.) இஃது ஆற்றாமை கூறல். (அஉ)

மருக்காவி னறிடக் குங்குலு வாலயம் வாசங்கொள்ள
மருக்காவி பூம்பண்ணை நாறிடுங் கல்வளை வார்கொன்றைத்தா
மருக்காவி யன்னவ னைப்பா டிலர்கவி வாணரென்க
மருக்காவின் பாலுகுத் தாலெனப் பாடுவர் மாந்தரையே.

(இ-ள்) மரு காவில் நாறிட - மருக்கொழுந்து சோலையிலே வாசஞ்செய்யவும், குங்குலு ஆலயம் வாசங் கொள்ள - குங்கிலியம் ஆலயத்திலே மணக்கவும், மரு காவி பூம் பண்ணை நாறிடும் கல்வளை வார் கொன்றைத் தாமருக்கு ஆவி அன்னவனைப் பாடிலர் - வாசனையையுடைய காவி மலர்கள் அழகிய வயலிலே மணக்கின்ற கல்வளைப்பதியில் வீற்றிருக்கின்ற நெடிய கொன்றைமாலையை யணிந்த சிவபெருமானுக்கு ஆவிபோன்ற விநாயகக்கடவுளைப் பாடுகின்றிலர், கமருக்கு ஆவின் பால் உகுத்தால் என மாந்தரையே பாடுவர் கவிவாணர் - (பூமியிலுள்ள) வெடிப்பிலே பசும்பாலை வார்த்தாற்போல மனிதரையே பாடுகின்றார்கள் டாவாணர்கள், என் - (இவர் செயல்) என்னை!

தரைக்குந் ததிக்குங் கனிவாயங் காந்து தயங்கியமந்
தரைக்குந்த வாளி தனுவாங்கு மால்பணி தற்பரன்மைந்

தரைக்குந் தளக்கஞ்ச மான்மகிழ் கல்வளை தங்கிநா
தரைக்குந்தன் முன்னவ னைப்பாட லாற்கொள்வர் சங்கத்தரே.

(இ-ள்.) தரைக்கும் ததிக்கும் கனிவாய் அங்காந்து தயங்கிய மந்தரைக்கு வாளி உந்த தனு வாங்கும் மால் பணி தற்பரன் மைந்தரை-பூமிக்குந் தயிருக்குங் கனிபோன்ற வாயைத்திறந்து விளங்கிய கூனியென்பவளுக்குப் பாணத்தைச் செலுத்துதற்கு வில்லை வளைத்த விட்டுணு வணங்குகின்ற ஆன்மநாயகராகிய சிவபெருமானுடைய திருக்குமாரரும், குந்தளம் கஞ்சமான் மகிழ் கல்வளை தங்கிய நாதரை-கூந்தலினையுடைய தாமரைப்பூவி லிருக்கின்ற இலக்குமி மகிழுங் கல்வளைப்பதியி லெழுந்தருளியிருக்கின்ற தலைவரும், குந்தன் முன்னவனை சங்கத்தர் பாடலால் கொள்வர் - வேற்படையையுடைய முருகக்கடவுளுக்கு முன்னவருமாகிய விநாயகக்கடவுளைப் புலவர்கள் பாடலாலே பெற்றுக்கொள்வார்கள்.

(கு-ரை.) விநாயகக்கடவுளைப் பெற்றுக்கொள்ளுதல் அவரதருளைப் பெறுதல். (அச)

சங்கர னட்டத் திரண்டஞ்சு நாற்பொறிச் சர்ப்பம்வன
சங்கர னட்டந் தவிர்த்தோன் றுயில்வடந் தண்டாளஞ்
சங்கா ரனட்டயில் சேர்வஞ்சி கல்வளைத் தந்தியங்கு
சங்கா னட்டன்பி னன்பகண் டாயென் றனதுயிரே.

(இ-ள்.) அன்பின் அன்ப - அன்பினையுடைய பாங்கனே, கல்வளை தந்தி அங்குசம் கரன் நாட்டு-கல்வளைப்பதியிலே வீற்றிருக்கின்ற யானையாகிய அங்குசத்தைக் கையிற் கொண்டவராகிய விநாயகக்கடவுளது நாட்டிலே, சங்கரன் நாட்டத்து இரண்டு அஞ்சு நால் பொறிச் சர்ப்பம் வனசம் கரன் ஆட்டம் தவிர்த்தோன் துயில் வடம் தண் தாளம் சங்கு ஆரம் நாட்டு அயில் சேர் வஞ்சி என்றனது உயிர் - சிவபெருமானுடைய கண்களு ளிரண்டாகிய சந்திர சூரியர்கள் பயப்படுகின்ற நான்கு பொறிகளையுடைய சர்ப்பப் படமுந் தாமரை மலருங் கரனென்

பவனுடைய வலியை நீக்கிய விட்டுணு நித்திரை செய்கின்ற ஆலிலையுங் குளிர்ந்த முத்துஞ் சங்கும் அரங்கதுவப்பெற்ற வேலும் பொருந்திய (ஒரு) கொடியே என்னுடைய உயிர்.

(கு-ரை.) நாற்பொறி: செவியொழிந்த மெய் வாய் கண் மூக்காகிய நான்கிந்திரியங்கள். சர்ப்பபடம் அல்குலுக்கும், தாமரை முகத்துக்கும், ஆலிலை வயிற்றிற்கும், முத்து பல்லுக்கும், சங்கு கழுத்துக்கும், வேல் கண்ணுக்கும், கொடி இடைக்கும் ஒப்பு என்க. இஃது இவ்விடத்திவ்வியற்றென்றல். (அரு)

தனக்காக்கை யன்றி வழங்காரைப் பாடித் தளர்பசிய
தனக்காக்கை யுண்ணு முடல்வீக் கிடச்சலித் தேன்சிலைவே
டனக்காக்கை போக்கிய நோக்கினன் மைந்ததண் காரினைச்சந்
தனக்காக்கைந் நீட்டுதென் கல்வளை யன்பர் சகாயத்தனே.

(இ - ள்.) தனம் காக்கை அன்றி வழங்காரைப் பாடி தளர் பசி அதனம் காக்கை உண்ணும் உடல் வீக்கிடச் சலித்தேன் - பொருளைக் காத்தலே அன்றி (இரப்பவர்களுக்குக்) கொடாதவர்களைப் பாடித் தளர்ந்த பசிமிகுதியினையுடைய காக்கைகளுண்ணுகின்ற உடலைப் பருப்பித்தற்காகச் சலிப்புற்றேன், சிலை வேள் தனக்கு ஆக்கை போக்கிய நோக்கினன் மைந்த-(கருப்பு) வில்லினையுடைய மன்மதனுக்குத் தேகத்தை நீக்கிய பார்வையினையுடைய சிவபெருமானது திருக்குமாரரே, தண் காரினை சந்தனக் கா கை நீட்டு தென் கல்வளை அன்பர் சகாயத்தனே- குளிர்ந்த மேகத்தைச் சந்தனமரச் சோலைகள் கை நீட்டித் தொடுகின்ற அழகிய கல்வளைப்பதியில் வீற்றிருக்கின்ற அன்பர்களுக்குச் சகாயஞ் செய்கின்றவரே. (அகு)

காயப் படவு துளங்கிச் சிலேட்டுமக் கால்விசைத்துக்
காயப் படவு முடியுதை யோமலர்க் காவணமா
காயப் படவுயர் கல்வளை நாத கரியுரியே
காயப் படவுமை காதல னீன்ற கரமஞ்சனே.

(இ-ள்.) சிலேட்டுமக் கால் விசைத்துக் காய - சிலேட்டுமமாகிய காற்று விசைத்தடிக்க, காயம் படவு துளங்கி படவும் முடியுது ஐயோ- தேகமென்னுந் தோணியானது நடுங்கி அழியவும் முடிகின்றது ஐயோ, மலர் கா ஆகாயம் வணம் பட உயர் கல்வளை நாத - பூஞ்சோலைகள் ஆகாயம்வண்ணம் படும்படி உயருகின்ற கல்வளைப்பதியில் வீற்றிருக்கின்ற தலைவரே, கரி உரி ஏகாயப்பட உமை காதலன் ஈன்ற கா மஞ்சனே - யானைத்தோலாகிய உத்தரீய வஸ்திரத்தையுடைய உமாதேவியார்க்கு நாயகராகிய சிவபெருமான் பெற்றருளிய துதிக்கையினையுடைய யானையே (என்னைக் காத்தருள்வீர்).

(கு-ரை.) வண்ணம் வணமென நின்றது. மஞ்சு மேகம், ஈண்டு மேகம்போன்ற யானை. (அஎ)

மஞ்சரிக் கண்ணிமின் வேணியன் கல்வளை வாசன்மணி
மஞ்சரிக் கண்ணிய சாபத்தை மாற்றும் வரதன்வெற்பின்
மஞ்சரிக் கண்ணிப் புயத்தாய் மனங்கலங் காயின்றுநீ
மஞ்சரிக் கண்ணி நகைக்குடைந் தாயுன் மனத்துரமே.

(இ-ள்.) மஞ்சு அரி கண்ணி மின் வேணியன் - வலிய சர்ப்பமாகிய மாலை விளங்குகின்ற திருச்சடையையுடையவரும், கல்வளை வாசன் - கல்வளைப்பதியில் வீற்றிருப்பவரும், மணி மஞ்சு அரிக்கு அண்ணிய சாபத்தை மாற்றும் வரதன் வெற்பில் - அழகிய மேகம் போன்ற விஷ்ணுவுக்கு நேரிட்ட சாபத்தை நீக்கியருளிய வரதருமாகிய விநாயகக்கடவுளுடைய மலையிலே, கண்ணி மஞ்சரி புயத்தாய் மனம் கலங்காய் - மலரரும்புகளாலாய மாலையை யணிந்த புயத்தினையுடைய தலைவனே (முன்யாதாலும்) மனங்கலங்கமாட்டாய், நீ இன்று மஞ்சு அரி கண்ணி நகைக்கு உன் மனத்து உரம் உடைந்தாய் - நீ யின்றைக்கு அழகிய ரேகை பொருந்திய கண்ணினையுடைய (ஒரு) பெண்ணினது முறுவலுக்கு உனது மனவலி யழிந்தாய்.

(கு-ரை.) இது கற்றறிபாங்கன் கழறல். (அஅ)

துரங்கந்தந் தாவளந் தேரா ளெனும்படை சூழ்ந்திடுசா
துரங்கந் தரணி படைத்திந்த்ர லோகமுந் துய்ப்பரிதோ
துரங்கந் தனிலுறை மாலேத்துங் கல்வளைத் தும்பிகற்சிந்
துரங்கந்த வேடுணைக் கன்பான மெய்த்திருத் தொண்டருக்கே.

(இ-ள்.) து ரங்கந்தனில் உறை மால் ஏத்தும் கல்வளை தும்பி - சுத்தமாகிய ஸ்ரீரங்கத்தி லிருக்கின்ற விஷ்ணு துதிக்குங் கல்வளைப் பதியில் வீற்றிருக்கின்ற யானையும், கல் சிந்து உரம் கந்தவேள் துணைக்கு - கிரவுஞ்சகிரியை (வேலால்) அழித்த வலியினையுடைய சுப்பிரமணியக் கடவுளுக்குத் துணைவருமாகிய விநாயகக்கடவுளுக்கு, அன்பான மெய் திரு தொண்டருக்கு - அன்பாகிய மெய்ம்மையையுடைய திருத்தொண்டர்களுக்கு, துரங்கம் தந்தாவளம் தேர் ஆள் எனும் சூழ்ந்திடு சாதுரங்கப்படை தரணி படைத்து இந்த்ரலோகமும் துய்ப்பு அரிதோ - குதிரைகளும் யானைகளுந் தேர்களுங் காலாள்களுமாகிய சூழ்ந்திடுகின்ற சதுரங்க சேனைகளையும் பூமியையும் (இம்மையிற்) பெற்று (மறுமையில்) இந்திரலோக (இன்பத்தையும்) அனுபவித்த லரிதாமோ. (அகூ)

அருமந்த மாருதத் தேரோற்கு மைத்துன னானபிரா
னருமந்த மாமுகன் கல்வளை யான்வெற்பி னுடவரை
யருமந்தக் கார்குழன் மாலையும் வாடின தையமில்லை
யருமந்த மானுக் கிருப்புவெள் ளேறுடை யான்வையமே.

(இ-ள்.) அரு மந்த மாருதம் தேரோற்கு மைத்துனன் ஆன பிரான் - நுண்ணிய இளந்தென்றலாகிய தேரையுடைய மன்மதனுக்கு மைத்துனராகிய இறைவரும், அரும் மந்தமா முகன் - அருமையாகிய யானை வதனத்தை யுடையவரும், கல்வளையான் வெற்பின் அருமந்த மானுக்கு - கல்வளைப்பதியில் வீற்றிருப்பவருமாகிய விநாயகக்கடவுளது மலையிலுள்ள அருமருந்தன்ன பெண்ணுக்கு, ஆடவர் அயரும் அந்தம் கார் குழல் மாலையும் வாடினது - ஆடவர்கள் சோரும் அழகினை

யுடைய மேகம்போலுங் கூந்தலிலுள்ள மாலையும் வாடினது (ஆதலால்), இருப்பு வெள் ஏறு உடையான் வையமே ஐயம் இல்லை-(இவள்) உறை பதி வெள்ளிய இடபவாகனத்தை யுடையவராகிய சிவபெருமானுடைய இரதமாகிய பூமியே ஐயமில்லை.

(கு-ரை.) மாலையும் என்றதி னும்மையால் கண்ணிமைத்த லாதியனவேயன்றி என்பது பெறப்படும். இது துணிபு. (௬௦)

வைப்பா சத்தி யுரியா னிடத்தில் மகிழ்தருபார்
வைப்பா சத்தி திருமுலைப் பாலுண்ட வாயன்மத
வைப்பா சத்தி செறிந்திடுங் கல்வளை வானவர்கோ
வைப்பா சத்தினம் பெற்றாற் றுயர் மாநிலத்தே.

(இ-ள்.) வை பாசு அத்தி உரியான் இடத்தில் மகிழ் தரு பார்வை பாசத்தி திரு முலை பால் உண்ட வாயன் - கூரிய மழுப்படையையும் யானைத்தோற் போர்வையையுமுடைய சிவபெருமானது வாமபாகத்திலுள்ள மகிழ்வைத் தருகின்ற பார்வையினையுடைய உமாதேவியாரது திருமுலைப்பாலை யுண்ட வாயினையுடையவரும், மதவைப்பு அரசு அத்தி செறிந்திடும் கல்வளை வானவர் கோவை தினம் பரச பெற்றார் மா நிலத்தே துயர் அற்றார் - மிகுதியாசத் தன்னிடத்தே அரசமரமும் அத்திமரமும் பொருந்தப்பெற்ற கல்வளைப் பதியில் வீற்றிருக்கின்ற தேவநாயகருமாகிய விநாயகக்கடவுளை எப்பொழுதும் வணங்கப்பெற்றவர்கள் பெரிய பூமியின்கண்ணே துயர் நீங்கினவராவர். (௬௧)

மாவா ரணமெனக் கொண்டோன் விழிப்பட்டு மாய்ந்தவெங்கா
மாவா ரணங்க ளொருநாலு மேத்தி வணங்குமந்த
மாவா ரணங்கல் வளையான்றந் தான்கொன்றை மாலையெங்கண்
மாவா ரணங்கினை யென்செய்கு வாய்மலர் வாளிகொண்டே.

(இ-ள்.) மா வாரணம் என கொண்டோன் விழி பட்டு மாய்ந்த வெம் காமா - யானைத்தோலை மேற் போர்வையாகக் கொண்டருளிய

சிவபெருமானுடைய விழிப்பார்வையிற் பட்டிறந்த கொடிய மன்மதனே, ஆரணங்கள் ஒரு நாளும் எத்தி வணங்கும் அந்த மா வாரணம் கல்வளையான் கொன்றை மாலை தந்தான்-வேதங்கள் நான்குந் துதித்து வணங்குகின்ற அப்பெரிய யானையாகிய கல்வளைப்பதியில் வீற்றிருக்கின்ற விநாயகக்கடவுள் கொன்றைமாலையைத் தந்தார், எங்கண் மா ஆரணங்கினை மலர் வாளிகொண்டு என் செய்குவாய் - இலக்குமியையொத்த எம் தலைவியைப் புஷ்பபாணத்தைக்கொண்டு (இனி) என் செய்குவாய்.

(கு-ரை.) மா விழி, ஆகுபெயர்கள். மா ஆரணங்கு, இலக்குமியாகிய தெய்வப்பெண். இது புறப்பொருளில் கடவுண்மாட்டு மானுடப் பெண்டிர் நயந்த பக்கத்தைச் சார்ந்ததோர் கிளவி. (கஉ)

வாள முருக்கிதழ் வல்லவை சேர்கல் வளையிற்பிர
வாள முருக்கித வேணியன் வெற்பின் மதித்தசக்ர
வாள முருக்கு முலையாய் மலர்க்கரங் கொண்டுகர
வாள முருக்கயி னேர்வாரி பொத்துதன் மற்றரிதே.

(இ-ள்.) கல்வளையில் வாள முருக்கு இதழ் வல்லவை சேர் பிரவாளம் உருக்கு இதம் வேணியன் வெற்பில் - கல்வளைப்பதியி லெழுந்தருளியிருக்கின்ற ஒளியையுடைய முருக்கம்பூவையொத்த அதரத்தையுடைய வல்லவை சேரப்பெற்ற பவளத்தை யுருக்கினாற்போன்ற நல்ல சடையினையுடைய விக்கினேசுரக்கடவுளது மலையில், மதித்த சக்ரவாளம் முருக்கும் முலையாய் - கருதப்படுகின்ற சக்கரவாகப்புள்ளை வென்ற முலையினையுடையாய், கரவாளம் உருக்கு அயில் நேர் வாரி மலர் கரம் கொண்டு பொத்துதல் அரிது - வாளையும் உருக்கினு லியற்றப்பட்ட வேலையுமொத்த கண்ணை மலர்போலுங் கையினாற் பொத்துதலரிது (ஆகும்).

(கு-ரை.) வாரி, நீரையுடையது; கண். மற்று அசைநிலை. இஃது இடையூறு கிளத்தல். (கங)

மற்கடந் தாவருங் காமேவு கல்வளை வாசன்வெங்கா
மற்கடந் தார்புக ழைங்கரன் வெற்பில்வன் பார்த்தனுடன்
மற்கடந் தான்கட் டழல்குளிர் தீச்சுர வாரியென்று
மற்கடந் தாங்கிய கொங்கையெவ் வாறு மருவினளே.

(இ-ள்.) மற்கடம் தாவரும் கா மேவு கல்வளை வாசன் - குரங்குகள் தாவுகின்ற சோலைபொருந்திய கல்வளைப்பதியில் வாசஞ்செய்பவரும், வெம் காமன் கடந்தார் புகழ் ஐங்கரன் வெற்பில் - கொடிய மன்மதனைவென்ற முனிவர் புகழுகின்ற ஐந்து திருக்கரங்களையுடையவருமாகிய விநாயகக்கடவுளது மலையில், வல் பார்த்தனுடன் மற்கள் தந்தான் கண் தழல் குளிர் தீ சுர வாரி என்னுமல் - வலிய அருச்சுனனோடு மல்யுத்தங்களைச் செய்தருளிய சிவபெருமானுடைய (நெற்றிக்) கண்ணினுள்ள அக்கினியுங் குளிருகின்ற நெருப்பையுடைய சுரவழியென்று கருதாமல், கடம் தாங்கிய கொங்கை எவ்வாறு மருவினள் - குடத்தின் றன்மையைத் தாங்கிய தனங்களையுடைய (எமது) மகள் எவ்வாறு சென்றாள்.

(கு-ரை) கடம் ஆகுபெயர். இது தன் மகள் மென்மைத்தன்மைக் கிரங்கல். (கச)

மாக்கணி யார்தம் மலரோ டவிழ்த்து வயினிடத்த
மாக்கணி யாரெனச் சோதிடஞ் சொல்லினர் வாளரிச்சு
மாக்கணி யாதுசெய் வாணம் விதிவசம் வல்லவைவா
மாக்கணி யார்மைந்தர் கல்வளை வாசர் மலையகத்தே.

(இ-ள்.) வல்லவை வாமர்-வல்லவையை வாமபாகத்திற் கொண்டவரும், அக்கு அணியார் மைந்தர் - என்பு மாலையாகிய அணியினையுடைய சிவபெருமானுக்குப் புத்திரரும், கல்வளை வாசர் மலையகத்து-கல்வளைப்பதியில் வாழ்பவருமாகிய விநாயகக்கடவுளது மலையில், மாக்கணியார் - மாமாகிய கணியார், தம் மலர் ஏடு அவிழ்த்து - தமது மலரேட்டை அவிழ்த்து, வயினிடத்து அமர் அக் கணியார் என சோதி

டஞ் சொல்லினர் - இந்நிலத்தின்கண்ணேயுள்ள அக் கணிச்சாதியார் போலத் (தினை விளைந்ததென்று) சோதிடங்கூறினர், (எமக்கு இனித் தினைப்புனங் காவலில்லை ஆகவே ஒருபொழுதுந் தலைவரைப் பிரியப் பெறுத) வாள் அரி சமரம் கணி யாது செய்வாள் நம் விதிவசம் - வாள் போலும் இரேகைகளையுடைய போரினைப்புரியுங் கண்ணினையுடைய தலைவி (இனி) யாதனைச்செய்வாள் (இங்ஙனமானது) எம் விதிவசமே.

(கு-ரை.) மாக்கணி வேங்கைமரம். மலரேடு மலரிதழ். கண்ணி கணியெனநின்றது. இஃது சிறைப்புறமாகச் செறிப்பறிவுறுத்தல். ()

கத்தாறு காலிசை யார்க்குங் குழற்கரும் பேயுயர்மா
கத்தாறு காலக் கருமாரி வந்தது கன்னியம்பூ
கத்தாறு காலுங் கனியள்ளி யாரங் கரைசிந்தி வே
கத்தாறு கால்வருங் கல்வளை வாழைங் கரன்வெற்பிலே.

(இ-ள்.) கத்து ஆறு கால் இசை ஆர்க்கும் குழல் கரும்பே-கத்துகின்ற வண்டுகள் இசையை ஒலிக்கின்ற கூந்தலையுடைய (மொழியாற்) கரும்பை யொத்தவளே, கன்னியம் பூகத் தாறு காலுங் கனி அள்ளி ஆரம் கரை சிந்தி வேகத்து ஆறு கால் வரும்-இளமையாகிய கமுகினது குலைகள் சிந்திய கனிகளை யள்ளி முத்துக்களைக் கரையிற் சிதறி வேகத்தோடு யாறுவாய்க்காலின் வழியே வருகின்றது, (ஆதலின்) கல்வளை வாழ் ஐங்கரன் வெற்பிலே உயர் மாகத்து ஆறு காலக் கரு மாரி வந்தது-கல்வளைப்பதியில் வாழ்கின்ற விநாயகக்கடவுளது மலையிலே உயர்ந்த ஆகாய வழியாகக் கார்காலத்துக் கருமேகம் வந்தது (போலும்).

(கு-ரை.) இஃது இறைவி யறியாள்போன்று குறியாள் கூறல்.

கரனு காரமுனி மாதுளை மேந்திய கல்வளையான்
கரனு காரவற நேமிப் படைக்கல மேவிவரு
கரனுக ராசன் பணிபெரு மான்புகழ் கற்றிடச்சி
காரக ராதிப னுபிர நாப்பெற்ற காரணமே.

(இ-ள்.) கரன் நாகு அரா முனி மாதுளம் ஏந்திய கல்வளையான்-திருக்கரங்களிலே சங்கையுஞ் சர்ப்பத்தையும் வில்லையும் மாதுளம்

163007.

ஓம்

தத் சத்

பரப்ரஹ்மணேநம:

நாநாஜீவவாதக் கட்டளை

ஆன்மவடிவ சிவம் உபாதியினலே ஐவகையாக விளங்கலைக் கூறல்.

1. சுத்தப் பிரஹ்மமா யிருக்கின்ற சர்வ சாக்ஷியி னிடத்திலே, அக்கினியிற் சூடுபோல, அபின்னமாக ஒரு சத்தி யுண்டு. அந்தச் சத்தி அதீதப் பிரஹ்மத்தி லடங்கி யிருக்கும்போது (அதற்குச்) சுத்தப்பிரஹ்மமென்று பெயர். இந்தச் சத்தி விசிரிம்பித்துச் சுத்தப் பிரஹ்மத்தை வியா பிக்கும்போது (அது) பரை வியாபகத்துக்குள் இருந்தபடி யினலே (அதற்குப்) பரப்ரஹ்மமென்று பெயராயிற்று.

2. இலட்சண சூனியமா யிருக்கின்ற இந்தச் சத்திக் குப் பிரஹ்மத்தினுடைய சந்நிதானத்தில், புருஷ சமூகத் திலே ஸ்திரீக்கு இன்பஞ் சனித்தாற்போல, அவிகிருக சத்வ ரஜஸ் தமோகுணங்க ளுண்டாயின. இந்தச் சுத்த சத்துவத் திற்கு ஆனந்தரூபசத்தி என்று பெயர்; சுத்த ரஜசுக்குச் சித்துருபசத்தி யென்று பெயர்; சுத்த தமஸுக்குச் சத்துருப

சத்தி என்று பெயர். இந்தக் காரணமான ஆனந்தரூபசத்தி யுடனே பரப்ரஹ்மம் கூடிச் சர்வானந்த சுழுத்தியை யடைகிறபோது (அதற்குட்) பரப்ரஹ்மமென்கிற பெயர் போய்ப் பரமானந்த ரென்கிற பெயர் வந்தது. இந்தப் பரமானந்தர் சித்துரூப சத்தியுடனே கூடிச் சர்வப்பிரகாசமென்கிற சொப்பனவத்தையை யடைகின்றபோது (அவருக்குப்) பரமானந்த ரென்கிற பெயர் போய்ப் பரிபூரண ரென்கிற பெயர் வந்தது. இந்தப் பரிபூரணர் சத்துரூபசத்தியுடனே கூடிச் சர்வவியாபகமென்கின்ற சாக்கிராவத்தையை யடைகின்றபோது (அவருக்குப்) பரிபூரண ரென்கிற பெயர் போய்ப் பர னென்கிற பெயர் வந்தது.

பிரகிருதித் தோற்றமும், ஈசுவரத் தோற்றமும் கூறல்.

3. இந்த அகண்ட பரிபூரண சச்சிதானந்தப் பிரஹ்மத்தினிடத்திலே சுத்தியி லிரசிதம் (கிலிஞ்சலில் வெள்ளி) தோன்றினாற்போல மூலப்பிரகிருதி யென்றொரு சத்தியுண்டாயிற்று. அந்த மூலப்பிரகிருதியும் விகுருத குணமாகிய முக்குணத்துடனே கூடியிருக்கும். அந்தப் பிரகிருதியின் சத்துவகுணம் மாயையென்றும், சர்வஞ்ஞவுபாதியென்றும், ஈசுவர காரணசரீரமென்றும் சொல்லப்படும். இந்த மாயையினிடத்திலே நிர்மலஜலப் பிரதிபிம்பம்போலப் பிரஹ்மம் சலட்சணமாகப் பிரதிபிம்பிக்கும். இந்தப் பிரதிபிம்ப சைதன்யம் சர்வஞ்ஞனாகிய ஈசுவரனென்று சொல்லப்படும்.

ஈசுவரன் சத்துவாதி குணங்களினால் மும்மூர்த்திகளாய் விளங்கலைக் கூறல்.

4. இந்தச் சத்துவகுண மாயையினிடத்திலே சத்துவத்திற் சத்துவம், சத்துவத்தில் இராசதம், சத்துவத்தில்

தாமதம் என்று மூன்றுகுண முண்டாயின. இவற்றுள், சத்துவத்திற் சத்துவம் பிரதானமாகும் (மேற்பட்டு நிற்கும்) போது அதிற் பிரதிபிம்பித்த ஈசுரன் ஜகத்தை இரட்சித்தலால் விஷ்ணுவென்று சொல்லப்படும். சத்துவத்தில் இராசதம் பிரதான மாகும்போது அதிற் பிரதிபிம்பித்த ஈசுரன் ஜகத்தைச் சிருஷ்டித்தலால் பிரஹ்மாவென்று சொல்லப்படும். சத்துவத்தில் தாமதம் பிரதானமாகும்போது அதிற் பிரதிபிம்பித்த ஈசுரன் ஜகத்தைச் சங்காரம் பண்ணுதலால் உருத்திரனென்று சொல்லப்படும். இப்படி மூலப்பிரகிருதியின் சத்துவகுண கற்பனை (அத்தியாசம், அஃதாவது பொய்த் தோற்றம்) சொல்லப்பட்டது.

ஜீவர்களின் தோற்றமும் அவர்களின் பேதமும் கூறல்.

5. இனி, மூலப்பிரகிருதியின் இராசதகுணம் அநேக ரூபமாய்ப் பிரிந்து அவித்தைகளென்றும் ஜீவகாரண சரீரங்களென்றும் ஒன்றற்கொன்று தாரதம்மியமாக (ஏற்றக் குறைச்சலாக)ச் சொல்லப்படும். இந்த அவித்தைகளிடத்திலும் மலினசலப் பிரதிபிம்பம்போலப் பிரஹ்ம சைதன்யம் பிரதிபிம்பிக்கும். இந்தப் பிரதிபிம்ப சைதன்யங்கள் கிஞ்சிஞ்ஞ ரென்றும், சிதாபாச ரென்றும், பிராஞ்ஞ ரென்றும் சொல்லப்படும். இந்த அவித்தைக ளிடத்திலேயும் இராசதத்தில் சத்துவம், இராசதத்தில் இராசதம், இராசதத்தில் தாமதமென்று மூன்று குண முண்டு. இராசதத்திற் சத்துவம் பிரதான மாகும்போது அதிற் பிரதிபிம்பித்த சிதாபாசன் தத்துவஞான நிஷ்டனுவன். இராசதத்தில் இராசதம் பிரதானமாகும்போது அதிற் பிரதிபிம்பித்த சிதாபாசன் காமக்குரோதபரனுய்க் கன்மநிஷ்டனுவன். இராசதத்தில் தாமதம் பிரதான மாகும்போது அதிற் பிரதிபிம்பித்த

சிதாபாசன் சோம்பல் நித்திரை மயக்கங்களை யுடையவனுவன். இப்படி மூலப்பிரகிருதியின் இராசதகுண கற்பனை சொல்லப்பட்டது.

ஆவரணத்தின் தன்மையைக் கூறல்.

6. இனி மூலப்பிரகிருதியின் தாமதகுணத்திற்கு ஆவரணம் விட்சேபமென் றிரண்டு சத்திக ளுண்டு. இவற்றுள், ஆவரணசத்தி யென்பது, தத்துவஞானியையும் ஈசுரனையுந் தவிர மற்ற ஜீவருக்கெல்லாம் சரீரத்திரயம் சிதாபாசன் சாட்சிசைதன்ய மென்பவைகளை ஒன்றற்கொன்று பேதம் (வேற்றுமை) தெரியவொட்டாமல் மறைக்கும். இதனுல் மறைபட்ட ஜீவன் இருபத்தொன்பது தத்துவங்களையும் ஒருமைப்பாடாக (ஒற்றுமையாக) நானென்று அபிமானிப்பன். இந்த அபிமானம் அகங்காரக்கிரந்தி யென்றும், சம்சார பந்தமென்றும் சொல்லப்படும். சற்குரு கடாட்சத்தினுலே இந்த ஆவரணம் நீங்கி இருபத்தொன்பது தத்துவத்திற்கும் ஒன்றற்கொன்று பேதந் தெரிகின்றதே முத்தி. இப்படி ஆவரண சத்தியின் காரியஞ் சொல்லப்பட்டது.

விட்சேபத்தின் தன்மையைக் கூறல்.

7. இனி விட்சேபசத்தியினிடத்திலும் சத்ததன்மாத்திரையான ஆகாசம் பிறந்தது; ஆகாசத்திலும் பரிச தன்மாத்திரையான வாயு பிறந்தது; வாயுவிலும் ரூப தன்மாத்திரையான அக்கினி பிறந்தது; அக்கினியிலும் ரச தன்மாத்திரையான அப்புப் பிறந்தது; அப்புவிலும் கந்த தன்மாத்திரையான பிருதிவி பிறந்தது. இந்தச் சூட்சும பஞ்சபூதத்திற்குக் காரணமா யிருக்கின்ற விட்சேப சத்தியினிடத்திலே தாமதத்தில் சத்துவம், தாமதத்தில் இராசதம், தாம

தத்தில் தாமதமென்று அற்பங் கருவிருந்தபடியினலே அதன் காரியமான இந்தத் தன்மாத்திரையான பஞ்சபூதங்களும் முக்குணத்துடனே பிறந்தன. இந்தப் பஞ்சபூதங்கள் தன்மாத்திரைக ளென்றும், அபஞ்சீகிருத பூதங்களென்றும், சூட்சும பூதங்க ளென்றும், முக்குண பூதங்களென்றும் சாத்திரங்களிலே சொல்லப்படும்.

அந்தக்கரணத்தின் தன்மையைக் கூறல்.

8. இந்தச் சூட்சும பூதங்களினின்று சூட்சும சரீரங்களும் தூலபூதங்களும் பிறந்தன. அஃதெங்ஙன மென்னில், ஆகாச முதலான பஞ்ச பூதங்களினுடைய சாத்வீகாம்சத்திலே பூதத்திற்கு ஒவ்வொரு மாத்திரை யெடுத்து ஒன்றாகக் கூட்டி வைத்தது அந்தக்கரணமாம்.

இந்த அந்தக்கரணத்தில் ஆகாசத்தின் அம்சங் கூடினதற்கு அடையாளம்: இந்த அந்தக்கரணமும் ஆகாசத்தைப்போலச் சகலமான கேள்விக்கும் இடங் கொடுத்துத் தரிக்கின்றது; இப்படித் தரிக்கின்ற விருத்திக்கு உள்ளம் என்று பெயர்.

இந்த அந்தக்கரணத்தில் வாயுவின் அம்சங் கூடினதற்கு அடையாளம்: இந்த அந்தக்கரணமும் வாயுவைப்போல அலைகின்றது; இப்படி யலைகின்ற விருத்திக்கு மனமென்று பெயர்.

இந்த அந்தக்கரணத்தில் அக்கினியின் அம்சங் கூடினதற்கு அடையாளம்: இந்த அந்தக்கரணமும் அக்கினியைப்போல இஃது இன்னதென்று விளக்குவிக்கின்றது;

இப்படி விளக்குவிக்கின்ற விருத்திக்குப் புத்தி யென்று பெயர்.

இந்த அந்தக்கரணத்தில் அப்புவின் அம்சங் கூடினதற்கு அடையாளம்: இந்த அந்தக்கரணமும் அப்புவைப் போல விஷயங்களில் பற்றி யிழுக்கின்றது; இப்படி யிழுக்கின்ற விருத்திக்குச் சித்தம் என்று பெயர்.

இந்த அந்தக்கரணத்தில் பிருதிவியின் அம்சங் கூடினதற்கு அடையாளம்: இந்த அந்தக்கரணமும் பிருதிவியைப் போலக் கடினமாக நின்று நானென்று அபிமானிக்கின்றது: இப்படி அபிமானிக்கின்ற விருத்திக்கு அகங்காரம் என்று பெயர்.

ஞானேந்திரியத்தின் தன்மையைக் கூறல்.

9. இன்னும் ஆகாச முதலிய பஞ்ச பூதங்களினுடைய சாத்விகாம்சத்திலே பூதத்திற்கு ஒவ்வொரு மாத்திரை எடுத்துத் தனித்தனியே வைத்தது சுரோத்திராதி ஞானேந்திரிய மென்று சொல்லப்படும்.

இவற்றுள் சுரோத்திரம் ஆகாசத்தின் அம்சமானபடியினாலே ஆகாசத்தின் குணமான சப்தமாத்திரத்தை யறியும்.

துவக்கு வாயுவின் அம்சமானபடியினாலே வாயுவின் குணமான பரிசமாத்திரத்தை யறியும்.

சட்சு அக்கினியின் அம்சமானபடியினாலே அக்கினியின் குணமான ரூபமாத்திரத்தை யறியும்.

சிங்ஙுவை அப்புவின் அம்சமானபடியினாலே அப்புவின் குணமான ரசமாத்திரத்தை அறியும்.

ஆக்கிராணம் பிருதிவியின் அம்ச மானபடியினலே பிருதிவியின் குணமான கந்தமாத்திரத்தை யறியும்.

இப்படி ஐந்தும் ஒன்ருேடொன்று கூடாதபடியினலே ஒன்று மற்ருென்றன் குணத்தைக் கிரகிக்க அறியாது. அந்தக்கரணத்தில் ஐந்து மாத்திரையு மொன்ருய்க் கூடினது கொண்டு அஃது ஐந்திந்திரியத்தினலும் ஐந்து விஷயத்தையும் அறியும். இந்தச் சத்துவ குணத்தி லுண்டான அந்தக்கரணம் ஐந்தும், ஞானேந்திரியம் ஐந்தும் ஆகப் பத்தும் சாத்விக அம்சமானபடியினலே ஞானசாதனமாயின.

பிராணதி வாயுவின் தன்மையைக் கூறல்.

10. இன்னும் ஐந்து பூதத்தினுடைய இராஜதாம்சத்திலே பூதத்திற்கு ஒவ்வொரு மாத்திரை யெடுத்து ஒன்ருகக் கூட்டிவைத்தது வியானுதி பஞ்ச வாயுக்களாம்.

இவற்றுள், வியானவாயு ஆகாசத்தின் அம்சமான படியினலே ஆகாசத்தைப் போலச் சர்வாங்கமும் வியாபித்திருக்கும்.

பிராணவாயு வாயுவின் அம்சமானபடியினலே வாயுவைப்போல இருதயத்திலிருந்து நாசியாதி பரியந்தம் அலையும்.

அபானவாயு அக்கினியின் அம்சமானபடியினலே அக்கினியைப் போலச் சாடராக்கினியாக உஷ்ணித்துக்கொண்டு குதத்தைப் பற்றிநின்று உண்ட அன்னபானுதிகளை ஜீரணிப்பிக்கும்.

சமானவாயு அப்புவின் அம்சமானபடியினாலே சரீர நடுவான நாபித்தானத்தில் நின்று உண்ட அன்னபானாதி ரசங்களைச் சகல நாடிகளிலும் அப்புவைப்போல இழுக்கும்.

உதானவாயு பிருதிவியின் அம்சமானபடியினாலே கண்டத்தைப்பற்றிப் பிருதிவியைப்போலக் கடினமாக நின்று உண்ட அன்னபானாதிகளைக் கடையும்.

இந்தப் பஞ்ச வாயுக்களையுமன்றி வாந்திபண்ணி வைக்கின்றவன் நாகனென்றும், இமைத்து விழிப்பிக்கின்றவன் கூர்மனென்றும், குறுகுறுத்துத் தும்மச்செய்கின்றவன் கிரிகரனென்றும், கொட்டாவிகொள்ளச் செய்கின்றவன் தேவதத்தனென்றும், வீங்குவிக்கின்றவன் தனஞ்செயனென்றும் வேறே ஐந்து வாயுக்களுண்டென்று சிலர் சொல்லுவர். இந்த ஐந்தும் பிராணனுடைய தொழிலானபடியினாலே வேறல்ல.

கன்மேந்திரியத்தின் தன்மையைக் கூறல்.

11. இன்னும் ஆகாசமுதற் பஞ்ச பூதங்களினுடைய இராஜதாம்சத்திலே பூதத்திற்கு ஒவ்வொரு மாத்திரையெடுத்துத் தனித்தனியே வைத்தது வாக்காதி கன்மேந்திரியமென்று சொல்லப்படும்.

இவற்றுள், ஆகாசத்தினிடமாக வாக்கு வசனிக்கும்; வாயுவினிடமாகப் பாணி இடுதல் ஏற்றல் செய்யும்; அக்கினியினிடமாகப் பாதம் நடக்கும்; அப்புவினிடமாகப் பாயுருமல ஜலாதிகளை வெளியிலே தள்ளும்; பிருதிவியினிடமாக உபத்தம் சுகத்தைப் பண்ணும்.

இவைந்தும் தனித்தனியே யிருத்தலால் வேறு தொழில் செய்யமாட்டா. வியானாதி வாயுக்கள் ஐந்து மாத்

திரையு மொன்றாய்க் கூடினது கொண்டு கன்மேந்திரியம் ஐந்தின் வழியினாலும் ஐந்து தொழில்களைச் செய்து முடிக்கும். இந்தவாயுக்கள் ஐந்தும், கன்மேந்திரியங்கள் ஐந்தும் ஆகப் பத்தும் இராசதாம்ச மானபடியினால் கிரியாசாதன மாயின.

சூட்சும சரீரத்தின் தன்மையைக் கூறல்.

12. அந்தக்கரணம் ரு-ம், ஞானேந்திரியம் ரு-ம், வாயுக்கள் ரு-ம், கன்மேந்திரியம் ரு-ம், ஆக உ௦ தத்துவமும் சூட்சுமசரீரமென்று சொல்லப்படும். இந்தச் சூட்சும சரீரம் மாயாப் பிரதிபிம்பனான ஈசுவரனால் அவித்தையாப் பிரதிபிம்பரா யிருக்கின்ற சீவர்களனேகராகையால் அவர்களொவ்வொருவருக்கும் ஒவ்வொன்றாகச் சிருட்டித்துக் கொடுக்கப்பட்டது. அப்போது பஞ்ச பூதங்களின் சாத்விகாம்சமும் இராசதாம்சமும் செலவழிந்தன; தாமதகுண மாத்திரம் மீசுடித்தது. சூட்சும சரீரம் வாங்காத சீவருக்கெல்லாம் இன்னுமொரு சிருட்டிக்காகட்டுமென்று நிறுத்தினார். இப்படி சூட்சும சரீர கற்பனை சொல்லப்பட்டது.

தூல பூதத்தின் தன்மையைக் கூறல்.

13. இனித் தூலபூத உற்பத்தி சொல்லுகிறோம். அஃதெங்ஙனமெனின்:—மிஞ்சின தமோம்சமா யிருக்கின்ற ஐந்து பூதங்களுள் ஒவ்வொன்றையும் இரண்டிரண்டாகப் பகுத்து, முதற்பாதி ஐந்தனுள் ஒவ்வொன்றையும் நந்நான்காகப் பகுத்து, இரண்டாம் பாதி ஐந்தனுள் தன் அம்சத் (பாகத்) துடனே கூட்டாமல் மற்ற நான்கு பூதத்துடனும் அரைக்கால் அரைக்கால் மாத்திரையாக (ஒன்றிலெட்டி

லொருபாகமாக)க் கொடுக்கிறது பஞ்சீகரணமென்றுசொல்லப்படும்.

இப்படிப் பஞ்சீகரணம் பண்ணின தூல பூதங்களிலே ஆகாசத்திலே பரிச ரூப ரச கந்தமாகிய நான்கு குணமும் வியாப்பியமான (வெளிப்படா தடங்கியிருக்கின்ற) படியினால் அதிருசியமாய்ப் (இந்திரியத்திற்கு விஷயமாகாது) போக நிஜகுணமாகிய சப்தமும், வாயுவிலே ரூப ரச கந்தமாகிய மூன்று குணமும் வியாப்பியமானபடியினால் அதிருசியமாய்ப் போகக் காரண குணமாகிய சப்தமும் நிஜகுணமாகிய பரிசமும், அக்கினியிலே ரச கந்தமாகிய இரண்டு குணமும் வியாப்பியமானபடியினால் அதிருசியமாய்ப் போகக் காரண குணமாகிய சப்த பரிசமும் நிஜகுணமாகிய ரூபமும், அப்புவிலே கந்தகுணம் வியாப்பிய மானபடியினால் அதிருசியமாய்ப் போகக் காரணகுணமாகிய சப்த பரிச ரூபமும் நிஜகுணமாகிய ரசமும், பிருதிவியிலே காரணகுணமாகிய சப்த பரிச ரூப ரசமும் நிஜகுணமாகிய கந்தமும் தோன்றின.

தூலசரீரத்தின் தன்மையைக் கூறல்.

14. சூட்சும பூதங்களினின்றும் சூட்சும சரீரங்கள் பிறந்தாற்போலப் பஞ்சீகரணம் பண்ணின தூல பூதங்களினின்றும் ஆறு தத்துவமாய் நால்வகைப் பிறப்பாய் மூவகைச் சாதியாயிருக்கின்ற தூல சரீரங்கள் பிறந்தன.

15. இவற்றுள், ஆறு தத்துவமாவன எவையெனின்: சர்மம், உதிரம், மாமிசம், சநாயு, அத்தி மச்சை என்பனவாம்.

நால்வகைத் தோற்றமாவன எவையெனின்:—சராயுசம், அண்டசம், சுவேதசம், உத்பிசம் என்பனவாம்.

மூவகைச் சாதியாவன எவையெனின்:—இகலோக பரலோக புத்தி (இவ் வுலகத்தி னியல்பையும் சுவர்க்கத்தி னியல்பையும் ஆராய்ந்தறியும் மன வுணர்ச்சி) இருவகையுங் கொடுக்கின்ற மாநுட சரீரம் உத்தம ஜாதி. பரலோக புத்தியை மறைத்து இகலோக புத்தியை மாத்திரங் கொடுக்கின்ற பசு பட்சி முதலானவை மத்திமஜாதி. இவ்விரண்டு லோகத்துப் புத்தியையும் மறைத்திருக்கின்ற மரங் கொடி செடி முதலியன அதமசாதி. இப்படிப் பிருதிவி தத்துவமாயிருக்கின்ற பூலோகத்திற் கண்டாற்போல அப்பு, அக்கினி, வாயு, ஆகாச மெனப்பட்ட தத்துவங்களிலும் நிரைநிரையே (முறை முறையே) யிருக்கின்ற பிதிர்லோக - தெய்வலோக-யட்சகந்தருவலோக-சித்தர் லோகங்களிற் றோன்றுகிற நட்சத்திரம் சந்திரன் முதலான பிதிர்க்கள், சூரியன் முதலான தேவதைகள், கந்தருவர் சித்தர் எனப்பட்டவர்க ளெல்லாம் உத்தம ஜாதி. காமதேனு, அயிராவதம், அன்னம், கருடன் முதலாயின மத்திமஜாதி. கற்பகவிருட்சம், பாரிசாத முதலாயின அதமஜாதி.

கோசத்தின் தன்மையைக் கூறல்.

16. இந்தத் தூலசரீரமே அன்னமய கோசமாம். சூட்சும சரீரம் மூன்று கோசமா யிருக்கும். அஃதெங்ஙன மெனின்:—பிராணவாயுவுங் கன்மேந்திரியமுங் கூடிப் பிராணமய கோசமாம். மனமும் ஞானேந்திரியமுங் கூடி மனோமய கோசமாம். புத்தியும் ஞானேந்திரியமுங் கூடி விஞ்ஞானமய கோசமாம். காரணசரீரமே ஆனந்தமய கோசமாம். இப்படிப் பஞ்சகோசஞ் சொல்லப்பட்டன.

ஸ்தூலசரீரத்தில் சூக்குமசரீர மிருக்கும் வகையைக் கூறல்.

17. ஆறுதத்துவமா யிருக்கின்ற ஸ்தூலசரீரத்திலே இருபது தத்துவமா யிருக்கின்ற சூட்சுமசரீர மிருக்கின்ற தெப்படி யெனின்:—

கன்மேந்திரியங்களுள் வாக்கும், ஞானேந்திரியங்களுள் சிங்குவையும் வாயி லிருக்கும்; வாயுக்களுள் உதான வாயுவும், அந்தக்கரணத்துள் மனமும் கண்டத்தி லிருக்கும்; பிராணவாயுவும், புத்தியும் இருதயத்தி லிருக்கும்; சமானவாயுவும், சித்தமும் நாபியி லிருக்கும்; அபானவாயுவும், பாயுருவும் குதத்தி லிருக்கும்; வியானவாயுவும், துவக்கும், அகங்காரமும் சர்வாங்கமும் வியாபித்திருக்கும்; உச்சியிலே உள்ளமும், கருவிழி நுனியிலே சட்சு இந்திரியமும், காதிற்குள்ளே சுரோத்திர இந்திரியமும், மூக்கு நுனியிலே ஆக்கிராண இந்திரியமும் கழுத்திற்குமேல் தனித்தனியே யிருக்கும். கழுத்திற்குக் கீழே கை கால் குய்யங்களில் பாணிபாதம் உபஸ்தமென்னு மூன்றுந் தனித்தனியே யிருக்கும். இப்படி ஸ்தூலசரீர தத்துவம் ௬-ம், அதிற் குடிபுகுந்த சூட்சுமசரீர தத்துவம் ௨௦-ம் ஆகத் தத்துவம் ௨௬-ம் பஞ்ச பூதத்தின் காரியமானபடியினாலே ஒருமைப்பாடாகக் காரிய சரீரமென்று சொல்லப்படும்.

ஜீவ பரியாய நாமமும், பிரஹ்மபரியாய நாமமுங் கூறல்.

18. காரண சரீரத்தோடு சிதாபாசன் ஜாக்கிரத்திலே இந்த (ஸ்தூலசரீர தத்துவம் ஆறு, சூக்குமசரீர தத்துவம் இருபது என்னும்) இருபத்தாறு தத்துவத்துடனே கலந்து நின்றபோது விசுவனென்றும் வியவகாரிய ஜீவனென்றும் சொல்லப்படும்.

சொப்பனத்திலே தூல சரீரத்தைக் கைவிட்டு அந்தக்கரணத்துடனே கூடிநின்றபோது தைஜசனென்றும், பிராதிபாசிக ஜீவனென்றும், சொப்பன கற்பிதனென்றுஞ் சொல்லப்படும்.

சுழுத்தியிலே காரியசரீரதத்துவம் இருபத்தாறையுங் கைவிட்டுக் காரண சரீரத்தை மாத்திரம் பொருந்தி யிருக்கும்போது பிராஞ்ஞனென்றும், பாரமார்த்திக ஜீவனென்றும் சொல்லப்படும்.

பிரஹ்ம சைதன்னியம் ஜாக்கிரத்திற்குச் சாட்சியா யிருக்கும்போது ஜீவாத்மாவென்றும், சொப்பனத்திற்குச் சாட்சியா யிருக்கும்போது அந்தராத்மாவென்றும், சுழுத்திக்குச் சாட்சியா யிருக்கும்போது பரமாத்மாவென்றும், அவஸ்தாத்திரய (ஜாக்கிர சொப்பன சுழுத்தியென்னு மூன்றற்கும்) சாட்சியா யிருக்கும்போது ஞானாத்மா என்றும், கூடஸ்தன் என்றும் சொல்லப்படும்.

இப்படி ஜீவனுக்கு மூன்று சரீரமும் மூன்றவஸ்தையுஞ் சொல்லப்பட்டன.

ஈசுவரனது சரீராதிகளைக் கூறல்.

19. இனி, ஈசுவரனுக்கு (ஸ்தூல சூட்சும காரணமென்னும்) மூன்று சரீரமும், (ஜாக்கிர சொப்பன சுழுத்தி என்னும்) மூன்றவஸ்தையும் சொல்லப்படுகின்றன. லோக கற்பனையா (உலக வியவகாரமா) கத் தோற்றுகின்ற ஸ்தூல பஞ்ச பூதங்களும் அவற்றிற் றோன்றின மூன்று ஜாதியா யிருக்கின்ற ஸ்தூல சரீர சமஷ்டியுங் கூடியது ஈசுவர ஸ்தூலசரீரமென்றும் விராட்டென்றுஞ் சொல்லப்படும்.

இதனு (ஸ்தூலசரீரத்து)டனே கூடி ஜாக்கிராவஸ்தை யைப் பொருந்தியிருக்கின்ற ஈசுவரன் வைசுவானரனென் றும், இந்த இருவகைக்கும் (ஸ்தூலசரீர சமஸ்டிக்கும் ஜாக் கிராவஸ்தைக்கும்) அதிஷ்டானமா யிருக்கின்ற சைதன்யம் பிரஹ்மா வென்றுஞ் சொல்லப்படும்.

சூட்சும பூதங்களாந்தும் அவற்றிற் றோன்றின சூட் சும சரீர சமஷ்டியுங் கூடியது ஈசுவர சூட்சும சரீரமென் றும், இரணியகர்ப்பமென்றும் சொல்லப்படும்.

இத(சூட்சும சரீரத்தி)னுடனே கூடிச் சொப்பனவஸ் தையைப் பொருந்தியிருக்கின்ற ஈசுவரன் சூத்திராத்மா என்றும், இந்த இருவகைக்கும் (சூட்சும சரீரத்திற்கும் சொப்பனவஸ்தைக்கும்) அதிஷ்டானமா யிருக்கின்ற சைத ன்யம் விஷ்ணு (வியாபகமா யிருப்பவன்) என்றுஞ் சொல் லப்படும்.

இந்த ஸ்தூல சூட்சும மிரண்டின் வாசனை (ஸ்தூல சூட்சும பூதங்களை வெளிப்படுத்தற்குரிய காரணத்தன்மை) யுடனே கூடிய மாயை ஈசுவர காரணசரீரமென்றும், அவ் வியாகிருத மென்றுஞ் சொல்லப்படும்.

இத (காரணசரீரத்தி)னுடனே கூடிச் சுழுத்தியவஸ் தையைப் பொருந்தியிருக்கின்ற ஈசுவரன் அந்தரியாமி என்றும், இந்த இருவகைக்கும் (காரண சரீரத்திற்கும் சுழுத்தி யவஸ்தைக்கும்) அதிஷ்டானமா யிருக்கின்ற சை தன்யம் உருத்திரன் (சம்சாரரோகத்தை யொழிப்பவன்) என்றுஞ் சொல்லப்படும்.

ஜீவன் தன் மூன்றவஸ்தையிலுந் தன் மூன்று சரீரமாக விருக்கின்ற இருபத்தேழு (ஸ்தூலசரீரதத்துவம் 6, சூட்சுமசரீர தத்துவம் 20, காரணசரீர தத்துவம் 1, ஆக 27) தத்துவத்துடனும் நானென்று கலந்து நிற்கின்றாற்போல ஈசுவரனுந் தன் மூன்றவஸ்தையிலும் தன மூன்று சரீரமாயிருக்கின்ற முப்பத்திரண்டு (சமஷ்டி ஸ்தூலசரீர தத்துவம் 6, சமஷ்டி சூட்சுமசரீரதத்துவம் 20, இவற்றின் வாசனையுடன் கூடிய காரண சரீரமான மாயை 1, ஆகாயாதி பூதங்கள் 5, ஆக 32) தத்துவத்துடனும் கலந்து நிற்பன்.

ஜீவசேதன முதலியவற்றின் வியாபகத்தைக் கூறல்.

20. ஆகையினல், சிதாபாசன் தன் சரீரமாத்திரமே கலந்து நிற்பன்.

ஈசுவரன் தன்னுடைய சரீரமாகிய சகல சரீரங்களோடுஞ் சகலப் பிரபஞ்சங்களோடுங் கலந்து நிற்பன். இந்த இருவகைக்குஞ் (சிதாபாசனுக்கும் ஈசுவரனுக்கும்) சாட்சியா யிருக்கின்ற பிரஹ்மசைதன்யம் சகல சரீரத்திலுஞ் சகலப் பிரபஞ்சத்திலும் நிறைந்து அப்பாலும் பத்துத் திக்கையும் அதிக்கிரமித்து (மீறி) எல்லையற் றிருக்கும்.

தத்துவ வியவகாரங்களைக் கூறல்.

21. ஜீவனுக்கு ஸ்தூலசரீர வியவகாரத்திற்கு அன்னமயமான சட்கோசதத்துவம் 6, சூட்சும சரீரதத்துவம் 20, ஜீவன்-ஈசுவரன்-அவித்தை-வித்தை-பிரஹ்மம் ஆக 5; ஆகத் தத்துவம் 31.

சூட்சுமசரீர வியவகாரத்திற்குச் சூட்சும சரீரதத்துவம் 20; ஜீவன், ஈசுவரன், அவித்தை, வித்தை, பிரஹ்மம் ஆக 5; ஆகத் தத்துவம் 25.

காரணசரீர வியவகாரத்திற்கு ஜீவன், ஈசுவரன், அவித்தை, வித்தை, பிரஹ்மம் ஆகத் தத்துவம் 5.

ஜீவ வியவகாரத்திற்கு ஜீவன், ஈசுவரன், பிரஹ்மம் ஆகத் தத்துவம் 3.

சாட்சி வியவகாரத்திற்குச் சாட்சி 1. ஈசுவரனுக்கு ஸ்தூலசரீர வியவகாரத்திற்குச் சமஷ்டி அன்னமயகோச தத்துவம் 6; சமஷ்டி சூட்சுமசரீர தத்துவம் 20; சமஷ்டி ஜீவன், அவித்தை ஆக 2; ஈசுவரன், வித்தை, பிரஹ்மம் ஆக 3; ஸ்தூலபூதம் 5; ஆகத் தத்துவம் 36.

சூட்சுமசரீர வியவகாரத்திற்குச் சமஷ்டி சூட்சுமசரீர தத்துவம் 20; சமஷ்டிஜீவன், அவித்தை ஆக 2; சூட்சும பூதம் 5; ஈசுவரன், வித்தை, பிரஹ்மம் ஆக 3; ஆகத் தத்துவம் 30.

காரணசரீர வியவகாரத்திற்கு ஈசுவரன், வித்தை, பிரஹ்மம் ஆகத் தத்துவம் 3.

ஈசுவர வியவகாரத்திற்கு ஈசுவரன், பிரஹ்மம் ஆக 2.

பிரஹ்ம வியவகாரத்திற்குப் பிரஹ்மம் 1.

இந்திரிய வியவகாரத்திற்கு இந்திரியம் 1; சட்கோச தத்துவம் 6; அந்தக்கரணம் 5; வாயு 5; ஜீவன், ஈசுவரன், அவித்தை, வித்தை, பிரஹ்மம் ஆக 5; ஆகத் தத்துவம் 22.

மனோராஜ்ய (மனோ வியாபார) வியவகாரத்திற்கு (உள்ளம், மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் என்னும்) அந்தக்கரணம் 5; ஜீவன், ஈசுவரன், அவித்தை, வித்தை, ப்ரஹ்மம் ஆக 5; ஆகத் தத்துவம் 10.

இப்படித் தத்துவங்களின் தோற்றமும் (சிருஷ்டியும்), நிலை (ஸ்திதி) யுஞ் சொல்லப்பட்டன.

தத்துவங்களின் லயக்கிரமங் கூறல்.

22. இனித் தத்துவங்க ளொடுங்கும் (தத்தங் காரணங்களு ளடங்குகின்ற) வழி சொல்லுகின்றோம். அஃதெங்ஙன மெனின்:—

சகல ஜீவர்களிடத்திலு மிருக்கின்ற ஸ்தூல சரீரங்களனைத்தும் தமக் காதாரமான ஸ்தூல பூதங்களிலே மடிந்து (முன்னிலைமை விட்டுப்) பூதமாத்திரமாக ஒடுங்கும். இந்த ஸ்தூல பூதங்களும் பஞ்சீகரணம் (கலப்பு) விட்டுத் தன் மாத்திரையான (சூட்சுமமான) தமோகுண பூதங்களாக மிஞ்சும். அப்போது கேவலம் இரணியகர்ப்பாவஸ்தை (சூட்சும பூதங்களா யிருக்கும் நிலை) என்று சொல்லப் படும். சூட்சுமசரீர தத்துவங்க ளிருபதுங் கட்டு (நிலை) விட்டுப் பூதங்களினுடைய சத்துவகுணமும் இரஜோ குணமுமாக ஒடுங்கும். அஃது எங்ஙனமெனின்:—

சகலப் பிராணிகளிடத்திலு மிருக்கின்ற அகங்காரமும், ஆக்கிராணமும், உதானனும், உபத்தமும் பிருதிவியி லொடுங்கும். சித்தமும், சிங்குவையும், சமானனும், பாயுரு

வும் அப்புவி லொடுங்கும். புத்தியும், சட்சுவும், அபான னும், பாதமும் அக்கினியி லொடுங்கும். மனதும், துவக்கும், பிராணனும், பாணியும் வாயுவி லொடுங்கும். உள்ளமும், சுரோத்திரமும், வியானனும், வாக்கும் ஆகாசத்தி லொடுங்கும். அப்போது பழையபடியே முக்குண பூதங்களாம். இந்தச் சூக்ஷ்ம பூதங்களுள், பிருதிவி அப்புவிற் கரைந் தொடுங்கும். அப்புவும் அக்கினியிற் சுவறி (வற்றி) யொடுங்கும். விளக்குப்போல அக்கினியும் வாயுவி லணைந் தொடுங்கும். வாயுவும் ஆகாசத்தி லோய்ந் தொடுங்கும். ஆகாசமும் விட்சேப சத்தியி லொடுங்கும். ஆவரணசத்தியும் விட்சேப சத்தியும் மூலப்பிரகிருதியின் தமோகுண மாத்திரமாய், ஆலமரம் ஆலவித்தி லொடுங்கினாற்போல, இன்னுமொரு சிருஷ்டிக்கு வித்தாக மாயையிலும் அவித்தையிலும் ஒடுங்கும். அந்த மாயையும் அவித்தையும் அதி நுண்மையான (மிகவும் சூக்ஷ்மமான) மூலப்பிரகிருதி யென்று சொல்லப்படும் விந்து தத்துவத்தி லொடுங்கும். அந்த விந்துவும் பாம்பென்கிற பெயர் போய்ப் பழுதையாய் (கயிறாய்)க் கண்டாற்போலத் தனக்கு அதிஷ்டானமான ப்ரஹ்ம சைதன்ய மாத்திரமாக வொடுங்கும். இப்படிப் பொய்யெல்லாம் (தேகாதிப் பிரபஞ்ச மெல்லாம்) மெய்ப் பொருளொன்றாகக் கண்டு அதுவே சுபாவசித்தமாய் நிஜமாக இருக்கின்ற தன் வடிவென (தனது நிஜவடிவென)க் கண்டு தெளிந்து கவலை (தேகாதிப் பிரபஞ்சத்தா லுண்டாகின்ற வருத்தம்) கெட்டிருக்கின்றவனே ஜீவன் முத்தன். இப்படித் தத்துவங்களின் ஒடுக்கஞ் சொல்லப்பட்டது.

தத்துவ வகையைக் கூறல்.

23. இப்படித் தோன்றி யொடுங்குகின்ற தத்துவம் 36. அஃது எங்ஙனமெனின்:—பூதம் 5, ஸ்தூலசரீர தத்துவம் 6, சூட்சுமசரீர தத்துவம் 20, காரண சரீரமான மாயை, அவித்தை ஆக 2, இவற்றிற் பிரதிபிம்பித்த ஈசுவரன் ஜீவன் ஆக 2, இவற்றிற்கெல்லாம் அதிஷ்டான சைதன்யமா யிருக்கின்ற ப்ரஹ்மம் 1, ஆகத் தத்துவம் 36.

போது தத்துவம் இன்னதென்றும், சிறப்புத் தத்துவம் இன்னதென்றும் கூறல்.

24. இவற்றுள்: பூதம் 5, மாயை 1, மாயாப் பிரதிபிம்பரான ஈசுவரன் 1, ப்ரஹ்மம் 1, ஆக இந்த எட்டுஞ் சகலப் பிராணிகளாலும் சமுதாயமாக (பொதுவாக) அநுபவிக்கப்படும். ஏனைய இருபத்தெட்டும் அந்தந்தப் பிராணிகளால் பிரதக்காக (வெவ்வேறாக) அநுபவிக்கப்படும். அஃதெங்ஙனமெனின்:– பிருதிவி தத்துவம் ஒன்று இறக்கில் யாவருக்கும் ஆகார மில்லை; மழை மறுக்கில் யாவருக்குஞ் ஜல மில்லை; தேயு இல்லாதிருந்தால் பாகம் (உணவுப் பொருள்கள் உண்ணுவதற்குப் பக்குவமாதல்) இல்லை; வாயு வியக்க மில்லாவிட்டால் வாடை(வாடைக்காற்று), தென்றல் (தென்றற்காற்று) இல்லை; ஆகாச மிறக்கில் ஒருவருக்கும் அவகாசம் (இடம்) இல்லை. மாயையும் மாயாப்பிரதிபிம்பரு மிறக்கிற் சகல சமயத்திற்குந் தெய்வ மில்லை; பிரஹ்ம மில்லையாயின் ஒருவருக்கும் அறிவில்லை. ஆகையால், இந்த

எட்டும் எல்லாருக்குஞ் சமுதாயமாம். பிரதக் கெங்ஙன மெனின், (தனித்தனியா யநுபவித்தற் குரியவை யென்பது எப்படி யென்றால்):—ஒருவனுக்கு ஸ்தூலசரீர மிறக்கில் யாவருக்கும் ஸ்தூலசரீரம் இறவாதபடியினாலும், சூக்ஷ்ம சரீரத்தி லொருவனுக்கு அங்க வைகல்லியம் (உறுப்புக் குறைவு) வந்தால் யாவருக்கும் வாராதபடியினாலும், முத்தரா யிருக்கின்ற சுகர் வாமதேவர் முதலானோருக்கு அவித்தையும் ஜீவனு மிறந்துபோயிருக்க மற்றையோருக் கெல்லாம் அவித்தையும் ஜீவனு மிறவாதபடியினாலும், இந்த இருபத்தெட்டுத் தத்துவமும் ஒவ்வொருவனுக்கும் பிரதக் கென்பதிற் சந்தேகமே யில்லை.

முப்பத்தாறுந் தத்துவம் ஆத்மவடிவ சிவம் என்பதை விளங்கக் கூறல்.

25. இந்தத் தத்துவம் முப்பத்தாறனுள், எப்போதுந் தானாகவே காணப்படுகிற தத்துவம் 1, எப்போதுந் தனக்கு அன்னியமாகவே காணப்படுகிற தத்துவம் 7, தானாகவும் தனக்கு அன்னியமாகவும் அநுபவிக்கப்படுகிற தத்துவம் 28, அஃதெங்ஙன மெனின்:—அவஸ்தாத்திரய சாக்ஷியா யிருக்கின்ற ப்ரஹ்ம சைதன்யம் எல்லா அவஸ்தைகளினும் தானாகவே விளங்குகையினாலும், மற்றத் தத்துவங்கள் போலத் தனக்கு அந்நியமாக விளங்காமையினாலும், ப்ரஹ்ம சைதன்ய மொன்றுமே தானாக விருக்கின்றது. பஞ்சபூதம், மாயை, மாயாப் பிரதிபிம்பரென்னு மிவ்வேழின் றொழிலான வெட்டு, குத்து, உழவு, (ஈசுவரனுடைய

கிருத்தியமான) பஞ்சகிருத்தியம், தசாவதார முதலானவை யொருகாலுந் தன்னுடைய தொழில்களாகக் காணப்படாமையின் இந்த ஏழு தத்துவமுந் தனக்கு அன்னியமே யல்லாமல் தானாகமாட்டா. மற்ற இருபத்தெட்டுத் தத்துவங்களுள், நான் பிராஹ்மணன், நான் க்ஷத்திரியன், நான் வைசியன், நான் சூத்திரன், நான் பிரஹ்மசாரி (ஆசிரியனிடத்தோதி விரதங் காத்து விவாகமின்றி யிருப்பவன்), நான் கிருகஸ்தன் (இல்லறத்தில் வழுவாது மனையாளோடு கூடி வாழ்பவன்), நான் வானப்பிரஸ்தன் (இல்லறத்தை விட்டு மனையாளோடாயினும் தனித்தாயினும் வனத்திற் சென்று தவஞ் செய்பவன்), நான் சந்நியாசி (முற்றத் துறந்தவன்), நான் ஆண், நான் பெண், நான் கரியன், நான் சிகப்பன், நான் கட்டையன், நான் நெட்டையன், நான் பருத்தேன், நான் இளைத்தேன் என்று தானாக வழங்குகின்ற ஸ்தூல சரீரமாகிய ஆறு தத்துவமும்; மற்றொரு வேளையிலே தனக்குப் புறம்பு (வேறு) பட்டு என் மாடு என் கன்றென்றாற் போல என் சரீரம் பருத்தது, என் சரீரம் இளைத்தது, என் மயிர் நரைத்தது, என் சரீரம் பிறந்து இத்தனை நாள் ஆயிற்று என்று தான் வேறு ஸ்தூல சரீரம் வேறாக வழங்குகின்றபடியினாலும்; நான் கண்டேன், கேட்டேன், தொட்டேன், போகித்தேன், கொடுத்தேன், வாங்கினேன், நடந்தேன், புசித்தேன், சிந்தித்தேன், நிச்சயித்தேன், இந்தப் பஞ்சத்திற்கு (கருப்பிற்கு) ஜீவித்தேனென்று தானாக வழங்குகின்ற சூட்சுமசரீர தத்துவம் இருபதும்; மற்றொரு வேளையிலே தனக்குப் புறம்புபட்டு என் வீடு, என்னுடை

163007

மை என்றாற்போல என் கண், என் காது, என் மூக்கு, என் நாக்கு, என் கை, என் கால், என் மனம், என் புத்தி, என் அகங்காரம், என் சித்தம், என் பிராணனென்று தான் வேறு அவை வேறாக வழங்குகின்றபடியினாலும்; நான் அறியேன் அறிவேனென்று தானாக வழங்குகின்ற அஞ்ஞானமுஞ் சிதாபாசனும்; மற்றொரு வேளையிலே தனக்குப் புறம்புபட்டு என் அஞ்ஞானம், என் ஜீவனென்று வழங்குகின்றபடியினாலும், இந்த இருபத்தெட்டுத் தத்துவமுந் தானாகவுந் தனக்கு அன்னியமாகவும் வழங்கப்படுதல் சித்தம்.

இப்படிச் சொன்ன குருவைப் பார்த்துச் சிஷ்யன் விநயபூர்வகமாய்க் கேட்பதாவது:— சுவாமி! இந்த இருபத்தெட்டுத் தத்துவமும் தானாறு சாட்சியைப்போல ஒருதன்மையாகத் தோற்றவேண்டுமே யல்லாமற் பஞ்சபூதத்தைப் போலத் தனக்கு அன்னியமாகக் காணக் கணக்கி (காரணமி)ல்லை. இந்த இருபத்தெட்டுந் தனக்கு அன்னியமேயானா லெப்போதும் புறம்புபட்டே யிருக்க வேண்டு மல்லாமல் தானாக வழங்கக் கணக்கில்லை. அவை தானுமாய்த் தனக்கு அன்னியமுமா யிருக்கு மென்பது இருட்டாதித்தன் (இருட்டு வடிவ சூரியன்) என்றாற்போல் விருத்தமா மென்கிற சங்கைக்கு (ஆட்சேபத்திற்கு)க் குரு சொல்லுகிறார்: பரமார்த்தமாக (உண்மையாக) த் தானென்கிற தொருவகையும், அத்தியாசத்தி (மயக்கத்தி) னாலே தானென்கின்ற தொருவகையும் ஆக இருவகையு முண்டு.

9Y12MCPS1C